பக்கங்கள்: இருபத்தெட்டு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 தை 19 புதன்கிழமை (02.02.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 068



2 இதய சுத்தியுடன் தீர்வு வேண்டும்



6 அகிம்சைக்கு மரியாதை



14 விடுதலையை வென்றெடுக்கும் சூடான்



19 இருளின் கதவுகளைத் திறந்தவன்



25 முன்னுக்கு வந்தது பாகிஸ்தான்

## நல்லதொரு தீர்வை எட்டுவதற்கு மேற்குநாட்டு அழுத்தம் தொடரும்

### பிரிட்டிஷ், சுவிஸ் குழுவினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 2

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அர்த்த முள்ள தீர்வு எட்டப்பட வேண்டும். அவ்வாறான தொருதீர்வு எட்டப்படு வதன் மூலமே இந்தப் பிரச் சினைகளைத் தீர்க்க முடியும். இலங்கை யின் நல்லதொரு அரசியல் தீர்வு எட்டப்படு வதற்கு மேற்குலக நாடுகள் தொடர்ந்தும் இலங்கை அரசு மீது அழுத் தங் களைப் பிரயோகிக்கும்.

இவ்வாறு யாழ். வந்த பிரிட்டிஷ் மற்றும் சுவிஸ் பிரதிநிதிகள் நேற்றுத்தெரிவித்தனர்.

(28 ஆம் பக்கம் பார்க்க)



## ஐ.தே.கவுக்கு தாவினார்

கொழும்பு, பெப். 02

நாவலப்பிட்டி முன்னாள் நகர சபைத் தலைவர் கெமுனு சுமதி பால உட்பட மூவர் நேற்றுக் காலை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டு கட்சி உறுப்புரிமை அட் டையைப் பெற் றுக் கொண் டனர்.

(28 ஆம் பக்கம் பார்க்க)

### பொன்சேகாவின் விடுதலையை வலியுறுத்தி

## கொழும்பில் சுதந்திர தினத்தன்று மாபெரும் தீவட்டி ஆர்ப்பாட்டம்

கொழும்பு, பெப். 2

சரத் பொன்சேகாவை விடுதலை செய்யக்கோரி இலங்கையின் சுதந் திர தினமான நாளை மறுதினம் 4ஆம் திகதி இரவு 7 மணிக்கு ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பில் தீப்பந்தங்கள் மற்றும் விளக்குகள் சகிதம் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சி எம்.பி. தயாசிறி ஜயசேகர இதுதொடர்பாகக் கூறியவை வருமாறு:-

நாம் வெள்ளைக்காரர்களிடம் இருந்து பெற்ற சுதந்திரம் 2005இல் பறிபோய்விட்டது. 30 வருடங் களாக நாட்டில் குடிகொண்டிருந்த பயங் கர வாதத்தை இல்லா தொழித்த சரத் பொன்சேகா சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில் சுதந்திர தினம் நாளைமறுதினம் 4ஆம் திகதி கொண்டாடப் படுகின்றது.

சுதந்திர தினத்தன்று திருடர்கள், கொலைகாரர் கள், பாதாள உலகத்தினர் (27 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திர தின நிகழ்வு ஐ.தே.கட்சி பகிஷ்கரிக்கும்

கொழும்பு, பெப்.02

அரசு ஏற்பாடு செய்திருக்கும் தேசிய சுதந்திர தின நிகழ்வில் தான் கலந்து கொள்ளப் போவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுத் தெரிவித்தது.

சுதந்திர நிகழ்வைக் கொண்டாடும் அள வுக்கு நாட்டில் இப்போது சுதந்திரம் இல்லை என்றும் அக்கட்சி குற்றஞ் சாட் டியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவல கத் தில் நேற்று இடம்பெற்ற ஊடகவிய லாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் எம்.பி.திஸ்ஸ அத்தநாயக்க இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இந்த மாதம் 4ஆம் திகதி அரசால் ஏற் பாடு செய்யப்பட்டுள்ள தேசிய சுதந்திர தின நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சி கலந்துகொள்ளாது. சுதந்திர தினத்தைக்

(27 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தொடர்ந்து கடும் மழை மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

### நீர்த்தேக்கங்கள், குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயம்

அம்பாறை, பெப்.02

கிழக்கு மாகாணத்தில் மீண்டும் தொடர்ச்சியா கப் பெய்துவரும் அடை மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் மாத்திரம் இது வரை 1,361 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இவர்கள் எட்டு தற்காலிக முகாம்களில் தங்கவைக் கப்பட்டுள்ளனர் என்றும் திருகோணமலை மாவட் டத்தின் அரச அதிபர் மேஜர் ஜெனரல் ஆர்.டி. சில்வா தெரிவித்தார்.

அடைமழையால் நீர்த்தேக்கங்கள், குளங்கள் ஆகியவற்றின் நீர்மட்டம் அதிகரித்து உடைப் பெடுக்கும் அபாயம் இருப்பதால் சில நீர்த்தேக்கங் களின் வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன.

இதனால் கரையோர, தாழ்நிலப் பிரதேசங் களில் வாழும் மக்கள் அவதானத்துடன் இருக்கு மாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதனால் சில பிரதேசங்களுக்கிடையிலான தரைவழிப் போக்கு வரத்து (27 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையருக்கு எகிப்து தடை

கொழும்பு, பெப். 02

தொழில் நிமிர்த்தம் எகிப்து நோக்கிச் செல்லும் இலங்கையர்களைத் தற்காலிக மாக தடைசெய்வதற்கு இலங்கை வெளி நாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அங்கு ஏற்பட்டுள்ள அமைதியின்மை யைக் கருத்தில்கொண்டே இந்த நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது எகிப்தில் தொழில் புரியும் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நடவடிக்கைகளை அங்குள்ள

(27 ஆம் ப்க்கம் பார்க்க)

## 'லங்கா ஈ நியூஸ்' அலுவலகத் தாக்குதல் ஒருவர் கைது

கொழும்பு, பெப். 02

'லங்கா ஈ நியூஸ்' அலுவலகம் மீதான தாக்குதல் தொடர்பாக, சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள் ளார். அதேவேளை, குறித்த சம்பவத் துடன் தொடர்புடைய மற்றுமொரு வரைத் தேடிவருகின்றோம்.

- இப்படி நுகேகொடைப் பிரதேசத் துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எஸ்.பி தேசபத்து தென்னகோன் தெரிவித்தார்.

(27 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - கூட்டமைப்பு பேச்சு நாளை; தீர்வு குறித்து மட்டுமே ஆராய்வு



கொழும்பு, பெப்.02

அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கிடையிலான இரண்டாம் கட்டப் பேச்சுகள் நாளை மாலை 2 மணிக்கு நடைபெறும். இப் பேச்சுகளின்போது இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து மாத்திரமே ஆராயப்படும்.

- இப்படி கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கிடையிலான பேச்சு களின் முதற்சுற்று கடந்த 10ஆம் திகதி நடைபெற்றது தெரிந்ததே.

ஜனாதிபதி செயலகத்தில் நாளை நடைபெறவுள்ள 2ஆம் கட்டப் பேச்சுகளில் கூட்டமைப்பு சார்பில் எம்.பிக்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்தி ரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருடன் ஜனாதிபதி சட்டத்தரணி எஸ்.கனகேஸ்வர னும் கலந்துகொள்வர். (27 ஆம் பக்கம் பார்க்க)



உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021 2229933
தொலைநகல்: 021 2229944
செய்தி/படங்கள்:
021 5679933
021 5679944
விளம்பரம்: 021 5671111
விநியோகம்: 021 5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




யாழ்., வவுனியா மன்னார் மாவட்டங்களில் மழை பெய்வதற்கான சாத்தியம் இருப்பதுடன் ஏனைய மாவட்டங்களில் இடி, மின்னலுடன் கூடிய காலநிலை காணப்படலாம்.

# தமிழருக்கான அதிகாரங்களை இதயசுத்தியுடன் வழங்க வேண்டும்

## பிரிட்டன், சுவிஸ் பிரதிநிதிகளிடம் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், பெப்.2

இலங்கையின் அரசமைப்பில் தமிழருக்கு வழங்கப்படவேண்டிய அதிகாரங்கள் குறித்து ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை ஆட்சியில் இருப்பவர்கள் இதயசுத்தியுடன் பூரணமாக அமுல்படுத்த முன்வரவேண்டும். அத்துடன் தற்போது இயங்குகின்ற மகாண சபைகளை அர்த்தமுள்ள அதிகாரமிக்க மாகாண சபைகளாக இயக்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவினர் தம்மைச் சந்தித்த பிரிட்டன் மற்றும் சுவிஸ் பிரதிநிதிகளிடம் நேற்றுத் தெரிவித்தனர். இந்தச் சந்திப்பு ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது. மக்கள் குழுவினர் தெரிவித்த விடயங்கள் வருமாறு:

✱கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலத்தை எமது மக்களுக்காகப் பிரிட்டிஷ் அரசு அமைத்துத் தந்தமைக்காக நன்றி தெரிவிக்கின்றோம். இருப்பினும் அந்த நிகழ்வுக்கு அந்நாட்டு அதிகாரிகள் எவரையும் அழைக்காதது வருத்தம்தான். மேலும் யாழ்.குடாநாட்டின் ஆறு பாலங்களை அமைப்பதற்கு பிரிட்டன் உதவி செய்துள்ளது. சுவிஸ் அரசினால் மறவன்புலோவில் பல லட்சம் பெறுமதியான 350 வீடுகளும் மாதிரிப் பாடசாலை ஒன்றும் அமைத்துத் தரப்பட்டமைக்கு எமது நன்றிகள்.

✱ கடந்த வருடம் டிசெம்பர் மாதம் முதல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் சம்பவங்கள் மிகுந்த வேதனைக்குரியவை. திடீரென இடம்பெற்றுவருகின்ற கொலைகள், கடத்தல்கள், கொள்ளைகள் என்பன மீண்டும் உள்நாட்டு இடப்பெயர்வை ஏற்படுத்தலாம். குறிப்பாக வன்னியில் இருந்து இங்கு வந்தவர்கள் காணாமல் போயிருக்கிறார்கள். இவ்வளவு பாதுகாப்புமிக்க யாழ்ப்பாணத்தில் இவ்வாறான சம்பங்கள் இடம்பெறுவது தடுக்கப்பட வேண்டும்

**கடந்த டிசெம்பர் மாதம் முதல் யாழ்ப்பாணத்தில் திடீரென இடம்பெற்று வருகின்ற கொலைகள், கடத்தல்கள், கொள்ளைகள் என்பன மீண்டும் உள்நாட்டு இடப்பெயர்வுக்கு வழி வகுக்கலாம்.**

### ஜனநாயகம், சுதந்திரம் இல்லை

✱நாங்கள் தற்போது ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் அனுபவிக்க முடியாத நிலை உள்ளது. பேச்சுச் சுதந்திரம் கூட மறுக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாகத் தேர்தலில் வேட்பாளராக ஒருவர் போட்டியிட நின்றால் அவரது மனைவி பிள்ளைகள் அவரைப் போட்டியிடாமல் தடுத்து விடுகின்றனர். ஏனெனில் அவ்வாறு போட்டியிட்டால் எதிர்மறையான விளைவுகளையே அவர் சந்திக்க நேரிடும் என்பதால் தான். இவ்வாறானதொரு நிலையில்தான் இன்று ஜனநாயகம் இருக்கின்றது.

தற்போது தமிழ் மக்களிடத்தே ஒரு தலைமைத்துவம் இல்லாததொரு நிலையே காணப்படுகின்றது.

✱யாழ்.குடாநாட்டில் பெரும்பான்மையான பிரதேசங்கள் உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் முடக்கப்பட்டுள்ளன. இதனால் பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்ந்து உள்ளனர்.

வன்னி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மீளக் குடியமர்ந்த மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதேவேளை யாழ்.குடாநாட்டின் உயர்பாதுகாப்பு வலயங்களில் மிதிவெடி அகற்றப்படாமையினாலேயே மீள் குடியமர்வு தாமதமடைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நீண்ட காலமாகச் இதனையே சம்பந்தப்பட்டவர்கள் கூறி வருகின்றனர்.

✱உயர் பாதுகாப்பு வலயங்கள் காரணமாக 60 வீத விவசாய நிலங்களும் 30 சதவீதமான மீன்பிடிக் கடல் வளங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் பெருமளவிலானோர் தொழில்களை இழந்துள்ளனர். இதன் காரணமாகவே கல்வி விஸா மூலமாகவோ அல்லது வேறு வழிகளிலோ உங்கள் (பிரிட்டன்) நாட்டுக்குச் செல்ல முற்படுகின்றார்கள் - என்றனர்.

இந்தக் கலந்துரையாடலில் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் சார்பில் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார், பேராசிரியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளை, எஸ்.பரமநாதன், என்.சிவரட்ணம், எஸ்.பி.நேசகுமார் அடிகள், ஆர்.ஜெயசேகரம், ஐ.பூரணசந்திரன், டாக்டர் வை.தியாகராஜா, முன்னாள் குரு முதல்வர் பி.செல்வராசா ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-15)



யாழ். வருகை தந்திருந்த பிரிட்டனின் தெற்காசியப் பிராந்திய ஆலோசகர் டேவிட் ஆஷ்லி, அபிவிருத்திக்கும் அரசியலுக்குமான இரண்டாம் தரச் செயலர் டொமினிக் வில்லியம்ஸ், பிரிட்டன் தூதரக அரசியல் உத்தியோகத்தர் அஷ்மா எற்றிஸ் மற்றும் சுவிஸ் தூதரகத்தைச் சேர்ந்த சஷ்பா மூலர் ஆகியோர் நேற்று உதயன் பணிமனையில், அதன் அலுவலகப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

# படை விட்டோடிகளுக்கு காலக்கெடு விதிப்பு

படைவிட்டோடிகள் எதிர்வரும் 4ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை அனுமதி பெற்று இராணுவத்திலிருந்து விலகுவதற்கான வாய்ப்பளிக்கப்படும் என இராணுவம் அறிவித்துள்ளது.

இராணுவ சேவையிலிருந்தபோது விடுமுறை பெறாமல், கடமைக்குச் சமுகமளிக்கத் தவறிய அதிகாரிகளும் சிப்பாய்களும் உத்தியோகபூர்வமாக அனுமதிபெற்று விலகுவதற்கான ஏற்பாடுகள், சுதந்திரத் தினத்தையொட்டி மேற்கொள்ளப்பட்டுள்ளன என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல தெரிவித்தார். இராணுவத்திலிருந்து தப்பியோடி, கடமைக்கு சமுகமளிக்கத் தவறியவர்கள் மேற்படி காலப்பகுதியில் சம்பந்தப்பட்ட படைப்பிரிவுத் தலைமையகங்களுக்குச் சென்று, அங்கு அமைக்கப்பட்டுள்ள விசேட கருமபீடத்தில் இராணுவத்திலிருந்து விலகுவதற்கான உத்தியோகபூர்வ அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும்- என்றார்.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை ப யாழ்ப்பாணம்
மாசி 01. 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7190.71↑
மிலங்கா(MPI) 7121.28↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 3203.58Mn
பங்குகளின் அளவு(No.) 96.19Mn
வியாபாரம்(No.) 25544
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
ஹுனர்ஸ் அன்ட் கம்பனி 1599.00
நேஷன்ஸ் லங்கா 18.90
எஸ் எம் பி லீசிங் (W) 0.80
கஸ்ரெர்ஸ் 126.10
ஸ்மெடெக் சிலோன் 368.60
குறைவு(Top 5 losers) - விலை Rs.
அஹூ(f)ட் 55.20
இன்டோ மலே 1100.00
லங்கா அலுமினியம் 68.30
குட் கோப் 920.00
சென்றல் இன்டஸ்ரீஸ் 90.50
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# நிகழ்வுகள்

**நூல் அறிமுக விழா**

சிங்கை அரசர்களின் அறுவை மருத்துவம் நூல் அறிமுக விழா இன்று புதன்கிழமை 3 மணிக்கு மருத்துவக்குழுவின் தவிசாளர் கலாநிதி பொன். இராமநாதன் தலைமையில் சுன்னாகம் புகையிரத நிலைய வீதி சிவன் கோயில் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உ.இ.மு. இளவரசர் இராசசேகரன் எழுதிய இந்த நூலின் நயவுரைகளை வைத்திய கலாநிதி இ.கனகலிங்கம், வைத்திய கலாநிதி திருமதி செ.விக்னவேணி, வைத்திய கலாநிதி எச். சிவயோகமலர் ஆகியோர் நிகழ்த்தவுள்ளார்கள். (ற-313,55)

**மீட்டல் வகுப்புகள்**

இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையினால் நடத்தப்படவுள்ள நூலகமும் தகவல் விஞ்ஞானமும் கற்கை நெறிக்கான தரம்-1 மீட்டல் வகுப்புக்கள் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது என இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ். நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி கல்பனா சந்திரசேகர் அறிவித்துள்ளார்.

மேற்படி கற்கை நெறிக்கான பரீட்சைகள் எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

**லூர்து அன்னை ஆலய நவநாள்**

இளவாலை, போயிட்டி புனித லூர்து அன்னை ஆலய நூற்றாண்டு நவநாள் கொண்டாட்டங்கள் இன்று புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளன. பங்குத்தந்தை வண.பிதா ஞனாந்திரன் அடிகளார் தெரிவித்தார்.

•1910 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த ஆலயத்தின் நூற்றாண்டு விழா சிறப்பாக இடம் பெறவுள்ளது.

யாழ்.மற்றும் மன்னார் ஆயர்களான மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை,மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை ஆகியோர் இணைந்து நூற்றாண்டு திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கவுள்ளார்.

நவநாள் திருப்பலிகள் தினமும் மாலை 5மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகி நடைபெறும்.

எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை நற்கருணை விழாவும், மறுநாள் காலை 7 மணிக்கு ஆயர்கள் தலைமையில் கூட்டுத்திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும். (ற-160)

**கௌரவிப்பு**

வவுனியா தெற்குத் தமிழ்ப் பிரதேச சபையில் 18 வருடங்கள் தொடர்ச்சியாகப் பணியாற்றி ஓய்வுபெற்ற இ.திருமேனியின் சேவையைப் பாராட்டி இன்று அவருக்குப் பிரதேசசபை அலுவலகத்தில் விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு ஏற்பாடாகியுள்ளது.

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை புதிய செயலாளர் இ.அறிவரசன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

# ஊடகங்களை அடக்கும் அரசுக்கு தேர்தலில் பாடம் புகட்டவேண்டும்

## ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட தயாசிறி எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, பெப்.02

எதிர்க்கட்சிகளின் கருத்துகளை செவிமடுக்காமல் ஊடகங்களை அடக்கி ஒடுக்கும் இந்த அரசுக்கு உள்ளூராட்சித் தேர்தலில் பாடம் புகட்டவேண்டும்-

- இப்படி ஐ.தே.கட்சி எம்.பி. தயாசிறி ஜயசேகர நேற்று ஊடகவியலாளர்களின் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போது கூறினார்.

'லங்கா ஈ நியூஸ்' இணையதளத்தின் ஊடக நிறுவனம் தீயிட்டு எரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஆர்ப்பாட்டம் நேற்றுப்பகல் கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் நடைபெற்றது. ஊடகவியலாளர்களுடன் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், ஐ.தே.கட்சி எம்.பி. தயாசிறி ஜயசேகர, ஜே.வி.பி. எம்.பிக்களான சுனில் ஹந்துன்நெத்தி, விஜித ஹேரத் மற்றும் அனோமா பொன்சேகா உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக் கையான ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர்.

ஜே.வி.பி. எம்.பி. விஜித ஹேரத் கருத்துத் தெரிவிக்கும் போது -

''ஊடகங்கள் மீதான அடக்குமுறை அதிகரித்து வருகிறது. அரசு இதுகுறித்து அலட்டிக்கொள்வதாகத் தெரிய வில்லை. பல ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டனர். ஊடக நிறுவனங்கள் மீதான தாக் குதல்கள் முன் எப்போதும் இல் லாதவாறு அதிகரித்துள்ளன.

மேற்படி சம்பவங்கள் தொடர்பாக எவரும் கைதுசெய்யப் படவும் இல்லை. நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படவும் இல்லை - என்றார். (ஒ-சி)

# சாரதி அனுமதிப் பத்திர எழுத்துப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப்.02

யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் கடந்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் சாரதி அனுமதிப் பத்திரத்துக்கு விண்ணப்பித்தவர்களுக்கான எழுத்துப் பரீட்சைக்கான திகதிகள் இன்று வழங்கப்படவுள்ளன.

காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை மாவட்ட செயலகத்தின் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ள முடியும்.

இது வரை சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றாத விண்ணப்பதாரிகளும் திகதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

# வல்வை ஒன்றியத்தின் நிர்வாகம் குலநாயகத்திடமிருந்து கைமாறியது

## புதிதாக இளைஞர் அணி கைப்பற்றியது

வல்வெட்டித்துறை நகரத்தின் கல்வி, பொருளாதார மற்றும் நலன்புரிச் செயற்பாடுகள் ஆகியவற்றில் ஈடுபட்டுவரும் வல்வை ஒன்றியத்தின் தலைமை எக்ஸ். குலநாயகத்தின் கையில் இருந்து புதியவர்களிடம் கைமாறியது. நீண்டகாலமாக அவர் வசம் இருந்த நிர்வாகத்தை இளைஞர் அணி ஒன்று கைப்பற்றியுள்ளது.

அவரது தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வி.கவிச்செல்வனின் தலைமையிலான இளைஞர் அணி தம்வசப்படுத்தியது.

புதிய நிர்வாகத்தில் இடம்பெறுவோர் விவரம் வருமாறு:-

தலைவர்:- வி.கவிச்செல்வன், உபதலைவர்:- க.முரளி, செயலாளர்:- த.சிவஞானம், உ. செயலாளர்:- சி. ஜெகப்பிரதாபன், பொருளாளர்:- இ. பிரேம்நாத், செயற்குழு உறுப்பினர்களாக, திருமதி ந.திருநாவுக்கரசு, லெ. கிருபாகரன், இ.புஸ்பராஜா, கா. தர்மகுலசிங்கம், தி.ஜெயதீஸ் (வினோத்), இ.மயூரதன் இந்த ஒன்றியத்தின் போசகர்களாக ந. அனந்தராஜ், ந. சிவரத்தினம், டாக்டர் க. மயிலேறும்பெருமாள் ஆகியோரும் கணக்காய்வாளராக கோ.சற்குணபாலனும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஒ-ஐ)




'லங்கா ஈ நியூஸ்' இணையதள ஊடக நிறுவனம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டமை மற்றும் அரசின் ஊடக அடக்குமுறை ஆகியவற்றை எதிர்த்து நேற்றுப்பகல் கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தை ஐந்து ஊடக அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

# வல்வைவாசி காயம்

வல்வெட்டித்துறைப் பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் லாண்ட் மாஸ்டரில் இருந்து தவறி வீழ்ந்தவர் படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை மயிலியந்தனை பகுதியைச் சேர்ந்த எஸ். சிவகுமார் (வயது-49) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார். (ஒ-319-323)

# ரூ.10 கோடி பெறுமதியான காஸ் தினமும் விரயம்!

கொழும்பு, பெப். 02

சபுகஸ்கந்தை எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து தினமும் 10 கோடி ரூபா பெறுமதியான காஸ் வீண் விரயம் செய்யப்படுகின்றது.

- இவ்வாறு ஐ.தே.கட்சி எம்.பியும் அக்கட்சியின் பொது செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

2005ஆம் ஆண்டு 650 ரூபாவாக விற்கப்பட்ட காஸ் சிலிண்டர் ஒன்றின் விலை இப்போது 1,650 ரூபாவாக விற்கப்படுகின்றது.

உலக சந்தையில் எரி பொருள்களின் விலை அதிகரிப்பே இதற்குக் காரணம் என்று அரசு கூறுகின்றது. ஆனால், உலக சந்தையில் விலை குறையும் போது இங்கு குறைக்கப்படுவதில்லை.

சபுகஸ்கந்தை எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தில் தினமும் 100 தொன் எடையுடைய காஸ் வீண் விரயம் செய்யப்படுகின்றது. இதன் பெறுமதி சுமார் 10 கோடி ஆகும்.

இவ்வாறு வீண்விரயத்தை செய்துகொண்டே பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டத்தை எதிர்நோக்குகின் றது என்று அரசு கூறுகின்றது. ஆனால் இந்த விரயத்தைத் தடுக்க அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த விரயத்தை தடுத்தால் காஸ் சிலிண்டர் ஒன்றின் விலையை 1,200 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியும். இப்போது அதிகம் நட்டம் பெறும் நிறுவனங்களில் பெற்றோலிய கூட்டுத்தாபனம்தான் முன்னிலையில் உள்ளது.

இந்த நிறுவனம் இவ்வாறு நட்டத்தில் இயங்குகின்ற நிலையில் 'தேசத்தின் மகுடம்' நிகழ்ச்சிக்கு இந்நிறுவனம் ஒரு கோடியே 60 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது. நிறுவனத்தில் உள்ள உயர் அதிகாரிகளுக்கு புதிய புதிய வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. ஆனால், ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கப் பணம் இல்லை.

அநேகமான நாடுகள் பெற்றோலியத்தின் மூலம்தான் அதிக இலாபம் அடைகின்றன. ஆனால், இங்கு அது தலைகீழாக உள்ளது. ஊழல், மோசடி மற்றும் நிர்வாகச் சீர்கேடு போன்றவையே இதற்குக் காரணம் - என்றார். (ஒ-சி)

# ஆடம்பர வசதிகளுடன் 26 அடி நீள கார்கள்

## விரைவில் கொழும்பு வீதிகளில் காணலாம்



கொழும்பு, பெப். 02

உலகின் மிகவும் ஆடம்பரமான, 13 பேர் பயணம் செய்யக் கூடிய, மதுபானம் அருந்தும் வசதியுடனான 26 அடி நீளமான 12 கார்கள் இன்னும் சில தினங்களில் இலங்கை வீதிகளில் வலம் வரும்.

இவற்றில் இரண்டு கார்கள் ஏற்கனவே இலங்கை வந்தடைந்துள்ளன. மேலும், 10 கார்கள் இம்மாத இறுதிக்குள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைய உள்ளன என அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரச உயர்மட்ட ஆதரவாளர்களின் பாவனைக்காக இந்தக் கார்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-சி)

# சுதந்திர தினத்தை முன்னிட்டு கதிர்காமம் பகுதி விழாக்கோலம்

கொழும்பு, பெப். 02

இலங்கையின் 63ஆவது சுதந்திர தின நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கதிர்காமம், கந்துசிறிந்துபுர பிரதேசத்தில் கோலாகலமாக நடைபெற உள்ளது. இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகளை பொது நிர்வாக அமைச்சு மேற்கொண்டு வருகின்றது. சுதந்திர தின நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட உரையாற்ற உள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவினால் நடத்தப்பட்ட கிராம எழுச்சி (கம் உதாவ) நிகழ்வுகள் இடம்பெற்ற கந்துசிறிந்துபுர பிரதேசத்திலேயே சுதந்திர தின நிகழ்வுகள் இடம்பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுதந்திர தின நிகழ்வின் போது ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்தும் முகமாக 21 வேட்டுக்கள் தீர்க்கப்படும். இதனைத் தொடர்ந்து முப்படையினரின் அணிவகுப்பு மரியாதை நடைபெறும்.

ஆயிரத்து 500 இராணுவத்தினர், 300 விமானப் படையினர், கடற்படையினர், பொலிஸார் ஆகியோரின் பங்களிப்புடன் 250 சிவில் பாதுகாப்புப் படையினரின் அணிவகுப்பு மரியாதை நடைபெறும்.

இந்த நிகழ்வுகளை முன்னிட்டு அப்பகுதியில் உள்ள பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்படவுள்ளன. பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுவதற்காக வரும் பாதுகாப்புப் பிரிவினர் தங்குவதற்காக அந்தப் பாடசாலைகள் பயன்படுத்தப்படும்.

சுதந்திர தின நிகழ்வுகளில் தென்மாகாண பாடசாலைகளின் மாணவ, மாணவிகளின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. அத்துடன், எதிர்வரும் 3ஆம் திகதி இரவு கதிர்காமம் சூரன்கோட்டை ரஜமஹா விகாரையில் பிரித் வைபவம் இடம்பெறும்.

சுதந்திர தின நிகழ்வுகளில் கலந்துகொள்பவர்களுக்கு சுத்தமான குடிதண்ணீர், சுகாதார வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்திக்கொடுக்க சுகாதார அதிகாரிகள் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் 'தேசத்துக்கு மகுடம்' கண்காட்சி இந்தத் தடவை மொனராகலை, புத்தல பகுதிகளில் நடைபெறும். 'தேசத்துக்கு மகுடம்' கண்காட்சி எதிர்வரும் 4ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடைபெறும். (ஒ-சி)

# டிஜிட்டல் செத்தவீடு!

## கோணல் வரிகள்

ஓடுகாலி

நேரம் அகாலத்தைக் கடந்திருந்தது. இன்னும் சிலமணித்தியாலங்களில் பொழுது பொலபொலவென விடிந்துவிடும். ஆனாலும் சூரியனின் கதிர்கள் பூமியைத் தொடுவதற்கிடையில் வேலை முடிந்துவிட வேண்டும் என்ற அவசரத்துடன் அந்த மோட்டார் சைக்கிள் பனியைக் குடித்துக்கொண்டு விரைந்து கொண்டிருந்தது.

அரைமணித்தியாலப் பயணத்தின் பின் ஸ்ரூடியோ ஒன்றின் முன்னால் அந்தமோட்டார் சைக்கிள் தன் செயற்பாட்டை நிறுத்திக்கொள்ள, ஸ்ரூடியோவின் கதவு தட்டப்பட்டது.

கொலைகளும் கொள்ளைகளும் மலிந்துவிட்ட சூழலில் நள்ளிரவு தாண்டிய பின்னர், இருட்டு வேளையில் கதவு பலமாகத் தட்டப்பட்டதால் அதற்குள் உறங்கிக் கொண்டிருந்த பணியாளர்கள் இருவருக்கும் ஈரற்குலை ஒருநொடியில் தீய்ந்தே போய்விட்டது. நடப்பது நடக்கட்டும் என்ற நினைப்போடு எச்சரிக்கையுடன் கதவைத் திறந்தனர்.

வெளியே - முகத்தில் பதற்றத்தை ஏந்தியபடி இருவர் நின்றிருந்தனர்.

''அண்ணை! ஆரண்ணை நீங்கள்? இந்த நேரத்தில வந்திருக்கிறீங்கள்?'' குரலில் கொஞ்சம் உஷாரை ஏற்றிக் கொண்டு பணியாளர்களிடமிருந்து கேள்வியெழுந்தது.

ஒரு அவசரமான அலுவல். அதுவும் விடியிறதுக்கிடையில முடிக்கவேணும் வந்தவர்கள் பொய் சொல்லவில்லையென்பதை அவர்களது கண்களே சொல்லிநின்றன. பணியாளர்களுக்கு இப்போது பயம் பறந்தே போய்விட்டது.

''அப்பிடியென்ன அவசர அலுவல்? அண்ணை! நாங்கள் ஓவர்நைட் வேலை செய்திட்டு கொஞ்சம் முந்தித்தான் படுத்தனாங்கள். என்ன அலுவல் எண்டாலும் விடிய வாங்கோவன்'' கூறிக் கொண்டே கதவைச் சாத்த முயன்றனர் பணியாளர்கள்.

ஆனால் வந்தவர்கள் ஒற்றைக்காலில் நின்றார்கள்.

''அண்ணை! 2 டிஜிட்டல் பனர் அடிக்கவேணும். காசு எவ்வளவு எண்டாலும் பரவாயில்லை. விடியிறதுக் கிடையில கட்ட வேணும்.'' ''பனரோ? என்னண்ணை? விளையாடுறிங்களோ? அது எவ்வளவு மினக்கெடு எண்டு தெரியுமே?'' பணியாளர்கள் ஏதாவது சாக்குப்போக்குச்சொல்லி அவர்களைக் கலைத்துவிட்டுத் தமது நித்திரையைத் தொடர முயற்சித்தனர்.

அப்படியிருந்தும் வந்தவர்கள் விடுவதாயில்லை. நீண்டநேரக் கெஞ்சுதலுக்குப் பிறகு, தமது நித்திரையைத் தியாகம் செய்யப் பணியாளர்கள் முடிவு செய்தனர். பின்னர் காரியங்கள் மளமளவென்று நடந்தேறின.

கிட்டத்தட்ட ஒருமணித்தியால மினக்கெடலின் பின்னர் டிஜிட்டல் பனரோடு வந்தவர்கள் வாயெல்லாம் பல்லாக விரைந்து சென்றனர். பணியாளர்களும் பொக்கற் நிறைந்த மகிழ்வோடு இரண்டாம் கட்ட நித்திரைக்குச் சென்றனர்.

அது சரி. இவ்வளவு அவசரமாக அவர்கள் செய்து கொண்டு செல்லும் பனர் என்ன தெரியுமா?

வேறொன்றுமில்லை. ஒரு கண்ணீர் அஞ்சலிதான். அதுவும் நான்கு நாள்களுக்கு முன்னர் இறந்து, விடிந்தவுடன் சுடலையில் தகனமாகப் போகும் ஒரு முதியவருக்கான கண்ணீர் அஞ்சலி. நேற்று வரைக்கும் அந்த முதியவரின் சடலம் கருவாடு காயவைத்தது போல, வெளிநாட்டில் இருந்து மகன் வருவதற்காகக் காத்திருந்தபோது கூட இவர்களுக்கு இப்படி பனர் வைக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்ததில்லை.

வெளிநாட்டு மகன் வந்தவுடன், ஊரிலிருந்த இவர்களுக்குப் போட்டியான சனசமூக நிலையக்காரர் முதல் நாள் மாலைக் கருக்கலில் இப்படியான ஒரு பனரை கட்டிவிட்டார்கள். அவர்கள் செய்கின்ற போது சும்மாயிருந்தால் இவர்களுக்கு அவமானமல்லவா? எனவே களத்தில் இறங்கி, காசு சேர்த்து விடியப்புறமாக டிஜிட்டல் பனரையும் செய்து, இதோ கட்டித் தொங்கவும் விட்டுவிட்டார்கள்.

மரணவீடுகளில் இப்போதெல்லாம் இவ்வாறன டிஜிட்டல் பனர் செய்து, தொங்க விடுவது ஒருபஷனாகவே மாறத் தொடங்கிவிட்டது.

சடலத்தைக் கொண்டு செல்வதற்கு சவப்பெட்டி எடுக்கிறார்களோ இல்லையோ மறக்காமல், இப்படியான டிஜிட்டல் பனர்களைச் செய்து ஊரெல்லாம் தொங்க விடுவதற்கு மட்டும் எவரும் தயங்குவதில்லை. இதன்மூலம் தமது பணபலத்தையும் படோடாபத்தையும் காட்டுவதனைப் பலரும் பெருமையாகவும் கருதத் தொடங்கிவிட்டார்கள். போதாக்குறைக்கு அண்மையில் ஒரு மரணச்சடங்கில் ஒப்பாரி வைத்து அழுவதைக்கூட ஒலிபெருக்கி மூலம் ஊரெங்கும் கேட்கும்படி செய்தார்கள். இவர்களிடத்தே ஒரு சின்ன வேண்டுதல்.

உங்கள் உறவுகள் உயிருடன் இருக்கும்போது உங்கள் அன்பைக் காட்டுங்கள்.

இருக்கும்போது அவர்களிடத்தே கஞ்சத்தனமாக நடந்துவிட்டு, இறந்த பின்னர் பனர் கட்டுவதாலோ, ஒப்பாரியை ஒலிபரப்புவதாலோ இறந்தவர்கள் அகமகிழப்போவதில்லை. மாறாக மற்றவர்களின் கேலிப்பார்வைதான் உங்களை நோக்கி நெருங்கி வரும்.


### தவறிவிட்டது

செல்வபுரம் - உரும்பிராய் தெற்கு, உரும்பிராய் எனும் முகவரியைச் சேர்ந்த விமலராசா நிசாந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டை (892861625V) கடந்த (29.01.2011) அன்று யாழ். போதனா வைத்தியசாலையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழுள்ள தொலைபேசி இல. உடன் தொடர்பு கொள்ளவும்.

T.P0774811678, 0778996817

### கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட தரமான NO.1 பிறீமா புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (100/=) 3.2.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

- சுட்டிபாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
- சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
- நெல்லியடி பல்பொருள் விற்பனை, நெல்லியடி- 0774656377
- முகுந்தன், பருத்தித்துறை - 0771392593
- துர்க்காபாம், சுன்னாகம் - 0779346599

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே. 0212226944 (109816)


### ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 . 08 . 1918

மறைவு 02 . 02 . 2005



**திருமதி கமலாம்பிகை குமாரசுவாமி**

''முடிவில்லாத கடலின்
முடிவில்லாத கரையில்
ஒருமணல் துகளே
நாமும் நாம் வாழும் உலகும்''

என நான் நினைத்திருந்தேன்
ஆனால், என் கனவில் வந்து
அம்மா கூறுகிறார்

''நானே அந்த முடிவில்லாத கடல்
எல்லா உலகங்களும் எனது கரையின்
மணல் துகளே''

பொன்னையா வளவு,
பொன்னையா
ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

என்றும் உங்கள் நினைவுடன்,
மக்கள், மருமக்கள், உடன்பிறந்தோர்,
மைத்துனர், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
தகவல்: கு. உதயகுமார் மகன்.

### அபிராமிப்பட்டர் விழா

யாழ்ப்பாணம், பெப்.02

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் அபிராமிப் பட்டர் விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நயினாதீவு நாக பூஷணி அம்மன் ஆலய அமுதசுரபி அன்னதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து கலாசார உத்தியோகத்தர் எஸ். உதயபாலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நயினாதீவு சமூக, பொருளாதார, கல்வி, கலாசார அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.பரமலிங்கம், சிறப்பு விருந்தினராக அமுதசுரபி அன்னதான சபைச் செயலர் கு.சாந்தலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் ''அபிராமி என்றும் அரு மருந்து'' என்னும் தலைப்பில் சொற்பொழிவும் இடம்பெறும். (ஒ-10)

### மகாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், பெப்.02

மாவை, கொல்லங்கலட்டி, கேணிக்கரை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எண்ணெய் சாத்துதல் நிகழ்வு இடம்பெறும்.

(ற-313)


### சாரதி தேவை

ரக்ரர் சாரதி தேவை. சாரதி அனுமதிப்பத்திரத்துடனும் நற்சான்றிதழுடனும் யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

(110222) தொடர்பு : 077 6672713

### உடனடி வேலை வாய்ப்பு

One World in Innovage சர்வதேச கம்பனிக்கு முகாமைத்துவ பயிற்சிக்காக பின்வருவோர் தேவை

(Ass.manager, Supervisor, Administration) இவ்வாறான வேலையாள்கள் தேவை, 6 மாத பயிற்சி, பயிற்சியின்போது 15000/= - 25000/= வரை பெறமுடியும். தங்குமிட வசதி இலவசம், கிளிநொச்சி, முல்லைத்தீவு பயிற்சியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தகைமை - G.C.E O/L, சாதாரண அறிவு

இடம் - யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு முன்னால் உள்ள காரியாலயத்தில்

காலம் - எதிர்வரும் (03.02.2011) - (04.02.2011)

நேரம் - மு.ப 9.30 தொடக்கம் ந. ப. 12.00 வரை

(110206) தொடர்பு 0771363797

### விற்பனை ஆலோசகர்கள் தேவை

பிரபல வங்கியின் உப நிறுவனமான காப்புறுதிக் கம்பனி ஒன்றுக்கு விற்பனை ஆலோசகர்கள் தேவைப்படுகின்றார்கள். விரும்பும் பட்சத்தில் தகுதி உடையவர்கள் விண்ணப்பிக்கவும். ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**தகைமைகள்:**

1.G.C.E O/L 6 பாடம் சித்தியடைந்திருத்தல் அவசியம். (கணிதம் உட்பட)

2. இத்துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உங்கள் சுயவிரைக் கோவையுடன் தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பே. இலக்கத்தையும் குறிப்பிடவும்.

குறிப்பு: உங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 10.02.2011இக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

**விளம்பர இல - 4115**
**மே/பா உதயன்**
**561, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(c/575530)


### 31ஆவது நாள் நினைவு தினம்

**அமரர் ஞானப்பிரகாசம் பிறிற்றோ**



தோற்றம்: 19.07.1920

மறைவு: 03.01.2011

பப்பா பப்பா என்று
உம் உறவுகள் தேடுதய்யா
நெஞ்சமது வாட்டுது பப்பா உம் பிரிவால்,
எம் ஈரவிழி காயாது என்றாலும்
நீ மறுபடியும் பிறந்து
வருவாயோ எம் மண்ணில்?

குடும்பத் தலைவரின் மரணச்செய்தி கேட்டு உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் யா/ திருக்குடும்பக் கன்னியர்மடம், யா/செ. அன்ரனீஸ் பாசையூர் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் தொலைபேசியில் ஆறுதல் கூறியவர்களுக் கண்ணீர் அஞ்சலி, மலர் வளையம் செலுத்தியோருக்கும் எமது இதய நன்றிகள். இவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக 02.02.2011 மு.ப 11 மணியளவில் பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக மன்றாடவும்.

6/7, விதானையார் வீதி,
ஈச்சமோட்டை. (c/575532)

குடும்பத்தினர்.

உதயன்

# நிவாரண நடவடிக்கைகளை கண்காணிப்பதும் அவசியம்

உணவுப் பொதியொன்றை வாயில் கவ்விக்கொண்டு வருகிறது ஒரு நாய். பொதியை கீழே வைத்துச் சாப்பிட முயல்கையில் அதைப் பார்த்துவிட்ட காகம் ஒன்று கரைந்தபடி நாயின் வாலில் வாயால் பிடித்து இழுக்கின்றது. கோபத்துடன் நாய் திரும்புகையில் ஏனைய காகங்கள் உணவில் பெரும்பகுதியை அபகரித்து சென்றுவிடுகின்றன. அவைகளைத் துரத்த நாய் எத்தனிக்கும்போது எஞ்சியிருக்கும் உணவையும் மற்ற காகங்கள் அள்ளிக்கொண்டுபோய்விடுகின்றன.

இதனைத்தான், ''எத்தித்திருடும் அந்த காக்கை, அதற்கு இரக்கப்பட வேண்டும் பாப்பா'' என்று பாடினார் மகாகவி பாரதி.

நாயை ஏமாற்றிக் கெட்டித்தனமாக உணவைத்திருடிச்சென்ற காக்கையைவிட மனிதர்கள் - ஆறு அறிவுள்ள மனிதர்கள் மிகக் கேவலமாக நடந்து கொள்வதைப் பார்க்கையில் இவர்களுக்கெல்லாம் இதயம் என்ற ஒன்றே இல்லையா என்று எண்ணத்தோன்றுகின்றது.

மனிதர்கள் இறைச்சி சாப்பிடுவது ஒன்றும் புதியவிடயம் அல்ல - ஆனால் அண்மையில் மல்லாகத்தில் நடந்துள்ள ஒரு சம்பவம் இவர்களும் மனிதர்கள்தானா என்று எண்ணவைக்கின்றது.

நமது சமயங்கள், சமய நூல்கள், ஞானிகள், தெய்வீக மனிதர்கள் ஆன்மிக சிந்தனையாளர்கள் எல்லோரும் கருணை, தர்மம், இரக்கம், அன்பு, அருள் என்று யுகயுகாந்திரங்களாக போதித்துவந்துள்ளார்கள். அவைகள் எல்லாம் வீண் விரயமோ என்று சிந்திக்கவைத்தது அந்த சம்பவம்.

அது என்ன சம்பவம் என்று கேட்க தோன்றுகிறதல்லவா?

ஆம், மல்லாகத்தில் ஒருவர் வீட்டில் வளர்க்கப்பட்ட ஆட்டுக்கிடாய்க்கு நேர்ந்த கதியைத்தான் கூறுகின்றோம்.

இறைச்சி சாப்பிடவிருப்பம் என்றால் அதனை முறைப்படி செய்திருக்கவேண்டும். நாட்டின் சட்டங்களும் நடைமுறைகளும் தடுக்கவில்லை அதனை. ஆனால் என்ன செய்திருக்கிறார்கள்?

ஆடு உயிருடன் நிற்க அதன் பின்னங்கால் தசையை மட்டும் அறுத்தெடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள், ஈனம், இரக்கமற்ற மனிதர்கள். அந்த ஆடு இரவோடு இரவாக துடியாகத்துடித்து கத்தியபடி இரத்தப் பெருக்கினால் இறந்துபோனதாகத் தகவல்.

இது என்ன, இதைவிட கொடூரமாக மனிதர்கள் கொல்லப்படவில்லையா? என்றும் கேள்வி எழுப்பப்படலாம். உண்மைதான், மனித நேயம், மனித உரிமை, மனிதாபிமானம் என்பதெல்லாம் பழங்கதையாகிக் கொண்டுவரும் காலம் இது.

எரியும் வீட்டில் பிடுங்கியது லாபம் என்பதைக் குறிப்பதாக அம்பாறையில் ஒருசம்பவம் நிகழ்ந்திருக்கிறது. சாய்ந்தமருதுப் பிரதேசத்தில் அகில இலங்கை ஜம் இய்யதுல் உலாமா சபையினால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருள்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக் காக பொதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகையில் அங்கு அத்துமீறி பிரவேசித்த ஒரு கும்பல் நிவாரணப்பொருள்களை அள்ளிச்சென்றுள்ளது. அதேபோல் சாய்ந்தமருதுக் கிராமத்தில் அரச சார்பற்ற ஒரு நிறுவனத்தால் வழங்கப்படவிருந்த நிவாரணப் பொருள்களும் கொள்ளையடிக்கப்படவிருந்த வேளையில் அந்தப்பொருள்கள் வேறு ஒரு பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக கூறப்படுகின்றது.

மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு அவதிப்படும் மக்களுக்கு வழங்கப்படும் பொருள்களை கொள்ளையடிப்பதென்பது கொடூரமான தொருசெயலாகும். தங்களுக்கும் நிவாரணம் தேவையெனில் அதனை முறையாகக் கேட்டுப்பெறவேண்டும். அதுமட்டுமல்ல நிவாரணப்பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கிராம சேவகர் ஒருவர் தாக்கப்பட்டதாகவும், அதனால் அப்பகுதியில் நிவாரணப் பணிகளில் ஈடுபட எவரும் முன்வரத்தயங்குகிறார்கள் என்றும் செய்திகள் கூறுகின்றன. அத்தோடு கிழக்கிலங்கையில் ஏனைய எல்லா பகுதிகளுக்கும் நிவாரணப்பொருள்கள் அனுப்பப்பட்டுக்கொண்டிருக்கும் அதேவேளை சாய்ந்தமருதுப் பகுதிக்குமட்டும் நிவாரணப் பொருள்கள் இப்போது அனுப்பப்படுவதில்லை என்றும் புகார் எழுந்துள்ளது.

கல்முனைப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணங்களில் குடும்ப அங்கத்தவர்களின் தொகையை சிலருக்கு குறைத்து, நிவாரணம் வழங்கப்பட்டதாக குறை கூறப்பட்டுள்ளது. இந்த குறைபாட்டுக்கு கிராம அலுவலர்களின் செயற்பாடுகளே காரணம் என்றும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இந்த நிலைமைகள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் குறித்து அதிகாரிகள் உடனுக்குடன் விசாரணைகளை நடத்தி துன்பத்துக்குள்ளான மக்களுக்கு ஆறுதல் அளிப்பது அவசியம்.

இதற்கிடையில் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு பொலனறுவை, அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் கடும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பான தகவல்களை பெற்று பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சும் அனர்த்தமுகாமைத்துவ அமைச்சும் நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. வெள்ளத்தினால் இப்பகுதிகளில் அதிகளவு பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடுகள் வழங்கவும் வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுக்கவும் அரசு நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிகிறது.

இது அவசியமும், அவசரமுமான நடவடிக்கை என்பதை கூறத் தேவையில்லை. ஆனால் உண்மையாகப் பாதிக்கப்பட்ட மக்கள் அரசின் இந்த நடவடிக்கைகளால் பயன்பெறவேண்டும். இடையில் நிற்பவர்களும், அதிகாரிகளின் அடிவருடிகளும் பாதிக்கப்பட்ட மக்களின் வயிற்றில் அடிக்காமல் பார்த்துக்கொள்வதற்கு கண்காணிப்பையும் அரசு பலப்படுத்தவேண்டும் என்று வற்புறுத்துகின்றோம்

# வேலையில்லாப் பிரச்சினையில் தென்மாகாணம் முதல் இடம்

## குறைந்த தனிநபர் வருமானம் வடக்கில் தான்

கொழும்பு, பெப்.2

வேலைவாய்பற்ற நிலை இலங்கையின் தென் மாகாணத்திலேயே அதிகம் நிலவுவதாக நிதியமைச்சினால் அண்மையில் வெளிப்படுத்தப்பட்ட ஆய்வறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் தென் மாகாணத்தின் வேலைவாய்ப்புப் பற்றாக்குறை நூற்றுக்கு 9.4 வீதமாக மாற்றமின்றி உள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தென்மாகாணத்தையடுத்து கிழக்கு மாகாணத்திலேயே வேலை வாய்ப்பற்ற நிலை அதிகம் காணப்படுகிறது. அது, நூற்றுக்கு 7.7 வீதமாகும்.

மேல் மாகாணத்தில் வேலை வாய்ப்புப் பற்றாக்குறை விகிதாசாரம் நூற்றுக்கு 6.5 வீதமாக உள்ளது. 2005 ஆம் ஆண்டில் அந்த விகிதாசாரம் 6.6 வீதமானதாகும். இதற்கமைய நோக்கும் போது கடந்த ஐந்தாண்டு காலத்தில் மேல்மாகாணத்தின் வேலைவாய்ப்புப் பற்றாக்குறை ஒரு தசம வீதத்தால் மட்டுமே குறைந்துள்ளது.

நிதியமைச்சினால் வெளிப்படுத்தப்பட்ட அந்த ஆய்வறிக்கையில்:

மாகாண மட்டத்தில் அந்தந்த மாகாணங்களில் வாழும் மக்களின் தனிநபர் வருமான நிலைப்பாடும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய உச்ச தனிநபர் வருமானம் மேல் மாகாணத்திலேயே அதிகமாக உள்ளது. மேல் மாகாணத்தின் வருடாந்த தனிநபர் வருமானம் 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய்களாகும். தனிநபர் வருமானத்தை ஈட்டிக்கொள்வதில் இரண்டாம் இடத்தை வகிப்பது தென்மேல் மாகாணம். அதன் தனிநபர் வருமானம் இரண்டு லட்சத்து பதின்மூவாயிரம் ரூபாவாகும்.

இலங்கையில் குறைந்த தனிநபர் வருமானத்தை ஈட்டும் மாகாணமாக வட மாகாணமே காட்டப்பட்டுள்ளது. அதன் தனிநபர் வருமானம் ஆண்டொன்றுக்கு ஒரு லட்சத்து 34 ஆயிரம் ரூபாவாகும்.

(த-22)

# ஓர் ஓட்டோவில் இனிமேல் மூன்று மாணவர் மாத்திரமே

கொழும்பு, பெப்.2

ஓட்டோ ஒன்றில் அதிகபட்சமாக பாடசாலை மாணவர்கள் மூவரை மாத்திரமே ஏற்றிச் செல்ல முடியுமென வரையறை விதிப்பதற்கும், பாதுகாப்புக் கதவுகள் இன்றி பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றிச் செல்வதைத் தவிர்ப்பதற்கும் எதிர்வரும் நாள்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவரும் சட்டத்தரணியுமான திருமதி அனோமா திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றிச் செல்லும் சேவையில் ஈடுபட்டுள்ள ஓட்டோ சாரதிகள் தேசிய சிறுவர் பாது காப்பு அதிகார சபையின் கீழ் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தற்போது பாடசாலைச் சேவையில் ஈடுபடும் வான்கள் மாத்திரமே பதிவுசெய்யப்பட்டுவருவதாகவும் எதிர் காலத்தில் ஓட்டோக்களையும் பதிவுசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் ஓட்டோக்கள் பதிவு செய்யப்பட்ட பின் அதனைச் சட்டமாக நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதெனவும் தெரிவித்துள்ள அவர் அதிகரித்து வரும் ஓட்டோ விபத்துக்களே இத்தகைய நடவடிக்கைக் குக் காரணமாகியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

# பால்மாக்களின் விலை குறைப்பால் அரசுக்கு ரூ. 500 மில்லியன் இழப்பு

கொழும்பு, பெப் 02

பால்மா வகைகள் இறக்குமதி செய்யப்படும்போது ஒரு கிலோ கிராம் பால்மாவுக்கு அறவிடப்பட்டுவந்த இறக்குமதி வரி 22 ரூபாவால் குறைக்கப்பட்டதன் காரணமாக மாதமொன்றுக்கு 500 மில்லியன் ரூபா அரசுக்கு இழப்பேற்படுவதாக திறைசேரி தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் 1 கிலோ பால்மாவுக்கு அறவிடப்பட்டுவந்த வரி அறவீடு 28 ரூபா வரை குறைக்கப்பட் டுள்ளதாகவும், உலகச் சந்தையில் பால் மாக்களின் விலை உயர்வடைந்துள் ளதையடுத்து உள்ளூர் சந்தையில் பால்மாக்களின் விலையைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் திறைசோரியின் அரச வர்த்தகத் திணைக் களத்தின் பணிப்பாளர் நாயகம் எஸ்.ஆர். ஆட்டிகல ஊடகமொன்றுக்குத் தெரிவித் துள்ளார்.

மேலும், பால் மா நிறுவனங்களால் மாதமொன்றுக்கு 2,500 மெற்றிக்தொன் வரையிலான பால்மா வகைகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுவதாகவும் இதற்கமைய மேற் குறிப்பிட்ட வருமானம் அரசுக்கு இல்லாது போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(த-22)

# 2 ½ கோடி செலவில் நடத்தப்பட்ட அமைச்சரின் புதல்வியின் திருமணம்

கொழும்பு, பெப்.2

இலங்கை தபால் மற்றும் மின் தொலைத் தொடர்பு அமைச்சரான ஜீவன் குமாரதுங்கவின் புதல்வியின் திருமணச் செலவாக 21/2கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை செலவு செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாளாந்தம் பொருள்களின் விலை மட்டங்கள் உயர்ந்து செல்வதன் காரணமாக நாட்டு மக்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு செல்ல இயலாது கஷ்டப்படும் நிலையில் அமைச்சரின் புதல்வியின் திருமணச் செலவு தேவைதானா என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பத்தர முல்லையிலுள்ள 'வோட்டர்ஸ் எஜ்' ஆடம்பர ஹோட்டலில் நடைபெற்ற இந்தத் திருமண வைபவத்தின் அழைப்பிதழ்கள் தொடக்கம் வருகைதந்த விருந்தினர்களுக்கு வழங்கப்பட்ட பரிசுப் பொருள்கள் வரை, மணமகளின் ஆடம்பர தங்க நகைகள் வரை செலவு செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு லட்சத்து 75 ஆயிரம் வரையிலான சம்பளம் பெறும் ஓர் அமைச்சரின் வருமானத்தில் எவ்வாறு கோடிக்கணக் கில் செலவு செய்து திருமணத்தை நடத்த முடியும் என மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

(த)

## புல்லுக்குளத்தில் கழிவு அகற்றல்

வண்ணை,பெப்.02

யாழ்.புல்லுக்குளத்தில் வீசப் பட்டிருந்த கழிவுப் பொருள்கள் அகற்றப்பட்டு வருகின்றன.

முன்னதாகக் குளத்தை ஆக்கிர மித்து வளர்ந்திருந்த ஆகாயத் தாமரைப் பூண்டுகள் மற்றும் தாமரைச் செடிகளை பெரும் பணச் செலவில் யாழ்.மாநகர சபை அகற்றி இருந்தது.

அதேவேளை புல்லுக்குளத் தைச் சுற்றி அமைக்கப்பட் டுள்ள சிமெந்தி இருக்கைகளில் ஒன்றை விசமிகள் சேதப்படுத் தியும் இருக்கின்றனர்.

புல்லுக் குளத்தைத் துப்புரவு செய்து அப்பகுதியை உல்லாசப் பயணிகளைக் கவரும் விதத்தில் அழகுபடுத்தும் முயற்சிகள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றதும் குறிப்பிடத்தக்கது. (த-160)

# பிறப்பு,இறப்புச் சான்றிதழ்களின் கணினிப் பிரதி மார்ச் மாதம் முதல்

யாழ்ப்பாணம்,பெப்.02

யாழ். குடாநாட்டிலுள்ள அனைத்துப் பிரதேசங்களிலும் எதிர்வரும் மார்ச் மாதம்முதல் பிறப்பு, இறப்பு பதிவுகளின் கணினிப் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ்.செய லக வட்டாரங்கள் தெரிவித் தன.

இது தொடர்பாக அந்த வட் டாரங்கள்மேலும் தெரிவித் தவை வருமாறு -

அனைத்துப் பிரதேச செயல கங்களிலும் இறப்பு, பிறப்பு பதிவுகள் கணினி மயப்படுத் தும் நடவடிக்கைகள் யாவும் தற்போது பூர்த்தியடைந்துள் ளன.

கணினி மயப்படுத்தப்பட்ட விவரங்களை மீள்பரிசீலனை செய்யும் நடவடிக்கைகள் தற் போது துரிதமாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. அந்தப் பணி களும் விரைவில் முடிவடை யும்.

பெரும்பாலும் எதிர்வரும் மார்ச் மாதம் முதல் வாரத்தில் பிறப்பு, இறப்பு கணினிப் பிரதி களைப் பெற்றுக்கொள்வதற் கான ஏற்பாடுகள் யாவும் செய் யப்பட்டுள்ளன என்று தெரி வித்தன.

இறப்பு, பிறப்பு பதிவுகள் கணினி மயப்படுத்தும் நடவ டிக்கைகள் கடந்த ஆறுமாதங்க ளாக இடம்பெற்று வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

பிறப்பு, இறப்பு பதிவுகள் கணினி மயப்படுத்தப்பட்டுள்ள மையால் மக்கள் சிரமமின்றி அவற்றைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலைமை ஏற்பட்டுள் ளது.

அன்றாடம் இவற்றைப் பெறு வதற்காக பிரதேச செயலகங் களுக்குச் சென்று நீண்ட நேரம் காத்திருக்கும் மக்களும், பிரதி களைப்பெற நாள் கணக்கில் எதிர்பார்த்திருப்போரும் நேர விரயமின்றி ஒரு சில மணி நேரத் திலேயே அவற்றைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (த-9)

## கிழக்கு மக்களுக்கு யாழ்.மாநகரசபை நிதியுதவி

யாழ்ப்பாணம், பெப்.02

கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்ற வெள்ள அனர்த்தம் காரண மாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக யாழ். மாநகர சபை ரூபா 2 லட்சம் நிதியை வழங்கத் தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் திங்கள் கிழமை யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ் வரி பற்குணராஜா தலைமை யில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் மாநகரசபை உறுப் பினர் விந்தன் கனகரத்தினத் தின் வாய்மூலமான மேற்படி வேண்டுகோள் சபையோரால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பட்டது.

மாநகரசபை, யாழ்.அரச அதி பரின் ஊடாக இந்த நிதியை அனுப்பி வைக்கவுள்ளது. (த-7)

# வடமராட்சி கிழக்கில் உள்ள பாடசாலைகளுக்கு உதவிகள்

யாழ்ப்பாணம்,பெப்.02

வடமராட்சி கிழக்கு பாட சாலைகளுக்கு 'என்றிப் திட்ட மும் யுனிசெவ்' அமைப்பும் உதவிகளை வழங்க முன்வந் திருப்பதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித் தார்.

இது தொடர்பாக அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு -

வடமராட்சி கிழக்கு பாட சாலைகளான ஆழியவளை ஜி.ரி. எம்.எஸ்.பாடசாலை, உடுத்துறை மகாவித்தியாலயம், மருதங்கேணி மற்றும் செம்பியன் பற்று நோமன் கத்தோலிக்கத் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகியவற்றின் 'என் றிப்' திட்டத்தின் உதவியுடன் புனரமைப்புப் பணிகள் முன் னெடுக்கப்படவுள்ளன.

வடமராட்சி கிழக்கில் சில பாடசாலைகளுக்கு 'யுனிசெப்' அமைப்பு தண்ணீர்த் தாங்கி களையும் தளபாட உதவிகளை யும் வழங்கியுள்ளது.

ஆழியவளை பாடசாலைக்கு 6 மில்லியன் ரூபா செலவில் கட்டடம் ஒன்று அமைக்கப்பட வுள்ளது என்றார்.

பாடசாலை அபிவிருத்தி வேலைகள் முழு வீச்சில் இடம் பெற்றாலும் இப்பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் மாண வர் வரவு மந்தமாகக் காணப்படு வதாகவும் அவர்மேலும் தெரி வித்தார். (த-319)

## அகிம்சைக்கு மரியாதை...



நினைவு: மகாத்மாகாந்தியின் 63 ஆவது கிராகத்த தினத்தையொட்டி யாழ்ப்பாணத்தில் அகில இலங்கை காந்திசேவா சங்கம் ஏற்பாடு செய்த நிகழ்வில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைமுன் பாக அமைந்துள்ள மகாத்மா காந்தியின் சிலைக்கு சங்கத் தலைவர் ஆ.வடிவேலு மாலையணிவித்தார். (த)

## வரணிப் பிரதேசத்தின் வீதிகள் புனரமைப்பு

வரணி, பெப்.02

கொடிகாமம் - பருத்தித்துறை பிரதான வீதியில் வரணிப் பிர தேசத்தில் குண்டும்,குழியுமாக மிக மோசமாகச் சேதமடைந்த வீதிகள் தற்சமயம் வீதி அபி விருத்தி அதிகாரசபை தொழி லாளர்களால் புனரமைக்கப் பட்டு வருகின்றன.

வரணிப் பிரதேசத்தில் சுட்டி புரம் ஆலயப் பிரதேசத்தில் இருந்து கொடிகாமம் வரை மழை வெள்ளம் காரணமாக பாதை மிகமோசமாகச் சேத மடைந்து இருந்தது.

அதேசமயம் முள்ளி வெளிப் பிரதேசப் பாதைகளும் ஆங் காங்கே பெரிய குழிகளாகக் காட்சியளிக்கின்றன.

தற்சமயம் முள்ளிவெளிப் பிரதேசம், சுட்டிபுரப் பிரதேசம், எருவன் பிரதேசம் மற்றும் மாவிட்ட மயானப் பிரதேசம் என்பன தார்க் கலவைகளினால் குண்டு குழிகள் நிரவப்பட்டு வருகின்றன.

கூடுதலான தொழிலாளர் கள் இப்பாதைப் புனரமைப்பில் தினமும் ஈடுபட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (த-122)

## நல்லூர் பிரதேச சபையும் 'தேசத்துக்கு மகுடம்' நிகழ்வில்

யாழ்ப்பாணம்,பெப்.02

63 ஆவது இலங்கை சுதந் திர தினத்தை முன்னிட்டு மொனராகலை மாவட்டம் புத்த ளம் நகரில் நடைபெறவுள்ள 'தேசத்தின் மணிமகுடம்' தேசிய கண்காட்சியில் வட மாகாணத் தில் 34 உள்ளூராட்சி மன்றங் கள் கலந்து கொள்ளவுள்ளன.

இக் கண்காட்சிக்கு நல்லூர் பிரதேச சபையும் தெரிவு செய் யப்பட்டுள்ளது. வடமாகாணத் தின் முதன்மையான பிரதேச சபையாக விளங்கும் இப்பிரதேச சபை 'சுவணபுரவ' தேசிய விரு தினை 2008 ஆம் ஆண்டு பெற் றுக் கொண்டது.

இக்கண்காட்சியில் பங்கு கொள்வதற்கு நல்லூர் பிரதேச சபையை ஆளுநரின் செய லாளர் எஸ்.ரங்கராஜா, கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன், பிராந்திய ஆணை யாளர் திருமதி பு.சிவலிங்கம் ஆகியோர் இணைந்து தெரிவு செய்துள்ளனர். (த-15-313)

## தபாலகங்களுக்கு கணினிகள்

யாழ்ப்பாணம்,பெப்.02

வடமாகாணத் தபால் அலு வலகங்களுக்கு முதற் கட்ட மாக பத்துக் கணினிகள் கொழும் பிலிருந்து எடுத்துவரப்பட்டுள் ளன.

இவற்றில் அஞ்சல் கல்லூ ரிக்கு ஐந்து கணினிகளும், மன்னார், முல்லைத்தீவு தபால கங்களுக்கு தலா ஒவ்வொரு கணினியும் பிராந்தியக் கணக் காளர் அலுவலகத்துக்கு ஒரு கணினியும் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்துக்கு இரண்டு கணினிகளும் வழங் கப்பட்டுள்ளன.

அத்துடன் மேலும் ஒரு தொகுதி கணினிகளை யாழ்ப் பாணத்துக்கு அனுப்பிவைப் பதற்கும் தபால் திணைக் களம் நடவடிக்கை மேற்கொள் டுள்ளதாகத் தபாலக வட்டாரங் கள் மேலும்தெரிவித்தன. (த-26)

# ஜி.ரி.இசற் நிறுவனத்தினால் 146 குடும்பங்களுக்கு உதவி

நாவற்குழி,பெப்.02

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்குக்கூட்டுறவுச் சங்கங் களின் சமாசம் ஜி.ரி.சற் நிறுவ னத்தின் நிதி உதவியுடன் மீளக் குடியேறிய 146 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளைச் சென்ற ஆண்டில் வழங்கியுள்ளது.

வடமராட்சி வடக்கு பருத் தித்துறை பிரதேச செயலகப் பிரிவில் 36 பேருக்கும் வலிகா மம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் 60 பேருக் கும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 50 பேருக்கும் இவ்வி தம் உதவிகள் வழங்கப்பட் டுள்ளன.

மீளக்குடியேறிய குடும்ப அங்கத்தவர்களின் தொழில் திற மைக்கேற்ப கால்நடை வளர்ப்பு, சிறுவியாபாரம், சிறு கைத்தொ ழில் என்பவற்றை மேற்கொள்ள 50 ஆயிரம் ரூபா பெறுமதிக்கு அவை பொருள்களாக வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளன.

சென்ற வருடம் ஜூன் முத லாம் திகதி முதல் ஆரம்பிக்கப் பட்ட இந்தத் திட்டத்திற்கென தெரிவு செய்யப்பட்ட அங்கத்த வர்களுக்கு கணக்கீட்டு பயிற்சி நெறியும், தலைமைத்துவப் பயிற்சியும் வழங்கப்பட்டன. பின்பு இவ் வாழ்வாதார உதவி கள் வழங்கப்பட்டது.

இவ்வாண்டிலும் இத் திட்டத் தைத் தொடர்வதற்கு அங்கத்த வர்களுக்கான பயிற்சி வகுப் புக்கள் குறித்த பிரதேச செயல கப் பிரிவுகளில் நடைபெற உள்ளன.

அடுத்த வாரம் பருத்தித் துறை பிரதேச செயலர் பிரி வில் பொலிகண்டி அல்வாய் வட மேற்கு கிராமங்களில் நடை பெறும் (த-14)

# தென்பகுதியிலிருந்து பெரிய வெங்காயம்

யாழ்ப்பாணம், பெப்.02

யாழ்.குடாநாட்டில் சின்ன வெங்காயத்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை ஈடு செய்யும் வகையில் பெரிய வெங்காயம் தென்பகுதியில் இருந்து பெரு மளவில் கொண்டு வரப்பட் டுள்ளது.

பெரிய வெங்காயம் பெருந் தொகையாக இங்கு எடுத்து வரப்பட்டுள்ளமையால் சந்தை களில் அதன் விலை வீழ்ச்சி யடைந்துள்ளது.

முன்னர் ஒரு கிலோ 140 ரூபாவாக விற்கப்பட்ட பெரிய வெங்காயம் நேற்று சந்தையில் ஒரு கிலோ 100 ரூபாவாக விற்கப்பட்டது.

பெரிய வெங்காயம் தென் பகுதியில் இருந்து 'கூலர்' வாகனங் கள் மூலம் அதிகளவில் எடுத்து வரப்படுகின்றன. அவற் றில் பெரும்பாலானவை அழுகிய நிலையிலேயே காணப்படுவ தாக நுகர்வோர் தெரிவிக்கின்ற னர்.

இதேவேளை -

குடாநாட்டில் சின்ன வெங் காயத்துக்குத் தொடர்ந்து தட் டுப்பாடு நிலவி வருவதும் சந் தைகளில் ஒரு கிலோ சின்ன வெங்காயம் 300 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (த-26)

# யாழ். நகரைச் சுத்தமாக வைத்திருக்க பொதுமக்கள் ஒத்துழைக்கவில்லை

யாழ்ப்பாணம், பெப்.02

நகரைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருப்பதில் பொதுமக்களின் ஒத்துழைப்பு மாநகர சபைக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை என யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் திங்கள் கிழமை யாழ் மாநகர சபைக் கூட்டம் நடைபெற்றது.

அப்போது உறுப்பினர்கள் சிலர் நகரில் சில பகுதிகளில் குப்பைகள் அதிகரித்துக் காணப்படுவதாகவும், சில வீதிகளுக்கு தொழிலாளர்கள் வருவதே இல்லை எனவும் முதல்வரிடம் கூறினார்கள்.

இது தொடர்பாக முதல்வர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஒரு சில வீதிகளில் குப்பைகள் போடப்படுவதில்லை. அந்த இடங்களில் உள்ள மக்கள் இது விடயத்தில் நல்ல முறையில் செயற்படுகிறார்கள். சில வீதிகளில் சுத்தம் செய்த அடுத்த நிமிடமே குப்பைகளைப் போட்டு விடுகிறார்கள். 'சொப்பிங்' பைகளுடன் நடுவீதியிலேயே குப்பைகள் கிடக்கக் காணப்படுகின்றன.

மாநகர சபை இதற்காகத் தனது முழுவீச்சிலான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. எனினும் பொதுமக்கள் அது குறித்து பொறுப்பின்றி நடந்தால் என்ன செய்வது? மக்களுக்கு இது தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்த உறுப்பினர்கள் முன்வர வேண்டும். நீங்களும் இந்த விடயங்களைக் கண்காணித்து தவறு ஏற்படும் பட்சத்தில் பொலிஸாரிடம் விடயத்தை எடுத்துக் காட்டி வீதியில் குப்பை போடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க உதவவேண்டும்.

கொழும்பில் கூட வீதிகளில் சொப்பிங் பைகளைக் காண முடியாது. மக்கள் அங்கு இது விடயத்தில் அக்கறை காட்டுகிறார்கள்.

எமது மக்களும் சுகாதாரம் மிக்க ஒரு நகரமாக யாழ்.நகரை மாற்றியமைப்பதில் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும் - என்றார். (த-7)

# குடாநாட்டில் விவசாயிகள் மரக்கறிச் செய்கையில் நாட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.02

குடாநாட்டின் பல பகுதிகளிலும் விவசாயிகள் இம்முறை மரக்கறிச் செய்கையில் அதிக நாட்டம் காட்டி வருகின்றனர். மரக்கறி விலைகளில் அதிகரிப்புபே இதற்குக் காரணமாக விவசாயிகள் இச்செய்கையில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுகிறது. மரக்கறிச் வகைகள் எல்லாமே கிலோ நூறுரூபாவுக்கு மேல் விற்கப்படுவதால் நுகர்வோர் பெரிதும் பாதிப் படைந்துள்ளனர்.

தென்பகுதிகளில் இருந்து எடுத்துவரப்படுகின்ற மரக்கறிகள் சந்தைகளில் விற்கப்படுவதால் யாழ்.விவசாயிகள் மரக்கறிச் செய்கையில் மும்முரம் காட்டி வருகின்றனர்.

தென் பகுதியில் இருந்து மரக்கறிகள் எடுத்து வரப்படாவிடின் யாழில் மரக்கறிக்கு பெரிதும் தட்டுப்பாடுகள் நிகழும் என்பதாலும் மரக்கறிச் செய்கை விவசாயிகள் மரக் கறிச் செய்கைக்கு முன்னுரிமை கொடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம், சாவகச்சேரி போன்ற பிரதான சந்தைக்கு தென்பகுதி மரக்கறிகள் தினமும் எடுத்துவரப்படுவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை கடலுணவுகளின் விலைகளும் குடாநாட்டுச் சந்தைகளில் அதிகரித்துள்ளன. அனைத்துக் கடல் உணவுகளும் கிலோ 400 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றன. (த-26)

# ரயில் பாலம் விற்பனைக்கு

கொடிகாமம்,பெப்.02

நாவற்குழி பிரதேசத்தில் வட பகுதிக்கான ரயில் பாதையில் 241 ஆவது மைலில் அமைந்துள்ள உபயோகமற்ற பாலம் விற்பனைக்கு விடப்பட உள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

விற்பனைக்கு விலைமனுக் கோரவுள்ளவர்கள் உரிய விண்ணப்பப்படிவங்களை மருதானை, கொழும்பு - 10 இல் உள்ள ரயில் சேவைகள் களஞ்சியப்பகுதி கண்காணிப்பாளரிடம் இருந்து பெற்று விண்ணப்பிக்கலாம் என ரயில் திணைக்கள தவிசாளர் அறிவித் துள்ளார்.

இப்பாலம் கடந்தகால போர்ச் சூழலால் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-122)

## சிறுவர் நலன் பேண...



கல்விக்கான உதவி: சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் கல்விக்கான உதவியை மாதாந்தம் வழங்கும் திட்டத்தின் கீழ் நோர்வே இந்து கலாசார அமைப்பின் அனுசரணையுடன் தாய்,தந்தையை இழந்த 75 பிள்ளைகளுக்கு நிலையத்தின் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் வழங்கினார். (த)

# சில இடங்களில் இன்று மின்தடை

யாழ்ப்பாணம்,பெப்.02

உயரழுத்த மின் மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யப்படவுள்ளதால் இன்று புதன்கிழமை சில இடங்களில் மின்வெட்டு அமுலில் இருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இன்று காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப் பகுதி ஆகிய இடங்களில் மின்தடை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருத்தவேலைகள் முடிவடைந்தால் குறிக்கப்பட்ட நேரத்துக்கு முன்னதாக மின் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

# ஏ-9 வீதி சாவகச்சேரியில் மிக மோசமாகச் சேதம்

வலி.வடக்கு,பெப்.02

சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு முன்னாள் உள்ள ஏ-9 கண்டி வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்து காணப்படுவதால் வாகனங்கள் பயணிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் பெய்த தொடர் மழை காரணமாக சாவகச்சேரி இலங்கை வங்கி கிளைக்கு முன்னால் உள்ள வீதிமுதல் வைத்தியசாலை' விரையான சுமார் 250 மீற்றர் நீளத்துக்கு மிகவும் மோசான முறையில் சேதம் அடைந்து காணப்படுகின்றது.

குறிப்பிட்ட வீதியில் நாளாந்தம் ஆயிரக்கணக்கான வாகனங்கள் பயணங்களை மேற்கொள்கின்றன.

அத்துடன் மாணவர்களும் பொதுமக்களும் அதிகளவில் பயணிக்கிறார்கள்.

எனவே இந்த வீதியை விரைவாகத் திருத்தி அமைத்து சிரமமின்றிய போக்குவத்துக்கு உரிய தரப்பினர் வழிசெய்ய வேண்டும் என வாகனச் சாரதிகளும் பொதுமக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-86)

# வீதி விபத்துக்களில் இருவர் மரணம்

யாழ்ப்பாணம், பெப். 02

யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற இருவேறு வீதி விபத்துச் சம்பவங்களில் காயமடைந்த இருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நேற்று மரணமானார்கள்.

மந்திகை தெருமூடி மடத்தடியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் வீதியால் பயணித்த சைக்கிள் - ஹன்ரர் வாகன விபத்தில் புலோலியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து, சிகிச்சைக்காக மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி அவர் அங்கு உயிரிழந்தார்.

சைக்கிளில் பயணம் செய்த புலோலி வடமேற்கு முருகையன் கோவிலடியைச் சேர்ந்த செல்லையா வைரவப்பிள்ளை (வயது -48) என்ற குடும்பஸ்தரே மரணமானவர் ஆவார்.

இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை கடந்த 30ஆம் திகதி ஆவரங்கால் வல்லை பிரதான வீதியில் இடம்பெற்ற ஹைஏஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் நேற்று வைத்தியசாலையில் மரணமானார்.

இராசதுரை பயிந்தன் (வயது -20) என்ற இளைஞரே மரணமானவர் ஆவார். இச்சம்பவத்தில் இவருடன் பயணம் செய்த இராசதுரை ரஜீபன் (வயது -21) நேற்று முன்தினம் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (த-15-78-319-236)

# தபாலகங்களில் 'ஈபே' மின் கட்டண வசதி

யாழ்ப்பாணம், பெப்.2

யாழ்.குடாநாட்டிலுள்ள தபாலகங்களில் துரித கதியில் மின் கட்டணங்களைச் செலுத்துவதற்கான 'ஈபே' (E - PAy) எனப்படும் விரைவுக் கட்டண வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கான ஏற்பாடுகளை தபால் திணைக்களம் துரிதமாக மேற்கொண்டு வருகின்றது. குடாநாட்டிலுள்ள அனைத்துத் தபாலகங்களிலும் இந்த வசதியை ஏற்படுத்துவதற் கான நடவடிக்கைகள் தற் போது முன்னெடுக்கப்பட்டுள் என.

கொடிகாமம் தபாலகத்தில் இந்த 'ஈபே' மின்கட்டண வசதி அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டதாக தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மக்களால் செலுத்தப்படும் மின்கட்டணங்களை உடனுக்குடன் அவர்களது கணக்குகளில் வரவு வைப்பதற்காக இந்த வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் மின் பாவனையாளர்கள் தமது கட்டணங்களை எவ்வித சிரமமும் இன்றி விரைவாக செலுத்தமுடியும். இதனால் அவர்களுக்கு ஏற்படும் சில வீண் சிரமங்களும் தவிர்க்கப்படும்.

இந்த 'ஈபே' கட்டண வசதி வாடிக்கையாளர்களின் கணக்குகளில் அவர்களால் செலுத்தப்படும் கட்டணங்களை உடனுக்குடன் வரவு வைக்கும் வகையில் வலைப்பின்னலில் இணைக்கப்பட்டிருக்கும்.

இதன மூலம் மின் கட்டணங்கள் துரிதமாக மின்சார சபைக்குக் கிடைப்பதுடன் மின் பாவனையாளர்களும் சிரமங்கள் இல்லாமல் தமது கட்டணத்தை செலுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வசதியை குடாநாட்டிலுள்ள அனைத்துத் தபாலகங்களுக்கும் படிப்படியாக விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை தபால் திணைக்களத்தின் அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

விரைவில் அனைத்துத் தபாலகங்களிலும் மக்கள் இந்த வசதிமூலம் மின் கட்டணங்களை விரைவாகச் செலுத்தக் கூடிய நிலை ஏற்படும் என தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(த-26-122)

# கிளிநொச்சி மாசார் அ.த.கவுக்கு 37 மில்லியன் செலவில் மாடிக்கட்டடம்

பளை, பெப்.2

கிளிநொச்சி மாசார் அ.த.க. பாடசாலைக்கு 37 மில்லியன் ரூபா செலவில் புதிதாக இரண்டு மாடிக் கட்டடம் அமைக்கப்பட வுள்ளது.

இந்த இரண்டு மாடிக்கட்ட டத்துக்கான 37 மில்லியன் ரூபாவினை யுனிசெவ் நிறுவனம் வழங்கியுள்ளது. இக்கட்டடத் துக்கான அடிக்கல் நாடும் விழா கடந்த 19 ஆம் திகதி நடை பெற்றது. கிளிநொச்சி வலயக் கல்விப் பிரதிப்பணிப்பாளர் க.சின்னராசா அடிக்கல்லை நட்டுவைத்தார்.

இவ்விழாவில் பாடசாலை அதிபர் திருமதி தயாளினி கணேசலிங்கம், உபஅதிபர் எஸ்.எஸ். கண்ணகுமார், பாட சாலை ஆசிரியர்கள், மாண வர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

போரினால் சிதைவுற்றிருந்த இப்பாடசாலையானது மக்கள் மீள்குடியேறிய பின்ன ரும் கட்டட வசதிகள் எதுவு மற்ற நிலையில் தறப்பாளின் கீழும், மரநிழலின்கீழும், கல் விச் செயற்பாட்டினை மேற் கொண்டு வந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த இரண்டுமாடிக் கட்ட டத்தின் வேலைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக் கிறது. இந்தப் பணிகள் ஆறுமாத காலத்துக்குள் பூர்த்தி யாகும் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

(ம-311)

# வன்னி மாவட்ட தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறு

கிளிநொச்சி, பெப்.2

வன்னி மாவட்டத்தில் இருந்து தனிப்பட்ட பரீட்சார்த் திகளாக யாழ். இந்துக் கல்லூரி யில் ஜி.சீ.ஈ. (சா/த) பரீட்சை யில் தோற்றிய மாணவர்கள் தமது பெறுபேறுகளை யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கேட் கப்பட்டுள்ளனர்.

இதன்படி 2009 ஆம் ஆண் டிற்கான பழைய பாடத்திட்டத் தில் தோற்றிய 21 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் பெறுபேறு களைப் பெற்றுக்கொள்ள முடி யும்.

எஸ்.பிரதீபன், எஸ்.சர்மி லன், வீ.சிவபாலன், ரி.தெய் வேந்திரம், என்.திரவியம், ஜே. கீர்த்தனா, ஜே.கீர்த்தனன், ரி. ரஜனி, எஸ்.மேனகன், என். சதீஸ், ஜீ.அன்ரன் வினோத், கே.உசாந்தி, எஸ்.அமரசிங்கம், எஸ்.அரி கேந்திரம், ஏ.சுயந்தன், சீ.விமல் நிக்சன், கே.நடராஜ், ஏ.மெரின் சுகந்தினி, கே.மரியநாயகி, எஸ்.கோகுலன், ஏ. றெனிசியா ஆகியோர் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பெறுபேற்றினைப் பெற வரும் போது தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வர வேண்டும் என வலயக் கல்வி அலுவலர் கேட்டுள்ளார். (ம-10)

# மருதங்குளத்தில் இரு வீடுகளில் முகமூடிக் கொள்ளையர் அட்டகாசம்

கிளிநொச்சி, பெப்.2

கிளிநொச்சி, மருதங்குளம் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு இரண்டு வீடுகளில் அடுத்தடுத்துப் புகுந்த கொள் ளையர்கள் அங்கிருந்தவர் களை அடித்துத் துன்புறுத்திய துடன் நகைகளையும் பணத் தையும் அபகரித்துச் சென்றுள் ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

கண்டாவளைப் பிரதேச செய லர் பிரிவுக்குட்பட்ட மருதங் குளம் பகுதியில் ஞாயிற்றுக் கிழமை இரவு 9 மணியளவில் அ. டக்ளஸ் என்பவரின் வீட்டுக் குள் புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந் தவர்களை அச்சுறுத்தி நகைகளைத்தருமாறு மிரட்டி யுள்ளனர். அப்போது வீட்டிலி ருந்தவர்கள் தம்மிடம் எந்த நகைகளும் இல்லையென்று கூற கொள்ளையர்கள் அங்கி ருந்த ஒருவயதுக்குழந்தை உட் பட அனைவரையும் பச்சை மட்டையால் கடுமையாகத் தாக்கியுள்ளனர். அப்போது வீட் டிலிருந்த பெண்மணி காதுத் தோட்டினைக் கழற்றிக் கொடுத் தார்.

அங்கிருந்து வெளியேறிய கொள்ளையர்கள் அடுத்துள்ள உதயசூரியன் என்பவரின் வீட் டுக்குள் புகுந்தனர்.

அங்கிருந்தவர்களையும் பச்சை மட்டையால் கண்டபடி தாக்கியுள்ளனர். அங்கிருந்த ஆறு பெண் பிள்ளைகளது காதுத்தோடுகளையும் 25 ஆயி ரம் ரூபா பணத்தையும் அபக ரித்துச் சென்றுள்ளனர்.

10 பேர் கொண்ட கொள் ளையர்குழு முகத்தினைக் கறுப்புத்துணியால் மறைத் திருந்தனர் என்றும் சரளமாகத் தமிழில் உரையாடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் குறித்துக் கிளி நொச்சிப் பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படு கிறது.

(ம-9)

# விதைபொருள் அபிவிருத்தி நிலையம் பரந்தனில் மீண்டும் செயற்பட ஆரம்பம்

பரந்தன், பெப்.2

மத்திய அரசின்கீழ் இயங் கும் விவசாயத் திணைக்களத் தின் விதை நடுகைப் பொருள் அபிவிருத்திப் பிராந்திய நிலை யம் கடந்த 15 ஆண்டுகளுக் குப் பின்பு மீண்டும் பரந்தனில் தொழிற்படத் தொடங்கியுள் ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ளடக்கி யதாக இந்தப் பிராந்திய நிலை யம் ஊடாக ஆலோசனைகள், விதை விற்பனை மற்றும் பல் வேறு புதிய விதை அறிமுகம் போன்ற சேவைகள் வழங்கப் படவுள்ளன.

விவசாயிகள் சேவைகளை நேரடியாகப் பெற்றுக் கொள்ள லாமெனவும் தெரிவிக்கப்படு கிறது.

இந்த நிலையத்தின்மூலம் இப்பிரதேசங்களில் விவசாயச் செயற்பாடுகளைச் சிறந்த முறை யில் முன்னெடுக்க வழியேற் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இந்த நிலையத்தின் நடவ டிக்கைகளை உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ். சதிஸ்வரன் நெறிப்படுத்தவுள்ளார். (ம-72)

## கோயில் கணக்கர் தேவை

இணுவில் கந்தசுவாமி கோயிலுக்குக் கணக்கர் தேவை. நாற்பத்தைந்து வயதுக்கு (45) மேற்பட்டவராகவும் சைவ ஆசார சீலராகவும் இருக்க வேண்டும். சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். விண்ணப்பிப்போர் தமது சொந்தக் கையெழுத்தில் தயாரித்த சுயவிவரக் கோவையை நேரில் அல்லது தபாலில் 15.02.2011 இற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்குச் சமர்ப்பிக்கலாம்.

**தலைவர், இணுவில் கந்தசுவாமி கோயில் தர்மகர்த்தா சபை, சுன்னாகம்.**

*செ.சோதிப்பெருமாள்,*
*தலைவர்.*

(110220)

## 16 ஆம் ஆண்டு நெஞ்சகலா நினைவலைகள்



அமரர்
**செல்வராசா ஞானசேகரம்**
(ஞானம்)

அன்னை மடியில்
31 ★ 01 ★ 1964

ஆண்டவன் அடியில்
30 ★ 01 ★ 1995

**திதி: 02.02.2011**

எங்கள் அன்புத் தெய்வமே! தம்பி ஞானா!
என்றும் எங்கள் குடும்பத்தை ஆலவிருட்சமாய் தாங்கிய தீபமே!
அணையா நட்சத்திரமாய் ஒளிரும் சூரியனாய்
ஆண்டுகள் ஈரெட்டு ஓடி மறைந்தாலும்
உன் நினைவுடன் நித்தம் ஏங்கித் தவிக்கும்
என்றும் மறவா பாச நினைவுகளுடன்
உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆலடிப்பிள்ளையாரை வேண்டி
நிற்கின்றோம்.

அம்மா, சகோதரங்கள், மைத்துனர்கள், மைத்துனிமார்.

தகவல்:
க.செல்வராசா குடும்பம்.
(அம்மா)

வத்திராயன் வடக்கு,
தாளையடி.

(105500)

## இடமாற்றம்

50, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த ஹரன் ஜூவலர்ஸ் ஸ்தாபனம் 07.02.2011 முதல் 205, மின்சார நிலைய வீதியில் (பெரிய ஆஸ்பத்திரியின் பின்புறம்) இயங்கும் என்று எமது அன்பர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

உரிமையாளர்,
கிருபாகரன்.

(110207)

## காவலாளி/ வீட்டுப் பராமரிப்பாளர் தேவை

கொக்குவிலில் உள்ள வீட்டுக்கு காவலாளியாகவும் தோட்டச் செய்கை செய்யக் கூடிய வராகவுமுள்ள 50 வயதுக்கு மேற்பட்ட ஆண் உடன் தேவை.

சம்பளம் ரூபா 10.000/=
தொடர்பு: 0771965666

(110185)

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2kg க்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய No.1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 02.02.2011 இல் விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

**ராஜீவ்,**
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
தொ.பே.: 0776090926,
0212222867.

(110161)

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் சுத்தம் செய்தது (1Kg 450/-), கல்பேட் சுத்தம் செய்து காலை 6.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே.: 021 222 6944

(109374)

## சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

**மின்சார நிலைய வீதி, சுன்னாகம்**

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்திலுள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கான தகைமையுள்ள விண்ணப்பதாரரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| பதவி | :- கணக்குப் பதிவாளர் |
| குறியீட்டு இல. | :- 301/13 |
| சம்பள அளவுத்திட்டம் | :- 9950.00-85×10-90×10-11700.00 119400.00-1020.00-1080.00-140400.00 |
| வெற்றிடம் | :- 01 |

1. கல்வித்தகைமை/ தொழிற்தகைமை

(அ) கூட்டுறவுப்பணியாளர் ஆணைக்குழு 14 ஆவது சம்பளத் திட்டத்தின் கீழ் கணக்குப் பதிவாளர் அல்லது எழுதுநர் பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது 15ஆவது சம்பளத்திட்டத்தின் கீழ் எழுதுநர் பதவியில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்

அல்லது

(ஆ) க.பொ.த.(சா.த) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம்/ தூயகணிதம்/ வர்த்தகக் கணிதம், சிங்களம் அல்லது தமிழ் என்பவற்றை உள்ளடக்கியதாக ஐந்து திறமைச் சித்திகளுடன் மொத்தம் ஆறு பாடங்களுடன் கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் லிகிதர் பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

2. மேலதிக தகைமை

கணினிப் பயிற்சியில் DIPLOMA IN M.S OFFICE சித்தி, கூட்டுறவுப் பயிற்சி உயர்தரம் சித்தி அடைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**வயதெல்லை:** 18-45 வயதுக்குட்பட்டவராய் இருத்தல் வேண்டும். சங்கம்/ கொத்தணி/சமாசப் பணியாளர்களுக்கு வயதெல்லை மட்டுப்படுத்தவில்லை.

3. ஏனைய விபரம்:

1. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்துக்கு அமைய ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் மற்றும் படிகளும் வழங்கப்படும்.
2. விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்று அவற்றைப் பூரணப்படுத்தி பொதுமுகாமையாளர், சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ. சங்கம், மின்சார நிலைய வீதி, சுன்னாகம் என்னும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்கவும்.
3. விண்ணப்ப முடிவுத் திகதி 16.02.2011

பொது முகாமையாளர்,
சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.

(சி-575527) தொலைபேசி இலக்கம். 021 224 0022

# கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நாளை சாரதி அனுமதிப்பத்திரப் பரீட்சை

கிளிநொச்சி, பெப்.2

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஊடாகச் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்து 2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதிக்கு உட்பட்ட திகதிகளில் இடம்பெற்ற எழுத்து பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக்கான ஓட்டுநர் பரீட்சார்த்தப் பரீட்சை நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

எனவே ஓட்டுநர் பரீட்சார்த்தப் பரீட்சைப் பரீட்சார்த்திகள் தமது வரவினை உறுதிப்படுத்தும் முகமாக இன்று புதன்கிழமை தமது பதிவுகளைக் கிளிநொச்சி மாவட்டச் செயலக மோட்டார் போக்குவரத்துக் கிளையில் மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீநிவாசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

பரீட்சார்த்திகள் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தமது வாகன ஒழுங்குகளுடன் உரிய இடங்களுக்கு வருகை தருமாறும் எழுத்துப் பரீட்சை இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளதால் புதிதாக விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளில் கடந்த காலங்களில் பரீட்சையில் தோற்றாத பரீட்சார்த்திகளும், 2235 இற்குட்பட்ட சுட்டெண்ணையுடைய பரீட்சார்த்திகளும் பரீட்சைக்குத் தோற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். (த)

# கால்நடை உறைவிடமாக பொது நோக்கு மண்டபம்

கண்டாவளை,பெப்.2

கிளிநொச்சி, கண்டாவளை உடுப்பாற்றுக் கண்டல் பொது நோக்கு மண்டபம் கால்நடைகளின் உறைவிடமாகக் காணப்படுகின்றது.

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேசத்துக்கு உட்பட்ட உடுப்பாற்றுக் கண்டல் பகுதியில் முன்பள்ளி, ஆரம்ப சுகாதார நிலையம் போன்ற கட்டடங்கள் ஏதும் இல்லாத நிலையில் இக்கிராமத்தின் தேவையினைக் கருத்தில்கொண்டு சுமார் பத்து லட்சம் ரூபா செலவில் பொது நோக்கு மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு 2007 ஆம் ஆண்டு பொது மக்களின் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இப் பொதுமண்டபம் இன்று எதுவித பாவனைகளும் இன்றிக் கால்நடைகளின் உறைவிடமாகக் காணப்படுவதுடன் நிலப்பகுதி சேதமடைந்தும் காணப்படுகின்றது. குறிப்பிட்ட சிலர் இந்த மண்டபத்தினுள் கால்நடைகளைக் கட்டி வைப்பதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு பொது நோக்கு மண்டபம் மற்றும் பொது வீதிகள் என்பவற்றில் கால்நடைகளைக் கட்டிப் பொது இடங்களை விசமிகள் சிலர் சேதமாக்கி வருவதாகவும் இக்கிராமவாசிகள் கவலை தெரிவித்துள்ளனர். (த-6)

# வன்னி மாவட்டத்தில் சிறு வீதிகள் சேதம்

கிளிநொச்சி, பெப்.2

கிளிநொச்சி, கரைச்சி அக்கராயன் குளம், ஸ்கந்தபுரம், கோணாவில்போன்ற கிராமங்களின் சிறு வீதிகள் குண்றும் குழியுமாகக் காணப்படுவதால் அப்பகுதியூடாகப் பயணம் செய்யும் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அக்கராயன் மகாவித்தியாலயத்துக்குச் செல்லும் மாணவர்களும் அக்கராயன்குளம் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்களும், கர்ப்பிணித் தாய்மார்களும், கோணாவில் அ.த.க. பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களும் ஸ்கந்தபுரம் இல. I அ.த.க.பாடசாலை, ஸ்கந்தபுரம் இல.II பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களும் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கிராமங்கள் விவசாயக் கிராமங்கள் ஆகையால், அறுவடைக்காலம் நெருங்கியுள்ளதால் அறுவடை செய்யும் நெல்லை வீடுகளுக்குக் கொண்டு செல்வதற்குப் பெரும் இடர்களைச் சுமக்கவேண்டிய நிலை காணப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (406)

## உற்சாகத்துடன்...



'எதிர்கால முத்துக்கள் : ஒட்டுசுட்டான் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் ஒன்று மாணவரை வரவேற்கும் நிகழ்வு மிகவும் சிறப்பாகப் பாடசாலை முதல்வர் திருமதி வே.நித்தியகலாவின் தலைமையில் நடைபெற்றது. (த-500)

# கைவிடப்பட்ட வாகனங்களின் விவரம் திரட்டல்

கிளிநொச்சி,பெப்.2

வன்னியில் இறுதிக் கட்டப் போரின்போது வாகனங்கள், மோட்டார் சைக்கிள்களைக் கைவிட்டவர்கள், இதுவரை குறித்த தங்களின் வாகனம்/ மோட்டார் சைக்கிளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் தங்க ளின் வாகனம், மோட்டார் சைக்கிள் தொடர்பான விவரத்தினை வாகனம் மீள்வழங்கும் நிலையம் அரிவாலை, திருநகர், கிளிநொச்சி என்ற முகவரிக்கு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

பின்வரும் மாதிரிக்கமைய அதாவது உரிமையாளர் முழுப் பெயர், முகவரி, தே.அ.அ.இ, தொ.பே.இல, கிராமசேவையாளரின் பிரிவும் பதிவு இலக்கமும், பதிவு இலக்கம், இயந்திர இலக்கம், அடிச்சட்ட இலக்கம், வகை, வகுப்பு, நிறம், விசேட அடையாளங்கள் போன்றவற்றின் விவரங்களை நிரப்பி அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கூட்டுறவுச் சங்கத்தினர்

# முல்லை. மக்களின் நெல்லை கொள்வனவு செய்வார்களா?

முல்லைத்தீவு, பெப்.2

முல்லை. மாவட்டத்தில் காலபோக நெற்செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகள் தமது நெல்லை கூட்டுறவுச் சங்கத்தினர் கொள் வனவு செய்வார்களா என எதிர்பார்த்துக் காத்துக்கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது அறுவடை ஆரம்பமாகியுள்ளதால் நெல்லைப் பாதுகாத்து வைத்திருக்கக் கூடிய வீட்டு வசதி வாய்ப்புக்கள் இல்லாத விவசாயிகள் நெல்லைக் கொள்வனவு செய்யுமாறு கூட்டுறவுச் சங்கங்களிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

தனியார்கள் குறைந்த விலையில் நெல்லைக் கொள்வனவு செய்ய முண்டியடிக்கின்றனர் என்றும் இதனைத் தடுக்கும் முகமாகக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தினர் சிலர் நெல்லைக் கொள்வனவு செய்வார்களா, இல்லையா என்பதை அறியத்தருமாறு விவசாயிகள் ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். (ஒ-500)

# தனியார் வீடொன்றில் இயங்கும் பூநகரி, நல்லூர் உபதபாலகம்

கிளிநொச்சி, பெப்.2

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி, நல்லூர் உபதபாலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் இன்றித் தனியார் வீடொன்றில் நீண்ட காலமாக இயங்கி வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் இந்தத் தபாலகத்தைப் பயன்படுத்தும் அப்பகுதிமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருவதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

அலுவலகம் பல வளப்பற்றாக்குறையுடன் இயங்குவதால், தபாலகப்பணியாளர்களும் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் உரிய தரப்பினர் இத் தபாலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைய நடவடிக்கை எடுக்குமாறும் அப்பகுதிக் கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (406)

# தெருவெளி நாடகம்

கிளிநொச்சி,பெப்.2

கிளிநொச்சி மாவட்ட சர்வோதயத்தின் ஏற்பாட்டில் மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ''இது விதியல்ல'' என்னும் தெருவெளி நாடகம் ஒன்று கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் இடம் பெற்று வருகின்றது.

மீளக்குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் மக்கள் மத்தியில் வெடி பொருள்கள் மற்றும் மிதிவெடிகள் பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையிலும், வெடிபொருள்களினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் பற்றியும் சித்திரிக்கும் ''இது விதியல்ல'' எனும் தெருவெளி நாடகம் ஒன்று, புதிய கலைஞர்களை ஒன்றுதிரட்டிக் கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் இடம் பெற்று வருகின்றது. (த-6)

# கமக்காரர் அமைப்பு தெரிவு செய்யக் கோரிக்கை

கிளிநொச்சி,பெப்.2

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்துக்கு உட்பட்ட ஊரியான் கிராமத்தில் தற்போது செயற்பட்டு வரும் கமக்கார அமைப்பினைக் கலைத்து புதிய ஒரு கமக்கார அமைப்பினைத் தெரிவு செய்யுமாறு ஊரியான் பிரதேச விவசாயிகளும் பிரதேச மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் செயற்பட்டு வந்த கமக்கார அமைப்பின் நிர்வாகமே தற்பொழுதும் ஊரியான் பிரதேசத்தில் செயற்பட்டு வருவதுடன் இக்கமக்கார அமைப்பு பல்வேறு மோசடிகளிலும் ஈடுபட்டு வந்துள்ளது.

குறிப்பாக இவ்வாண்டு காலபோகச் செய்கைக்கென வழங்கப்பட்ட விதை நெல் விநியோகத்திலும் மேட்டு நில செய்கைக்கான விதை தானியங்களிலும் மோசடிகள் இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. இதனால் கூடுதலான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனைவிடக் காலபோக நெற்செய்கைக்கென வழங்கப்பட்ட உரமானியங்களில் என்றுமில்லாதவாறு மோசடிகளை மேற்கொண்டுள்ளதுடன் கமக்கார அமைப்பின் நிர்வாகத்தினர் தமது பெயர்களையும் தமது குடும்ப உறுப்பினர்களின் பெயர்களையும் பயன்படுத்தி பதிவுகளை மேற்கொண்டும் நெற்செய்கையில் ஈடுபடாத பயனாளிகளின் பதிவுகளையும் மேற்கொண்டு உரமானியத்தினைத் பெற்று அவற்றை விற்பனை செய்தும் வேறு இடங்களுக்குக் கொண்டு சென்றும் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டு நீதிமன்றம் வரை சென்றும் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறு உரமானியத்தில் மோசடிகளைக் கமக்கார அமைப்பினர் மேற்கொண்டதால் மானாவாரிச் செய்கையினை மேற் கொண்ட கூடுதலான விவசாயிகள் இன்று வரை கமக்கார உரமானியங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை எனவும் இதனால் மானாவாரிச் செய்கையினை மேற்கொண்டுள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் இவ்வாறு நீண்டகாலமாக மோசடிகளை மேற்கொண்ட கமக்கார அமைப்பினைக் கலைத்து புதிய ஒரு நிர்வாகத்தினைத் தெரிவு செய்யுமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-6)

உதயன்
02 பெப்ரவரி 2011 புதன்கிழமை

# மதுபானம் வழங்கி வாக்குக் கேட்கும் யுத்தியைக் கை விட்டுவிட வேண்டும்

நுவரெலியா, பெப்,02

தேர்தல் காலத்தில் வாக்கு வேட்டைக் காக மதுபானத் தைப் பயன்படுத்தும் யுக்தியை கைவிடுமாறு பிரிடோ நிறுவனம் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் வேட்பாளர்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மது ஒழிப்புப் பிரசாரத்தின் முன்னேற்றம் தொடர்பாக பிரிடோ பணியாளர்களுக்காக ஹட்டனில் நடத்தப்பட்ட மீளாய்வு நிகழ்வில் கருத்துத் தெரிவித்த பிரிடோ நிறுவன வெளிக்கள இணைப்பதிகாரி சந்திரசேகரன் இது தொடர்பாக தெரிவித்தவை வருமாறு:-

மலையகத்தில் மது ஒழிப்பு பிரசாரம் நல்ல பலன்களைத் தந்துள்ளன என்பதை பொலிஸ் நிலையத் தகவல்கள் காட்டுகின்றன. தேர்தல் காலத்தில் வாக்குகளுக்காக மதுவைப் பயன்படுத்துவதைத் தவிருங்கள்.

மது ஒழிப்பு பிரசாரத்தில் முக்கிய இடம் பெறுவதானது மக்கள் அறிவூட்டப்படுதல், மனப்பாங்கு ரீதியில் மாற்றங்களை ஏற்படுத்தல், மதுவினால் ஏற்படும் தாக்கங்கள் குறித்து சிறுவர்கள் மத்தியில் உணர்வூட்டலை ஏற்படுத்தல் போன்றனவாகும்.

இந்த அணுகுமுறைச் செயற்படுத்தியதால், பிரிடோ நிறுவனம் கடந்த தீபாவளிக் காலத்தில் முன்னெடுத்த மது ஒழிப்புப் பிரசாரம் நல்ல பலன்களைக் கொண்டுவந்துள்ளது. மதுவின் தாக்கம் குறைந்துள்ளதைக் காட்டும் குறிகாட்டிகளாவன பண்டிகை நாள்களில் இடம் பெறும் வன்முறைச் சம்பவங்கள்; மக்கள் பகிரங்கமாகக் குடித்து வெறிக்கும் சம்பவங்கள்; அது தொடர்பான பொலிஸ் முறைப்பாடுகள் என்பன குறைவதைக் காட்டுகின்றன.

பொதுவாகத் தோட்டங்களிலிருந்து வந்த தகவல்களின்படி மது பாவனை, பூஜைகளில் மது வைப் படைத்தல், வன்முறைச் சம்பவங்கள் ஆகியன வெகுவாகக் குறைந்துள்ளன என்பது தெளிவாகின்றது.

மேற்படி விடயம் பொலிஸ் நிலைய அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தீபாவளிக் காலத்தில் மது பாவனையுடன் சம்பந்தமான வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் ஹற்றன், டயகம, லிந்துல, நுவரெலியா, அக்கரப்பத்தனை ஆகிய பொலிஸ் நிலையங்களில் குறிப்பிடத்தக்க அளவில் குறைந் துள்ளன என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பெரும்பாலான பொலிஸ் நிலையப் பகுதிகளில் பண்டிகைக் காலங்களில் மது தொடர்பான குற்றச் செயல்கள் ஐந்து அல்லது பத்துக்கும் குறைவாகவே நடந்துள்ளன.

இது ஒரு சிறப்பான முன்னேற்றம் என்பதுடன் மது ஒழிப்புப் பிரசாரம் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதையும் காட்டுகிறது. பிரசாரம் மூலம் மக்களின் மனப்பாங்கில் ஏற்பட்டு வரும் மாற்றத்தைத் தொடர்ந்து பேணி வருவது அவசியமாகும்.

தொடர்ந்தும் அனைத்து நிகழ்வுகளின் போதும் மக்கள் அறிவூட்டப்படுதல் அவசியம். விசேடமாக இந்தப் பிரசாரத்துக்காக சிறுவர்கழக சிறுவர்களை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்தவேண்டும்.

இதேவேளை, ஜனாதிபதியின் 'மதுவுக்கு முற்றுப்புள்ளி' எனும் திட்டத்தின் கீழ் இப் பிரசாரத்துக்கு பொலிஸ் நிலையங்கள் ஆதரவு தரத்தயாராக உள்ளமையால் அதனைப் பயன்படுத்துவது அவசியமாகும்.

மலையக மக்களின் முன்னேற்றத்தைப் பெருமளவில் தடைப்படுத்தும் மது அரக்கனைக் கட்டுப்படுத்துவதற்காக கடும் பிரயத்தனங்களால் எட்டப்பட்டு வரும் சிறிது சிறிதான முன்னேற்றத்தை சுய நலத்துக்காகப் பயன்படுத்த வேண்டாம் என உறுதிபூணுமாறு சகல கட்சிகள், அமைப்புகளுக்கும் பிரிடோ நிறுவனம் வேண்டுகோள் விடுக்கிறது - இவ்வாறு பிரிமாவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இராணுவச் சிப்பாய் தாக்கி பொலிஸ் சார்ஜன்ட் காயம்

மாத்தளை,பெப்.2

மாத்தளை பொலிஸ் நிலையத்தில் இரகசியத் தகவல் சேகரிப்புப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கந்தேநுவர பகுதியைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவரால் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் மாத்தளை அரச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பவதினம் மாலை பொலிஸ் சார்ஜன்ட் ஓட்டோவில் தனது மனைவியுடன் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, மனைவி வீட்டுக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக மாத்தளை பிரதான வீதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றுக்கு சென்றுள்ளார். மனைவி வரும் வரை இவர் ஓட்டோவில் இருந்துள்ளார்.

சாதரண உடையில் வந்த குறித்த சிப்பாய் கந்தே நுவரவுக்கு செல்வதற்கு ஓட்டோவை எடுக்குமாறு கூறியுள்ளார். அப்போது இவர் தான் பொலிஸ் சார்ஜன்ட் என்றும் மனைவி வரும் வரை காத்திருக்கிறார் என்றும் கூறி யுள்ளார்.

இதனையடுத்து கோபமுற்ற சிப்பாய் பொலிஸ் சார்ஜன்டை கடுமையாகத் தாக்கினார். இதன் போது மாத்தளை பழைய பொலிஸ் நிலையத்திலுள்ள பொலிஸார் ஓடிச்சென்று இவரைக் காப்பாற்றியதுடன் சிப்பாயை நையப் புடைத்து மாத்தளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் மாத்தளை அரச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றார். (எி)

## மண்சரிவு ஏற்படும் அபாயம்

மாத்தளை,பெப்.2

மலையகத்தில் கடந்த இரு நாள்களாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த யட்டவத்த பிரதேச செயலக பிரிவில் செலகம கிராம அதிகாரி பிரிவில் மண்சரிவு ஏற்படும் அபாயமுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது. தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையத்தின் சிரேஷ்ட அதிகாரி சீ.கே. மொரேமட நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை அந்தப்பிரதேசத்திற்குச் சென்று ஆய்வுகளை நடத்தியதுடன் அந்தப் பிரதேசத்தில் வசித்த 25 குடும்பங்களை உடனடியாக வெளியேற்றுவதற்கும் ஏற்பாடுகளை மேற்கொண்டார். மேல் பகுதியிலிருந்து கீழ் நோக்கி வரக்கூடிய கற்பாறைகளை உடைத்து ஒதுக்குவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**பாதிக்கப்பட்ட அழகியல் பட்டதாரிகள் ஒன்று கூடல்**

அழகியல் பட்டதாரிகளை ஆசிரியர்களாக ஆள்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றி நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படாத பட்டதாரிகள் அனைவரும் யாழ்ப்பாணம் பெருமாள் கோயில் முன்பாக (நாளை)03.02.2011 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு தவறாது சமுகமளிக்கவும்.

பாதிக்கப்பட்ட அழகியல் பட்டதாரிகள்

**அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் 511 ஆவது நவீன நாடகம் 'அயலவர்கள்'**

இலங்கை வானொலியில் 05.02.2011 அன்று இரவு இணையத் தளத்திலும் பார்க்கலாம்.

**வீடு வாடகைக்கு உண்டு**

திருநெல்வேலிச் சந்திக்கு அருகில் (சந்தைக்கு அருகில்) பலாலி வீதியில் 4 அறைகள், குளியலறை, குசினி புதிதாகத் திருத்தப்பட்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0779184514
0779625958

**வீடும் கடையும் வாடகைக்கு**

மணிக்கூட்டு வீதியில் 'ஞானம் ஹொட்டேல் அண்மையில்' 2 அறைகளுடன் கூடிய வீடும், கடைகளும் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0718052281

**விற்பனைக்கு**

252 - XXXX தொடர் இலக்கமுடைய டொல்பின் ஹைவஸ் வான் விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு 0750397719

**கோழிக்குஞ்சு விநியோகம்**

வைரகா பாம் புறொயிலர் குஞ்சுகள் 4.02.2011 இலும் சிவப்புப் பேட்டுக்குஞ்சுகள் 07.02.2011 இலும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். விபரங்களுக்கு எஸ்.கிருஷ்ணகுமார் விதானை வளவு மானிப்பாய், T.P 0772338084



# பீமரத சாந்தியும் நூல் வெளியீடும்

குருநாகல் மாவட்டம் குளியாப்பிட்டியைச் சேர்ந்த சிவஸ்ரீ இராமச்சந்திர ஐயர் பாலச்சந்திரக் குருக்கள் ஸ்ரீமதி பராசக்தி அம்மா தம்பதிகள்

இன்று (02.02.2011) புதன்கிழமை குளியாப்பிட்டியிலுள்ள தமது இல்லத்தில் பீமரத சாந்தி நிகழ்ச்சியினை ஹோமம், பூஜை, தானம், விருந்துபசாரம் முதலிய வழிபாடுகளுடனும்

*ஸ்ரீமஹாகணபதி ஹோம சஹித*
*ஸ்ரீ மஹா லக்ஷ்மி ஹோம விதானம்*

என்ற சமஸ்கிருத நூல் வெளியீட்டுடனும் நடத்தித் தமது பவள விழாவைப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் கொண்டாடி மகிழ்கிறார்கள்.

அவர்கள் சகல சௌபாக்கியங்களுடனும் நீடூழி வாழ எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்தித்துப் பவளவிழாத் தம்பதிகளின் ஆசிவேண்டி நமஸ்கரிக்கின்றோம்.

கோப்பாய் சிவம் குடும்பத்தினர்.




மானிப்பாய், வேலக்கைப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த சு.சிறீகரசர்மா - நாதவர்ஷனி தம்பதியரின் செல்வப் புதல்வி

## ஜயஸ்வினி

தனது மூன்றாவது பிறந்த நாளை இன்று (02.02.2011) புதன்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை மானிப்பாய் வேறகை முருகன், புங்குடுதீவு கண்ணகை அம்மன் துணையோடு நோய் நொடியின்றி சகல செல்வங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

# மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து



**வாழ்த்துவோர்:**

★ சு.சிறீகரசர்மா- நாதவர்ஷனி (அப்பா, அம்மா)
★ சிவஸ்ரீ ந.சுப்பிரமணியக் குருக்கள் - நிரஞ்சனாதேவி (அப்பப்பா, அப்பம்மா)
★ சிவஸ்ரீ ந.இரவீந்திரக் குருக்கள்- ரோகிணி (தாத்தா, அம்மம்மா)
★ ரவீந்திர சர்மா (மாமா)
★ சு.கிருபாகரசர்மா - கார்த்திகாயினி, ஹரித்ரன், யுதிஸ்ரன் (பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, தம்பி - சுவிஸ்)
★ சு.சுபாகரசர்மா-காமகோடிகா (சித்தப்பா, சித்தி - பிரான்ஸ்)
★ சு.சனாதன் (சித்தப்பா - பிரான்ஸ்))
★ சு.சிறீகௌரி (அத்தை)
★ இ.ஜனார்த்தன், இ.சபரீசன், இ.ஸ்ரீசுதர்சன், இ.மதுசுதன் (மாமாமார்)




மானிப்பாய்

# நிறுவனங்களின் வெளியேற்றத்தால் நிவாரண நடவடிக்கையில் இடைவெளி

மட்டக்களப்பு,பெப்.2

சுனாமி மற்றும் யுத்த அனர்த்தத்தின்போது பல சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மூன்று மாதத்துக்கான உலருணவை வழங்கியும் மீள்கட்டுமானப் பணியிலும் பங்களிப்பு செய்துள்ளன. அந்தநிறுவனங்கள் பல தற்போது நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டதனால் வெள்ளத்தினால் பாதிக்கப் பட்ட மக்களுக்கான நிவாரண பணியில் இடைவெளி காணப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கோடைமேடு கிராம மக்களுக்கு கனடாவில் உள்ள திருகோணமலை நலன்புரி சங்கத்தின் உதவியுடன் உலருணவு நிவாரணப் பொருள்களை நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா நேரில் சென்று வழங்கிவைத்தார்.

இந்தநிகழ்வு கோடைமேடு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கே.விஜயரெட்ணம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில்,

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் மீனவர்கள் அந்தப் பாதிப்பில் இருந்து மீளமுடியாத நிலை தொடர்ந்து தென்படுகின்றது. அழிந்த விவசாயத்தின் மிகுதியினை விவசாயிகளால் பாதுகாக்க முடியாமல் மழை தொடர்ந்தும் பெய்து கொண்டிருக்கின்றது. மீனவர்கள் வாவி மீன்பிடியில் ஈடுபடக்கூடிய சூழ்நிலை காணப்பட்டாலும் மீன்களுக்கு ஏற்பட்ட காயம் காரணமாக அந்த மீன்களை மக்கள் உண்ண விரும்பாததினால் மீனவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.(204)

மனிதாபிமானம்...



வழங்கல்:-கிழக்கு மாகாண மக்களின் சுகாதார நலன்களைப் பேணுவதற்காக குடும்ப புனர்வாழ்வு நிலையத்தினால் மாகாணத்திலுள்ள மூன்றுவைத்தியசாலைகளுக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (204)

# உணவுக்குக் கையேந்தும் நிலையில் தமிழ்ச் சமூகம்

உணவுக்காக இரவு 12 மணிவரையில் கையேந்தும் நிலைக்கு எமது சமூகம் சென்றுள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, கிரான்குளம் - கதிரொளி கலைக் கல்விக்கழகம் நடத்திய பரிசளிப்பு விழா வில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

பாதிக்கப்பட்ட மக்களுக்காக வெளிநாடுகள் வழங்கிய பணம் எங்கே போனது? எமது மக்கள் இன்று உணவுக்காக கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எமது கல்வியை அரசியலுக்குப் பயன்படுத்த சிலர் முயற்சிக்கின்றனர். இந்தச் செயல் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். கிழக்கு பல்கலைக்கழகத்தில் அரசியல் தலையீடுகள் இல்லாமல் இயங்கச் செய்யவேண்டும்.

பல்கலைக்கழகம் என்பது உயர் கல்விப் பீடம். அங்கு தேவையற்ற தலையீடுகள் இருக்கக் கூடாது. இன்று மாணவர்களிடையே பல பிரச்சினைகள் ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன - என்றார்.

# அரசாங்கத்தின் விட்டுக் கொடுப்பு நீண்ட கால அரசியல் பயணம்

அம்பாறை,பெப்.2

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விரும்பிய இடங்களில் தனித்து போட்டியிடலாம் என்ற அரசாங்கதின் விட்டுக் கொடுப்பு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முஸ்லிம் காங்கிரஸோடு நீண்ட கால அரசியல் பயணம் மேற்கொள்ள எடுத்த சாணக்கியமான ஒரு முடிவாகும் என அக்கட்சியின் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

1990ஆம் ஆண்டு பயங்கரவாதிகளினால் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சம்மாந்துறைத் தொகுதி அமைப்பாளருமான அஷ் -ஷஹீத் எம்.வை.எம்.மன்சூரின் 21ஆவது ஆண்டு நினைவு தின வைபவமும், துஆப் பிரார்த்தனையும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஐ.எம். மன்சூர் தலைமையில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நினைவுப் பேருரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடு முழுவதும் 51 இடங்களில் தனித்தும், 22 இடங்களில் அரசோடு சேர்ந்தும் போட்டியிடுகின்றது. இது அரசின் முழு அங்கிகாரமாகும் -என்றார்.

(204)

# அம்பாறை மாவட்டத்தில் நெல் அறுவடை ஆரம்பம்

அம்பாறை, பெப்.2

அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக வேளாண்மை அறுவடை ஆரம்பமாகியுள்ளது. இந்த முறை பெய்த அடைமழையாலும், ஏற்பட்ட வெள்ளப் பெருக்காலும் பெரும்பாலான வேளாண்மைகள் பாதிப்புக்கும் நோய்த்தாக்கங்களுக்கும் உள்ளாகியுள்ளன என விவசாயிகள் கவலை தெரிவிக்கிறார்கள்.

ஒரு ஏக்கருக்கு 30மூடைகள் நெல் விளைச்சல் தரக்கூடிய காணிகள் தற்போது 14 மூடைகள் வீதமே தருகின்றன. இதனால் தமது முதலீட்டைக் கூடப் பெற முடியாத அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

வெள்ளத்திற்குப் பின்னர் பெரும்பாலான கதிர்கள் வெறும் பதருள்ள வெள்ளைக் கதிர்களாகியுள்ளன. அறக்கொட்டி, இலைச்சுருட்டி ஆகிய நோய்களும் வேளாண்மையைப் பெருவாரியாகத் தாக்கியுள்ளன. நெற்காணிகளைக் குத்தகைக்குப் பெற்று வேளாண்மை செய்தவர்களுக்கு கூடுதலான நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அடுத்த சிறு போகத்துக்கான முதலீடு கிடைக்காமல் போய்விடலாம் என்ற அச்சமும் அம்பாறை மாவட்ட விவசாயிகள் மத்தியில் நிலவுகின்றது.

(ளி)

# மட்டக்களப்பில் மர்மமான முறையில் வெடிப்புச் சத்தம்; மக்கள் பதற்றம்

மட்டக்களப்பு,பெப்.2

மட்டக்களப்பு, பாசிக்குடா பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணியளவில் திடீரென பெரும் சத்தத்துடன் வெடிப்பு சத்தமொன்று கேட்டதனால் அப்பகுதி மக்கள் பதற்றம் அடைந்துள்ளனர்.

இந்த வெடிப்புச் சத்தத்துக்கான காரணம் இதுவரையில் அறியப்படாத நிலையில் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸாரும் இராணுவத்தினரும் மேற்கொண்டு வருகின்றனர் என்று பாசிக்குடா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குண்டொன்று வெடித்தது போல இந்தச் சத்தம் ஏற்பட்டிருந்த போதிலும் அவ்வாறான சம்பவமொன்று அப்பகுதியில் ஏற்பட்டதற்கான தடயமோ எவ்வித சேதங்களோ ஏற்பட்டதாக இதுவரை மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவரவில்லை என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தநிலையில் பாசிக்குடா பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து சுற்றிவளைப்பு தேடுதல்களில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (204)

# மட்டக்களப்பில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்குக் கடன் திட்டம்

மட்டக்களப்பு,பெப்.2

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு சமுர்த்தி அதிகார சபையினால் கடன் வழங்கப்படவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி பிரதிப் பணிப்பாளர் எம்.நடேசராசா தெரிவித்துள்ளார்.

இதற்காக சமுர்த்தி அதிகார சபை மட்டக்களப்பு மாவட்டத்துக்கென 275 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்து என அவர் குறிப்பிட்டார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் ஆகியோரிடத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு நிவாரணம் வழங்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் அனுமதியின் பேரில் சமுர்த்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் இந்நிதி முதற்கட்டமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரத்திலேயே இக்கடன் வழங்கப்படவுள்ளது. சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவருக்கு தலா ஒரு லட்சம் ரூபா வீதம் இக்கடன் வழங்கப்படவுள்ளதாகவும் குறித்த கடன் ஐந்து வருட திட்டத்தில் மிகவும் குறைந்த வட்டிவீதத்தில் அறவிடப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (204)

# மீன்களுக்கு காயம் ஏற்பட்டதால் மீனவக் குடும்பங்கள் பாதிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் போது வாவியில் உள்ள மீன்கள் காயத்துக்கு உள்ளாகி இருப்பதனால் வாவியில் இருந்து பிடிக்கப்படும் மீன்களை உண்பதை மக்கள் தவிர்த்துள்ளனர். இதனால் வாவியில் மீன் பிடித் தொழிலினை மேற்கொண்டு வரும் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மீன்களுக்கு ஏற்பட்ட காயம் காரணமாக சுமார் 11,500 மீனவ குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் உதவிப்பணிப்பாளர் எஸ்.ரி.ஜோர்ஜ் தெரிவித்துள்ளார். மீன்களுக்கு ஏற்பட்ட காயத்தினால் அந்த மீன்களை உண்பதால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது எனவும் அவற்றை அச்சமின்றி மக்கள் உட்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (204)

# மட்டக்களப்பு மாவட்ட கிராம உத்தியோகத்தர்கள் இன்று காலை ஒருமணிநேர பணிப்பகிஷ்கரிப்பில்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல கிராம உத்தியோகத்தர்களையும் இன்று புதன்கிழமை ஒருமணி நேர பணிபகிஷ்கரிப்பல் ஈடுபடுமாறு ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்க மட்டக்களப்பு மாவட்ட கிளையின் செயலாளர் என். அற்புதராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ள நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த இரண்டு கிராம உத்தியோகத்தர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு இடம் பெறவுள்ளதாகவும் அவர் தெரித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினையடுத்து நிவாரணப் பணிகளில் ஈடு பட்டிருந்த மண்முனைப் பற்று பிரதேச செயலக பிரிவிலுள்ள கிராம உத்தியோகத்தர் ஒரு வரும் அதேபோன்று கடந்த 28 ஆம் திகதி மகிழடித்தீவு கிராம உத்தியோகத்தரும் தாக்கப்பட்டனர். இவ்வாறான சம்பவங்களுக்கு பொலிஸார் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கவும் இன்று காலை ஒருமணி நேர பணிப்பகிஷ்கரிப்பு இடம்பெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (204)

# 27 ஊடகர்கள் கொலை; அரசு நடவடிக்கை எடுக்காது பாராமுகம்

கொழும்பு, பெப். 2

27ஊடகவியலாளர்கள் கடந்த இரண்டு வருடங்களில் கொல்லப்பட்டுள்ளனர். 50 இற்கும் மேற்பட்ட ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனினும் இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எவரையும் இதுவரை சட்டத்தின்முன் நிறுத்துவதற்கு அரசு முயற்சிக்காமல் இந்த விடயத்தில் பாராமுகமாகச் செயற்படுகின்றது - என்று ஐந்து ஊடக அமைப்புக்களின் ஒன்றியம் நேற்றுமுன்தினம் குற்றஞ் சாட்டியது.

ஊடகங்கள்மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்கள், அடக்குமுறைகள் தொடர்பாகவும், 'லங்கா ஈ நியூஸ்' இணையத்தள ஊடக நிறுவனம் மீது நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பானதுமான ஊடகவியலாளர்கள் மாநாடு நேற்று முன்தினம் மாலை இலங்கை ஊடகவியலாளர் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.அதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஐந்து ஊடக அமைப்பின் பிரதிநிதிகள் மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்தார்கள்.

இந்த ஊடகவியலாளர்கள் மாநாட்டில் உரையாற்றிய ஊடக ஊழியர் தொழிற்சங்கச் சம்மேளனத்தின் தலைவர் கூறியவை வருமாறு -

ஊடகவியலாளர் பிரகீத் காணாமல்போய் ஒருவருடமாகிறது. சிரேஷ்ட ஊடகவியலாளர் லஸந்த விக்கிரமதுங்கவின் கொலை விசாரணை தொடர்கிறது. கடந்த 2 வருடங்களில் 27 ஊடகவியலாளர்கள்கொல்லப்பட்டுள்ளனர். 50 இற்கும் மேற்பட்ட ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டுள்ளன.

அரசின் பாதுகாப்பு பலமாகவுள்ள பகுதிகளிலேயே இப்படியான சம்பவங்கள் இடம்பெறுவதை அரசால் கட்டுப்படுத்த முடியாதுள்ளது.

இதுவரை தாக்கப் பட்டது, தீக்கிரையாக்கப்பட்டது ஊடக நிறுவனங்கள் அல்ல. தகவல்களை அறிந்துகொள்ளும் மக்களது அடிப்படை உரிமையேகளே- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

# புலிகளின் ஆதரவு சக்திகளுக்கு இலங்கை பணியக் கூடாது

## அமெரிக்காவுக்கான தூதுவர் சாலிய தெரிவிப்பு

கொழும்பு, பெப். 2

விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவுக் குழுக்கள் மற்றும் அமைப்புகள் போன்றவற்றால் மேற்கொள்ளப்படுகின்ற பொய்ப் பிரசாரங்களுக்கு இலங்கை அஞ்சக் கூடாது - என்று அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் சாலிய விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக இனப்படுகொலைகளுக்கு எதிரான தமிழர் அமைப்பால் தாக்கல் செய்யப்பட்டு இருக்கும் வழக்குக் குறித்துக் கருத்துக் கூறியபோதே இவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலி ஆதரவு சக்திகள் சில பயங்கரவாதத்தை வளர்த்தெடுப்பதற்குத் தற்போதும் நிதி திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

ஆனால் பயங்கரவாதத்துக்கு ஆதரவான நடவடிக்கைகளை எந்தவொரு ஜனநாயக அரசும் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாது.

அரசும் பொதுமக்களும் புலிகள் இயக்கம் மீண்டும் தலைதூக்குவதற்கு இடம் அளிக்கப்போவதில்லை.

புலி ஆதரவு அமைப்புக்கள் அரசுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அவப் பெயரை ஏற்படுத்தும் நடவடிக்கையில் தற்போது முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றன.- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

## அரச பாடசாலைகளில் 4,000 ஆசிரியர்களுக்கு வெற்றிடம்

நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள அரச பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பிரதான பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான 4000 வெற்றிடங்கள் நிலவுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடமேல் மாகாணத்தில் 500 வெற்றிடங்களும் வடமத்திய மாகாணத்தில் 666, மேல் மாகாணத்தில் 500, சப்ரகமுவ மாகாணத்தில் 503, அம் மாகாணத்தின் அயல் பிரதேசங்களில் 300, தென் மாகாணத்தில் 156, மத்திய மாகாணத்தில் 500 வெற்றிடங்களும் நிலவுகின்றன.

உலக ஆசிரியர் -மாணவர் கோட்பாட்டின் படி 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் இருக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருந்தபோதும் இலங்கையில் 17 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற ரீதியில் உள்ளனர் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன கூறியுள்ளார்.

நாடு முழுவதிலும் மொத்தமாகப் பார்க்கும்போது ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது என்றும் அதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

**கண்காட்சி...**



ஆரம்பம்: இந்திய கல்விக் கண்காட்சி கடந்த சனிக்கிழமை காலை கொழும்பிலுள்ள இலங்கைக் கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது. இந்தக் கண்காட்சியினை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்த் ஆரம்பித்துவைத்தார். (204)

## ஈழ அகதிகள் 5 ஆவது நாளாக உண்ணாவிரதம்; ஐவர் மயக்கம்

சென்னை,பெப்.2

தமிழகம், செங்கல்பட்டு முகாமில் இலங்கைத் தமிழ் அகதிகள் 18 பேர் நேற்றுமுன்தினம் 5 ஆவது நாளாகவும் தொடர் உண்ணாவிரதம் இருந்தனர். இவர்களில் ஐவர் 5 பேர் நேற்றுமுன்தினம் மயங்கி விழுந்தனர்.

செங்கல்பட்டு அகதிகள் சிறப்பு முகாமில் கியூப் பிரிவுப் பொலிஸாரால் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு, 28 பேர் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தங்களை விடுவிக்கக்கோரி 5 நாளாகத் தொடர் உணவுப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் 5 பேர் நேற்றுமுன்தினம் மயங்கி விழுந்தனர்.

உலகில் பிற நாடுகளில் கூட ஈழத் தமிழர்களின் அடிப்படைத் தேவைகள் நிறை வேற்றப்படுகின்றன. ஆனால் உரிமை உள்ள தமிழ்நாட்டில் அவர்களது அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்படுகின்றன எனக் கோரியே அவர்கள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துகின்றனர். (சி)

# கிழக்குப் பல்கலைக்கு உயரதிகாரி நியமனம்; கடுமையாக எதிர்க்கிறார் மட்டு. மாவட்ட எம்.பி.

கொழும்பு,பெப்.2

மட்டக்களப்பில் அமைந்துள்ள கிழக்கு பல்கலைக்கழகத்தில் தற்போது சிங்கள இனத்தவர் ஒருவரை பல்கலைக்கழக நிருவாகத்தை மேற்பார்வை செய்யும் வகையில் அரசாங்கம் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தருக்கு மேலாக நியமித்துள்ளது.

இதையிட்டு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் எதிர்ப்பைத் தெரிவித்து உயர் கல்வி அமைச்சருக்கு மகஜர் அனுப்பியுள்ளார். இந்தக் கடிதத்தில் இந்நியமனத்தை நிறுத்துமாறு கோரியுள்ளார்.

கிழக்கு பல்கலைக்கழக நிருவாகத்தில் சில சீர்கேடுகள் உள்ளதாகவும் அதைத் திருத்துவதற்காக ஒரு சிங்கள உயர் அதிகாரியைத் தற்காலிகமாக நியமித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினரால் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதையிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் கிழக்கு பல்கலைக்கழக நிர்வாகத்தைதிருத்த கல்விமான்கள் தமிழர் யாரும் இல்லையா? சிங்களவர்கள் தான் வருகைதந்து திருத்தவேண்டுமா? எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

யுத்தம் முடிவடைந்ததால் அரசு தமிழர்களை அடிமையாக பாவிக்கத் திட்டமிடுகின்றது. காரணம் வடக்கு, கிழக்கில் புத்த விகாரைகளைத் திட்டமிட்டு அமைப்பதுடன் தமிழர்களின் இந்து ஆலயங்கள், அவர்களது பூர்வீக இடங்கள் அழிக்கப்படுகின்றன. தொல்பொருள் பகுதி என்ற வரையறைக்குள் தமிழர்களின் பூர்வீக வாழ்வின் ஆதாரங்களை வடக்கு, கிழக்கு மண்ணில் அழிக்கத் திட்டமிட்டுச் செயற்படுகின்றது.

உயர்கல்விப் பீடங்கள் வடக்கு, கிழக்கு தமிழர் பெரும்பான்மையாக அங்கம் பெறும் பல்கலைக்கழகங்களில் காலெடுத்து வைத்துள்ளது. இது இந்நாட்டில் மேலும் ஒரு சிறுபான்மை இனத்தின் உரிமைகளை ஒடுக்கும் நடவடிக்கையாகும். இதை வன்மையாகக் கண்டிப்பதுடன் இதற்கான சகல நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொள்வோம். இல்லை எனில் எங்கள் மக்களை இணைத்து சாத்வீக ரீதியில் போராட்டங்களை நடத்த முற்படுவோம் என நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார். விரைவில் இந்த விடயமாக நேரடியாக ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வரவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அண்மையில் வெளிவந்த வரவு, செலவுத் திட்டத்திலும் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழர் வாழும் பகுதியில் அமைந்த எந்த ஒரு பல்கலைக்கழகமும் சர்வதேச பல்கலைக்கழகமாக உயர்த்தும் திட்டம் முன்வைக்கப்படவில்லை. சிங்கள மக்களை பெரும்பான்மையாக கொண்ட பல்கலைக்கழகங்களை சர்வதேச தரத்துக்கு உயர்த்த அரசு வரவு, செலவுத் திட்டத்தில் முன்மொழிந்துள்ளது. தமிழர்களும் இந்த நாட்டின் பூர்வீக இனம் என்பதால் எங்களுக்கும் இந்த நாட்டில் உரிமை உண்டு. அதை எப்படியும் பெற்றே தீருவோம் - என மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (204)

# மீனவர் மீதான தாக்குதலை தடுக்க நிரந்தரத் தீர்வு

## கருணாநிதியிடம் மன்மோகன் சிங் உறுதி

கொழும்பு, பெப். 2

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலை தடுக்க நிரந்தரத் தீர்வு காணப்படும் - என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தமிழக முதல்வர் கருணாநிதி உறுதியளித்துள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங்கை, புதுடில்லியில் உள்ள அவரது இல்லத்தில், முதல்வர் கருணாநிதி நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார். சுமார் அரை மணி நேரம் இந்தச் சந்திப்பு நீடித்தது.

இச்சந்திப்பின்போது தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு. உடனிருந்தார்.

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் கொல்லப்படுவது குறித்து கவலை தெரிவித்த முதல்வர் கருணாநிதி, இந்தத் தாக்குதலை தடுக்க உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முதல்வர் கருணாநிதி, தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலைத் தடுக்க நிரந்தரத் தீர்வு காணப்படும் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உறுதி அளித்துள்ளார் - என்று கூறினார்

தமிழகத்தில் கடந்த நவம்பர் மாதம் ஏற்பட்ட மழை, வெள்ள பாதிப்புகளுக்கு தமிழக அரசு கோரிய நிவாரணத் தொகையை விரைவில் வழங்குவதுடன், மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டப் பணிகளுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யுமாறு பிரதமரிடம் கேட்டுக் கொண்டார் என்றும் முதல்வர் தெரிவித்தார். (சி)



மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலையில் நடைபெற்ற கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மானிப்பாய் பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள். (ம)

# உரிய வகையில் கல்வித் தெரிவு தேவை

யாழ்ப்பாணம், பெப்.02

கல்வி பயிலும் ஒவ்வொரு மாணவரும் தனக்கு ஏற்றாற் போல் கல்வியினைத் தேர்ந்தெடுத்துப் பயில வேண் டும்.

இதற்குப் பெற்றோரின் ஆதரவு இருந்தால் மட்டுமே மாணவர்கள் செழிப்பான எதிர்காலத்தினை அடைய முடியும்.

பெற்றோரின் ஆசைக்கு ஏற்ப எல்லா மாணவர்களும் டாக்டராகவோ, பொறியியலாளராகவோ ஆகிவிட முடியாது.

இவ்வாறு தெரிவித்தார் நியூஸிலாந்து மாசே பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஜி.ஜி சேனாக்னா.

'வெளிநாட்டுக் கல்விக்கான சரியானவழி' எனும் தொனிப் பொருளில் அண்மையில் யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடந்த இலவசக் கருத்தரங்கிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மாணவர்களின் எதிர்காலம் பிரகாசமாக இருக்கவேண்டும். அதற்குக் கல்வி ஒரு தடையாக அமைந்திருக்கக் கூடாது. அவர்களின் விருப்பம்போல் சிறந்த ஒரு துறையினைத் தேர்ந்தெடுத்துக் கற்கவேண்டும்.

இதற்காகத் தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் சென்று கல்வியினைத் தொடருகிறார்கள்.

தேர்ந்தெடுக்கும் கல்வியானது தொழில் தேடுவதற்கு ஏற்றால் போல் அமைய வேண்டும்.

கல்வி பயில்வதற்கு ஆர்வமும் ஆசையும் இருப்பதோடு பலமும் பெற்றோர் ஆதரவும் இருத்தல் அவசியம்.

வெளிநாட்டுக் கல்வியினைப் பயில விரும்புவர்கள் அந்தநாடு அபிவிருத்தி அடைந்ததாகவும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் எமது கலாசாரம், சூழலுக்கேற்ப அமைந்திருக்கின்றனவா எனவும் சரியான தகவலை அறிந்த பின்னரே கல்வியினைத் தொடர ஆரம்பிக்க வேண்டும்.

இதற்கு சரியான வழி காட்டலும் அமைய வேண்டும்.

கல்வியினை விருப்புடன் கற்றால் எல்லோரும் நாட்டின் நல்ல பிரஜைகளாக மிளிர முடியும் எனத் தெரிவித்தார். (ம-311)

# தடுப்பு முகாமில் உள்ளோரைப் பார்க்கச் செல்வோருக்கு உதவி

யாழ்ப்பாணம்,பெப்-02

தடுப்பு முகாம்களில் இருக்கும் கணவன் மற்றும் உறவினர்களைப் பார்க்கச் செல்லும் குடும்பப் பெண்களுக்கு ''நெர்டோ'' அமைப்பானது தலா 2000 ரூபாவினை வழங்கவுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட நெர்டோ அமைப்பின் உறுப்பினர் எஸ். சண்முகலிங்கம் தெரிவித்தார்.

ப.நோ.கூ.சங்க மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

நெர்டோ அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் முத்தையன்கட்டுப் பிரதேச மக்களை நேரில் கண்டு உரையாடி னார்கள் அங்கு அதிகமான பெண்கள், கணவன்மாரைப் பிரிந்து வாழ்வதை அவதானிக்க முடிந்தது.

அவ்வாறான குடும்பங்களைச் சேர்ந்த பெண் ஒருவரிடம் கலந்துரையாடியபோது தனது கணவரைப் பார்க்கச் செல்ல பஸ் செலவு மட்டும் 1000 ரூபா முடியும். அத்துடன் ஏனைய செலவுகள் என 2000 ரூபா தேவைப்படும்.

இதனால் நான் கணவனைப் பார்க்கச் செல்ல முயற்சி செய்வது இல்லை என்று கவலையுடன் எமது அங்கத்தவர்களிடம் தெரிவித்துள்ளார்.

இவர்களின் நன்மை கருதித் தான் நாம் இக்கொடுப்பனவை எமது அமைப்பின் ஊடாக வழங்க முன்வந்துள்ளோம்.

அத்துடன் வன்னி மாவட்டத்தில் தொழில் வாய்ப்பற்றவர்களுக்காக மாதிரிப் பண்ணை ஒன்றை அமைத்து வேலை வாய்ப்புக்களையும் வழங்கவுள்ளோம்.

இதற்கான நிதிகளை வெளிநாட்டுப் புலம்பெயர் மக்களிடம் உதவிகளாகப் பெற்று நெர்டோ அமைப்பு வழங்குகின்றது. வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கு நெர்டோ அமைப்பு மூலம் வழங்கப் படுகின்ற உதவிகளுக்கு அரச நிறுவனங்களும் இணைந்து செயற்பட வேண்டும்.

அத்துடன் காணி உறுதிகள் அற்றுப் பல குடும்பங்கள் இருப்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இவர்களுக்கான தீர்வினையும் எமது அமைப்பினூடாக வழங்க முன்வந்துள்ளோம்.

நான் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்பதால் போரின் முன்னர் கிளிநொச்சி மாவட்டம் இருந்த சூழலையும் தற்போதைய சூழலையும் பார்க்கும்போது மனதுக்கு வேதனையாக இருந்தது.

இதுபோன்ற இன்னல்கள் வன்னி மக்களைத் தொடரக் கூடாது என்று தான் இச் செயற்பாடுகளைத் தொடருகின்றோம் - என்றார். (ம-313)

# சீரழிவான சமூகத்தை உருவாக்கிய 30 வருடகால கொடிய யுத்தம்

யாழ்ப்பாணம், பெப்.02

30 வருடங்களாக இடம் பெற்ற யுத்தம் யாழ். மண்ணுக்குத் தந்த பரிசு சீரழிவான ஒரு சமூகமே.

வணபிதா. எஸ். ஆனந்த குமார் இவ்வாறு கவலை தெரிவித்துள்ளார்.

''நெர்டோ'' அமைப்பின் ஏற்பாட்டில் யாழ். ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் இடம் பெற்ற கலந்துரையாடல் நிகழ்வில் கருத்துரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

போர் முடிவடைந்துள்ள தற்போதைய சூழ்நிலையில் யாழ்ப்பாணம் வந்தேருவோர், போவோர் எல்லாம் தங்கிச் செல்லும் கறைபடிந்த பூமியாக மாறிவிட்டது. மக்களின் அவல நிலைகளும் கலாசாரச் சீர்கேடுகளும் மலர்ந்துவிட்டன.

ஒரு நிறுவனம் குடும்பத்தின் சுமையையோ, அல்லது நிதி உதவிகளைக் கொடுப்பதாலோ அவர்களது கஷ்டங்கள் தீர்ந்து போகாது. அவர்களுக்கான ஒரு வேலை வாய்ப்பை வழங்கினால் அவர்களாகவே உழைத்து முன்னேற இடமுண்டு.

குண்டும் குழியுமாகக் கிடக்கும் வீதிகளையும், சீர்கேடாக மாறிக் கொண்டு செல்லும் சூழலையும் யாரும் மாற்றியமைக்க நினைப்பதில்லை.

தொண்டுகளை சமூகத்திற்கு செய்பவர்கள் உரிய முறையில் - நல்ல முறையில் சென்றடைவதற்குத் துணை நிற்கவேண்டும்.

மக்களுக்கு இனாமாக எல்லாவற்றையும் வழங்க அதனைக் கை நீட்டி வாங்க எமது மக்கள் நன்கு பழக்கப்பட்டு விட்டார்கள்.

வெள்ளை வானில்வந்து நின்று மறைவாக ஓரிடத்தில் தண்ணீப் போத்தலைக் கொடுத்தாலும் கை கட்டி நின்று வரிசையாக வாங்கத்தான் எமது மக்கள் தயாராக நிற்கின்றார்கள்.

அவரவர் குடும்பம், அவரவர் படி என்று அவர்களை முன்னேறவிடுங்கள். நல்லதொரு சமுதாயம் உருவாகும்- என்றார். (ம-313)

## வணிகமாணிப் பட்டம் மீண்டும் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 02

வணிகமாணிப் பட்டம் வழங்குவது இடைநிறுத்தப்பட்டிருந்த போதும் மீண்டும் பொதுமக்கள், மாணவர்களின் வேண்டுகோளிற்கிணங்கி மாணவர்களுக்கு வணிகமாணிப் பட்டம் வழங்கப்படவுள்ளது என்று கணக்கியல் துறைத் தலைவர் பேராசிரியர் வேல்நம்பி தெரிவித்தார்.

'விருட்சம்' சஞ்சிகை வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தனது கருத்துக்களைத் தெரிவிக்கையில்:

30 கட்டுரைகளைத் தாங்கிய விருட்சம் சஞ்சிகையானது குறுகிய காலத்தில் குறைந்தளவு மாணவர்களின் திறமையான செயற்பாடுகளாக இன்று வெளியிடப்பட்டுள்ளது.

நான்காம் வருட வணிக பீட மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கிய இச்சஞ்சிகையானது ஏனைய முகாமைத்துவ கற்கை நெறிகளைப் பயிலும் மாணவர்களுக்கும் தூண்டுதலாக இருக்கும்.

விரிவுரையாளர்களின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளால் மாணவர்களின் சுயஆக்கமாக இந்தச் சஞ்சிகையும் சி.டியும் வெளியிடப்பட்டுள்ளன என்றார். (ம-313)

## ஆலயத்துக்கு நிர்வாக சபை புதிதாகத் தெரிவு

தெல்லிப்பழை வித்தகபுரம் பொற்கலன்தம்பை ஞான வைரவர் ஆலய புனருத்தாரண நடவடிக்கைகள் இடம்பெற வுள்ளன.

இதனை முன்னிட்டு புதிய ஆலய பரிபாலனசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். தலைவர்- சு.சிவபால ரெத்தினம், உபதலைவர்-வ. பாலச்சந்திரன், செயலாளர்- தி.செல்வரத்தினம், உபசெயலாளர்- வி.சுப்பிரமணியம், பொருளாளர்- பொ.குமாரசுவாமி, நிர்வாகக்குழு உறுப்பினர்களாக சி.வேலாயுதம், செ.யோகநாதன், க.மகேஸ்வரன், த.கணேசமூர்த்தி, சி.அம்பலவாணர், திருமதி க.தவராணி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ம-86)

## விண்ணப்பம் கோரல்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் க.பொ.த உயர் தர பரீட்சை 2011 பழைய பாடத்திட்டப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பாடசாலை ஊடாக தோற்றஇருக்கும் பரீட்சார்த்திகள் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமைக்கு பாடசாலைக்கு வருகை தந்து பதிவு செய்து கொள்ளமாறு பாடசாலை அதிபர் எஸ். சயந்தன் கேட்டுக் கொண்டுள்ளார்.

உதயன்
02 பெப்ரவரி 2011

## தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேஷம்:**
வழக்கமான வேலைகளில் சுணக்கம் ஏற்பட்டு பின்னர் முடிவுக்கு வரும். பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். உடன் பிறப்புக்கள் உதவி கரமாக இருப்பர். திடீர் வெளியூர்ப் பயணங்கள் செல்லலாம். சிலரிடம் அவசர உதவிகள் பெறலாம். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம்.

**ரிஷபம்:**
மற்றவர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். பொறுப்பான வேலைகளால் அலைக்கழிப்புகளுக்கு ஆள்படலாம். பிறருக்காக உங்கள் கைப்பணத்தைச் செலவிடலாம். ஆசைப்பட்டு சில பொருள்களை வாங்கி விட்டு அதில் திருப்தி இல்லாமல் போகலாம். புதிய முயற்சிகளைத் தவிர்க்க வேண்டிய நாள்.

**மிதுனம்:**
எண்ணம் போல எல்லாம் நடக்கும் நாள். உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த ஒத்துழைப்பு கிடைக்கும். நாடி வந்த சிலருக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். அரசியல் தொடர்புடையவர்கள் சர்ச்சைக்குரிய பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். புதிய அனுபவம் பெறலாம்.

**கடகம்:**
ஒரு வரவை எதிர்பார்க்கும் நேரத்தில், மற்றொரு வரவும் சேர்ந்து வரலாம். சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு ஆள்படலாம். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரைப் பார்க்க நேரிடலாம். மற்றவர்கள் மத்தியில் உங்களைப் பெரிய ஆளாகக் காட்டிக் கொள்ள முற்படுவீர்கள். மனைவி, உறவுப் பெண்கள் வழியில் சுபச் செலவுகள் நேரும்.

**சிம்மம்:**
சிலரை நம்பி முக்கிய வேலையை ஒப்படைத்து விட்டு, அது எப்படி ஆகுமோ எனப் பயம் கொள்ளலாம். பயணங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். நீண்ட நாள்களாகச் சந்திக்க நினைத்த ஒருவரை சந்திக்கலாம். இறை வழிபாடுகளுக்காக கணிசமான பணத்தைச் செலவு செய்வீர்கள். சிலரின் அதிருப்திக்கு ஆளாகலாம்.

**கன்னி:**
மறக்க முடியாத நிகழ்ச்சிகள் நடக்கலாம். கணவன் மனைவி இடையே சண்டை, சச்சரவுகள் ஏற்படலாம். தாயார் உடல் நலன் தொடர்பான விடயங்களில் அக்கறை அவசியம். திட்டமிட்ட காரியங்கள் சுணக்கமின்றிச் சரியான நேரத்திற்கு நடக்கலாம். பயணங்கள் உற்சாகம் மகிழ்ச்சி, தருவதாக அமையும்.

**துலாம்:**
பணவரவுகளால் கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். எடுத்த காரியங்களில் எதிர்பாராத வெற்றி கிடைக்கும். வெளியூர்களில் இருக்கும் உறவினர் ஒருவர் உங்களைத் தொடர்பு கொண்டு முக்கிய தகவல்களைச் சொல்லலாம். நண்பர் ஒருவர் உங்களுக்கு நல்ல ஆலோசனை சொல்லலாம். ஆனந்தமான நாள்.

**விருச்சிகம்:**
சிலர் உங்களை வெறுப்பேற்றும் வகையில் நடந்து கொள்ளலாம். எதிர்பாராமல் நடக்கும் நிகழ்ச்சி ஒன்றால் பதட்டம் அடையலாம். சக ஊழியர் ஒருவர் உங்களிடம் பண உதவி கேட்கலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

**தனுசு:**
உறவினர்களால் மகிழ்ச்சி, சந்தோஷம் உண்டு. தேக ஆரோக்கியக் குறைவுகள் நீங்கித் தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். சில நாள்களுக்கு முன் பாதியில் விட்ட பணி ஒன்றை இன்று வெற்றிகரமாகச் செய்வீர்கள். கணவன் மனைவி இடையே அன்னியோன்யம் கூடும். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள்.

**மகரம்:**
எந்தக் காரியத்தையும் எடுத்தோம், முடித்தோம் எனச் செய்ய முடியாமல் தடை ஏற்படலாம். மருத்துவம் தொடர்பான விடயங்களுக்காகக் கணிசமான பணத்தைச் செலவிடலாம். எங்காவது செல்லும் வழியில் வாகனங்கள் பழுதாகித் தொந்தரவு கொடுக்கலாம். சிலர் உங்களுக்கு உதவி செய்ய முன்வந்தும் அதை மறுப்பீர்கள்.

**கும்பம்:**
உங்களுக்கு உதவுவதாகச் சொன்ன நண்பர்கள் சரியான நேரத்தில் கை கொடுத்து உதவுவர். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். பொழுது போக்கு விடயங்களில் நாட்டம் செல்லும். உங்களுக்காகவோ அல்லது மற்றவர்களுக்காகவே ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். அலைச்சல் குறைந்து ஓய்வெடுக்கும் நாள்.

**மீனம்:**
ஆதாயத்தை எதிர்பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். அண்டை அயலாரின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். புதியவர்கள் சிலரின் உதவி கிடைக்கலாம். உங்களின் வேலை ஒன்றை உறவினர் மூலம் முடித்துக் கொள்வீர்கள். நாளை சந்திக்க நினைத்த நண்பர் ஒருவரை இன்றே சந்திக்கலாம். செல்வாக்கு கூடும்.

# மக்களின் விடுதலையை வென்றெடுக்கும் சூடான்...!

*(நேற்றைய தொடர்ச்சி)*

பிளவுகளின் ஓர் அங்கமாக, கரெங்கின் தலைமையை மறுத்து நசிர் என்பவர் தனிக் குழுவாகப் பிரிந்து சென்றார். இந்தக் குழு பின்னர் சூடானிய விடுதலை இயக்கத்துக்கு எதிரான தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியிருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொண்ட வடசூடான், சூடானிய விடுதலைப் படையின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது படையெடுத்து பல இடங்களைக் கைப்பற்றிக் கொண்டது.

இவ்வாறு நீடித்துக் கொண்டே போன உள் நாட்டுப் போர் இரு தரப்புகளுக்கும் இடையில் 2005 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கையின் மூலம் முடிவுக்கு வந்தது.

அமெரிக்காவின் மறைமுக ஆதரவுடனும் கென்யாவின் வெளிப்படையான அனுசரணையுடனும் கைச்சாத்தான இந்த உடன்படிக்கை 6 வருட இடைக்காலத் தன்னாட்சியையும், தனிநாட்டுத் தீர் வையும் கடந்து தென் சூடானிய மக்களுக்குப் பிரிந்து வாழும் அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.


வெளிநாட்டுப் பிரஜைகள் வாக்களிப்பின்போது...

**சவால்களும் சமாளிப்புக்களும்**


இனவிடுதலைக்காக ஆயுதமேந்திப் போராடும் எந்தவொரு இயக்கமும் அமைதிப் பேச்சு என்கிற சர்வதேச வலைக்குள் சிக்குவதற்கு முன்னர் தமது அமைப்புக்குள் எழும் எல்லாச் சிக்கல்களையும் இலகுவாகத் தீர்த்துவிடுகின்றன. ஆனால், அமைதிப் பேச்சுக்குள் நுழைந்த பின்னர் அமைப்புக்குள் உருவாகும் அத்தகைய சிக்கல்களை அவற்றால் இலகுவாகக் கையாள முடிவதில்லை. இதன் காரணமாகவே சர்வதேச அனுசரணையுடன் கைச்சாத்திடப்படும் சமாதானப் பொதிகளில் பெரும்பாலானவை விடுதலைப் போராட்டங்களை அழித்தே இருக்கின்றன. பாலஸ்தீன விடுதலைப் போராட்டம், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் என்பன இதற்கு அண்மையச் சான்றுகள் ஆகும்.

ஆனால், சூடானிய விடுதலை இயக்கம் இந்தச் சர்வதேச நெருக்குதலைச் சரிவரக் கையாண்டு தன்னையும் பாதுகாத்து மக்களின் விடுதலையையும் வென்றெடுத்திருக்கிறது.

பல இக்கட்டான சூழ்நிலைகளைக் கடந்தே வந்தாலும் தனது இலக்கை அது ஓரளவுக்காவது எட்டியிருக்கிறது. குறிப்பாகச் சமாதானக் காலப் பகுதியில் இதன் தலைவர் கலாநிதி ஜோன் கரெங்க விமான விபத்துச் சதியில் கொல்லப்பட்டார். இருந்தபோதிலும், நிலை தடுமாறாது தொடர்ந்து முன்னேறியது சூடானிய மக்கள் விடுதலைப்படை. தனது மக்களின் விடுதலைக் காகத் தலைமை தாங்கிப் போராடிய தலைவரை இழந்த போதும் அந்த இயக்கம் சமாதான முன்னெடுப்புகளுக்குப் பாதகமான முறைகளைக் கைவிட்டு சாதகமான போக்குகளையே கடைப்பிடித்தது. தமது இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்று வட சூடானிய அரசுடன் இணைந்து செயற்பட் டவர்கள் மீண்டும் வந்த போது 'துரோகி' என்று அடையாளப்படுத்தாமல் இயக்கம் நடந்து கொண்ட முறையும் சர்வதேச ரீதியாக இந்த இயக்கத்துக்குப் பெரும் கீர்த்தியை ஏற்படுத்தியது.

கொஞ்சமும் சமரசப் போக்கிலிருந்து விலகிக் கொள்ளாமல் எல்லாச் சவால்களையும் சமாளித்து இறுதி வெற்றியை அது பதிவு செய்துள்ளது. ஆனால், சூடானிய மக்கள் விடுதலைப் படை இதுவரை எதிர்கொண்டவை அல்ல சவால்கள், இனி எழப் போகும் சிக்கல்களே மிகப் பெரியவை என்கிறார்கள் அவதானிகள். இதுவரையும் இவர்கள் செய்த அர்ப்பணிப்புக்களின் விளைவாக உருவான தனி நாட்டை சுதந்திரத்திற்குப் பின்னான நிலை குழப்பத்திற்குள் ஆழ்த்திவிடும் எனக் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

தென்சூடான் என்கிற தேசிய அரசுக்குரிய தேசிய கீதம், கொடி போன்றன ஏற்கனவே உருவாக்கப்பட்டுவிட்டன. புதிய நாட்டுக்காகப் பல பெயர்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. தெற்கு, தென்சூடான், புதிய சூடான் மற்றும் குஸ் போன்ற பெயர்கள் முன்மொழிவில் உள்ளன. எதுவும் உறுதி செய்யப் படவில்லை.



அரசியல் பிரமுகர் ஒருவர் வாக்களிப்பில்...

நாட்டின் உட்கட்டமைப்பு இன்னும் சீரற்ற தாகவே இருக்கிறது. எட்டு மில்லியன் சனத்தொகையைக் கொண்டுள்ள தென்சூடானில் மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் புதிதாகத் தொடங்கப்பட வேண்டும். நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு உரிய ஆளணியையும் வளங்களையும் வேறொரு தேசத்திலிருந்தே பெறவேண்டியிருக்கும். ஏனெனில் சொந்த நாட்டில் அதற்கான ஆளணி வசதிகள் எவையும் இல்லை.

சுகாதாரம், போக்குவரத்து என அனைத்து வாழ்வாதாரத் துறைகளையும் புனரமைப்புச் செய்ய வேண்டிய கட்டா யத்துக்குப் புதிய அரசு தள்ளபட்டுள்ளது.



இவ்வாறான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சர்வதேச கடனுதவிகள் தென்சூடானுக்கு மிகவும் அவசியாமானது. சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தேசங்களுக்கே இந்த உதவிகளை சர்வதேச நிதி நிறுவனங்களிடம் இருந்து பெறுவது சுலபம்.

அந்த அங்கீகாரத்தைப் பெறுவதற்கு, முதலில் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அங்கீகாரத்தைத் தென்சூடான் பெறவேண்டும். அதன் பின்னரே ஐ.நா. பொதுச் சபையும் புதிய நாட்டை அங்கீகரிக்கும்.

எல்லாவற்றுக்கும் முதலில் ஆபிரிக்கக் கண்டத்தில் புதிய தேசமொன்று உதய மாவதை ஆபிரிக்க ஒன்றியம் அங்கீகரிக்கவேண்டும். இதனைத் தொடர்ந்தே உலகின் ஏனைய நாடுகளும் அதற்கான அங்கீகாரத்தை வழங்கும். அனைத் துலக ரீதியில் புதிய நாடு அங்கீகாரத்தினைப் பெற ஐ.நாவின் துணை அவசிய மில்லை. இருப்பினும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றில் கடன் பெறுவதற்கு ஐ.நா வின் அங்கீகாரமும் துணையும் அவசியமாகும்.

2007ஆம் ஆண்டில் தென்சூடானிய அரசு தனக்கென ஒரு தனி நாணயத்தை உருவாக்க முயன்றது. ஆனால் புதிய நாணயம் குறித்து வடசூடான் அரசு சர்ச்சையைக் கிளப்பியதால் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

தென்சூடானின் 90% பொருளாதாரம் எண்ணெய் வளத்திலேயே தங்கியுள்ளது. அதுவும் உடன்படிக்கையின்படி 50% வருமானம் வடசூடானுக்குரியது. தென்சூடான் இறைமையுள்ள தனிநாடானாலும் எப்போதும் வடசூடானுடன் இணங்கிப் போக வேண்டிய அரசியல் பொருளாதாரச் சூழலே அங்கு உண்டு.

தென்சூடானிலிருந்து எண்ணெய் ஏற்றுமதி செய்யப்படும் குழாய்கள் வடசூடானூடாகச் சென்றே செங்கடலை அடைகின்றன. வட சூடானின் எண்ணெய் வணிகத்தில் சீனாவே பெரும் பங்கு வகிப்பதால் முரண்பட்டுக் கொள்ள முடியாத இக்கட்டான நிலையைத் தென்சூடான் அடைந்திருக்கிறது.

இந்தப் பிராந்திய எண்ணெய் வணிகத்தில் அமெரிக்கா - சீனா இடையே ஏற்படப் போகும் போட்டி நிலை சமாதானத்திற்குப் பாதகமானதாக முடியலாம். தென்சூடானின் விடுதலைப் போராட்டம் மீது அக்கறை காட்டிச் செயற்படுகின்ற அனைத்து நாடுகளுமே அங்கிருக்கின்ற எண்ணெய்வளத்தை பங்கிட்டுக் கொள்ளவே முண்டியடித்தன என்பதை இனி வரும் காலங்கள் உணர்த்தும்.

வட, தென் சூடான்களின் பல பிராந்தியங்களும் தனித்து அரசமைப்பதற்கான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. ஏற்கனவே டார்பூர் பிராந்திய மனிதவுரிமை மீறல்கள் தொடர்பான வழக்கில் தேடப்பட்டு வருபவராக வடசூடான் ஜனாதிபதி பஷீர் காணப்படுகிறார்.

இரு தேசங்களுக்கும் எல்லையாக விளங்கும் அபெய் மாகாணம் தான் எந்தச் சூடானுடன் இணைந்திருப்பது அல்லது தனித்து இயங்குவதாக என்பதைத் தீர்மானிக்கத் தனியான வாக்கெடுப்பு நடத்துகிறது. அபெய்யின் எதிர்கால நிலை வடக்குடனா, தெற்குடானா என்பதற்கான முடிவுகள் இன்னும் வெளியாகவில்லை. இங்கும் அதிகளவான எண்ணெய் வளமுண்டு.

இவ்வாறு எழப்போகும் பல பிரச்சினைகளை முன்கூட்டி அறிந்ததனாலேயே அதிகளவான ஆயுதக் குவிப்புக்களை இருதேசங்களும் இரகசியமாகச் செய்து வருகின்றன என எண்ணத் தோன்றுகின்றது. உடன்படிக்கைச் சரத்துப்படி வடசூடான் தன்னிடம் இருக்கும் துணை ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக்களைய வேண்டும். ஆனால், இன்னமும் அது நிறைவேற்றப்படவில்லை.

தென்சூடானின் தற்போதைய அரச நிர்வாகக் கட்டமைப்பானது 100,000 போராளிகளைக் கொண்டவர்களாலேயே நிர்வகிக்கப்படுகின்றது. நிதி, சுகாதாரம், கல்வி, மற்றும் வெளிவிவகாரம், அரசியல் நடவடிக்கைகள் என்று எல்லாவற்றையும் இவர்களே கட்டமைக்கின்றனர். தனியரசு அங்கீகாரத்தின் பின் இயல்பாகவே விடுதலை இயக்கப் பதவிப் போட்டி உளவியல் சிக்கல் புதிய அரசையும் வெகுவாகப் பாதிக்கும். போராளிகள் தண்டிக்கப்படாமல் விடப்படும் சூழல் எழலாம். இது தென்சூடானில் சட்ட ஒழுங்கைச் சீர்குலைப்பதாக அமையும்.

## ஜெரா

கடந்த இருபத்தியிரண்டு வருடகாலக் கொடிய யுத்தத்தின் விளைவாகப் பல இழப்புக்களைத் தாங்கிய தென்சூடானிய மக்கள், விடுதலை வாசலை எட்டி நிற்கிறார்கள். அவர்களைத் தாக்கப் போகும் எல்லாச் சவால்களையும் கடந்து சுதந்திரக் காற்றை முழுமையாகச் சுவாசிக்க வேண்டும். அப்போதே உலகமெங்கும் விடுதலைக்காகப் போராடுகின்ற, போராடித் தோற்ற இனங்களுக்குத் தெளிவானதொரு பாடத்தை வழங்கமுடியும்.

(முற்றும்)

# உயிரை நீடிக்கும் கீரைகள்



ஆரோக்கியத்திற்கு வழிகாட்டும் மருத்துவர்கள் ''பச்சைக் கீரைகளைச் சாப்பிடுங்கள்'' என்கின்ற யோசனையைத்தான் வலியுறுத்திச் சொல்வார்கள். உடனே, நம்மவர்களுக்கு கோபம் வந்துவிடும். ஆடு,மாடுகள் தழைகளை மேய்கிற மாதிரி நம்மைக் கீரைகளைத் தின்னச் சொல்கிறாரே நாம் என்ன ஆடா? அல்லது மாடா? என்று சலித்துக் கொள்வார்கள்.

இந்த இந்த நோய்களுக்கு இந்த இந்தக் காய்கறிகளைச் சாப்பிடுங்கள் என்று மருத்துவர்கள் ஆலோசனை கூறினால், ''நான் என்ன முயலா?'' என்று அலுத்துக் கொள்பவர்கள், முயலைத் தின்பதற்கு வேண்டுமானால் பலபேர் தயாராக இருக்கிறார்கள். ஆனால், முயல் தின்னுகிற விடயங்களைத் தின்னுங்கள் என்று சொன்னால் அவர்களுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வருகிறது.

மருத்துவர்கள் கீரைகளைச் சிபாரிசு செய்வதற்குக் காரணம் என்ன? பொதுவாக, கீரைகளின் விலைகுறைவு என்பதால் அவற்றின் அருமை நமக்குத் தெரிவதில்லை. ஒரு பொருள் அதிகமான விலைக்கு விற்கப்பட்டால் தான் நம்மவர்களுக்கு அதன் மீது அதிக மோகம் உண்டாகும். இந்தக் கீரைகள் சாதாரணமானவை அல்ல. அமிர்தத்தைப்போல் அற்புதமான சக்தி நிறைந்தவை.

புதினா கீரை என்று சொல்கிறோம் அல்லவா. அந்தப் புதினா கீரையை நீரிலே ஊறவைத்து அந்த நீரைக் குடித்தால் அஜீரணம் போய் விடுகிறது. இது எவ்வளவு பெரிய விசயம். இதனை அடிக்கடி முகர்ந்து பார்த்தால் தலைவலி மற்றும் மயக்கம் சரியாகி விடுகிறது. அதனைத் தலையிலே தடவிக் கொண்டால் ''தலைவலிப் பேயே போச்சு'' என்று சந்தோசமாக வசனம் பேசலாம். புதினாக் கீரையுடன் கொஞ்சம் உப்புக் கலந்து கொடுத்தால் இரத்தத்தில் இருக்கிற விஷத்தைக் கூட அது முறித்துவிடும் என்று சொல்லப்படுகிறது.

புதினா இலைகளைக் கொண்டு பல்தேய்க்கும் போது பல்லில் சிக்கியிருக்கின்ற பல சின்னச் சின்னக் கெட்ட பொருள்கள் நீங்கிவிடுகின்றன. பச்சையாக அப்படியே கடித்துச் சாப்பிடுகிறபோது பல்தேய்த்தது போன்ற தூய்மையோடு பற்கள் பளிச்சென்று காட்சியளிக்கும்.

உடம்பிலே இருக்கும் விசத்தன்மைகளை முறிக்கிற வல்லமை புதினாவுக்கு உண்டு. அதைக் காயவைத்து உலர்த்தி,தூள் செய்து ஆரணமாக ஆக்கிக் கொண்டு மூன்று வேளைகளும் தேனில் கலந்த சாப்பிட்டால் பெண்களுக்கு மிகவும் நல்லது என்று மருத்துவம் சொல்கிறது.

அக்கீரையில் இரும்புச்சத்து ஏராளமாக உள்ளது. பிரசவமான பெண்களுக்கு மிகுதியான நன்மைகளைச் செய்யக்கூடிய ஆற்றல்,அக்கீரைக்கு இருக்கிறது. இரத்தச் சோகைப் பிரச்சினைக்கு இது ஒரு மாமருந்து. இப்படியாகப் பல்வேறு கீரைகளின் பல்வேறு மருத்துவக் குணங்களை அடுக்கிக் கொண்டேபோகலாம். மொத்தத்தில் இரத்த விருத்திக்கு இயற்கை அளித்துள்ள பொக்கிஷம்தான் இந்தக் கீரை வகைகள்.

சரியாகச் சமைத்து விட்டால் எந்த உணவையும் உங்களால் ருசித்துச் சாப்பிட முடியும் என்பதில் சந்தேகம் இல்லை. இயற்கை மருத்துவத்தில் காய்கறிகளைப் பெரிய பெரிய துண்டுகளாக நறுக்கச் சொல்கிறார்கள். காரணம் நீங்கள் நறுக்கும் அளவு சின்னதாக ஆக,ஆக அதனுடைய உயிராற்றல் குறைந்து கொண்டே போகிறதாம். எந்தக் காய்கறியாக இருந்தாலும் சரி, எந்தக் கீரையாக இருந்தாலும் சரி சமைப்பவரின் கைப்பக்குவத்தில் தான் ருசி அமைகிறது.

ஒருவேடிக்கையான நிகழ்ச்சியை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்தக் காலத்தில் ஆங்கிலேயர்கள் ரயிலில் பயணம் செய்யும்போது அவர்கள் என்ன உணவு கேட்கிறார்களோ அதைச் சமைத்துக்கொடுக்க வேண்டிய பொறுப்பு ஸ்டேஷன் மாஸ்டர்களுக்கு இருந்ததாம்.

இந்த நிலையில், ஒருமுறை ஆங்கிலேயர் ஒருவர் தான் பயணித்த ரயிலில் இருந்த ஸ்டேஷன் மாஸ்டரிடம் தனக்கு அசைவ உணவு வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அந்த ஸ்டேசன் மாஸ்டரோ,சுத்தசைவம்,அந்த வாசனையைக் கூட அவரால் தாங்கிக் கொள்ள முடியாது . இதை அந்த ஆங்கிலேயரிடம் சொல்லவும் முடியாது.

அப்போது அந்த ஸ்டேஷன் மாஸ்டருக்கு ஒரு யோசனை தோன்றியது. அவர் தன் மனைவியிடம் கெஞ்சிக் கூத்தாடி அசைவ உணவினைத் தயாரித்துத் தரும்படி கேட்டுச் செய்து வந்து கொடுத்தார்.

அந்த ஆங்கிலேயரும் அந்த உணவை ரசித்துச் சுவைத்துச் சாப்பிட்டு விட்டு ''என் வாழ்நாளில் இப்படியொரு சுவையான உணவைச் சாப்பிட்டது இல்லை'' என்று ரிப்போர்ட் எழுதி வைத்து விட்டுப் போய்விட்டார்.

அதன் பிறகு ஸ்டேசன் மாஸ்டர் தன் மனைவியிடம்,''அந்த மனிதர் இப்படிப் பாராட்டிவிட்டுப் போகிறாரே; அப்படியென்ன சமைத்தாய்?'' என்று கேட்டார். உடனே அவர் மனைவி, உங்களுடைய ஒரு செருப்பு இருக்கிறதா பாருங்கள். என்றாளாம். அதாவது அவருடைய தோல் செருப்பையே சமைத்து அந்த ஆங்கிலேயருக்கு விருந்தாகக் கொடுத்துவிட்டாள் அந்தப் பெண்மணி. சமைக்கிறமாதிரிச் சமைத்தால் எதைவேண்டுமானாலும் சாப்பிடுவதற்கு உலகம் தயாராக இருக்கிறது என்பதை வலியுறுத்திவதற்காகத்தான் இந்தக் கதை அமைகின்றது.

எனவே நல்ல கீரைகளை உங்கள் உணவிலே நாள் தோறும் சேர்த்துக் கொள்ளுங்கள் இது ஒரு மிகச் சிறந்த உணவுப்பழக்கமாகும்.

சுகி.சிவம்

உதயன்
02 பெப்ரவரி 2011 புதன்கிழமை

# அன்னை தெரேசாவின் சிறப்பு



உயிரினங்களிலேயே மிக உன்னதமானது மனிதப் பிறவி என்பதில் யாருக்கும் ஐயம் இல்லை. இந்த உயர்வுக்குக் காரணமாக இருப்பது நமது சிந்திக்கும் திறன், பகுத்தறியும் திறன். இத்திறன்களை நல்வழிகளில் மட்டுமே செயற்படுத்தி மேன்மை பெறுவது எமது தலையாய கடமை.

பல மகாத்மாக்கள் அத்தகைய சிறப்பான வாழ்வை வாழ்ந்து காட்டியுள்ளனர். அத்தகைய வாழ்க்கையில் அன்பு, பரிவு இவற்றையே உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர் அன்னை தெரேசா. இவர் 1910 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 27 ஆம் திகதி யுகோஸ்லாவிய ஸ்கோப்ஜே என்னும் ஊரில் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சூக்னஸ் கான்க்ஸா போஜாக்ஸ்யு என்பதாகும். இவரது உள்ளம் சிறு வயதிலிருந்தே பிறருக்கு சேவை புரிவதில் நாட்டம் கொண்டது. 12 வயதிலே கிறிஸ்தவப் பெண் துறவியாக வேண்டும் என உறுதி பூண்டார்.. அதன் அடிப்படையீல் சூக்னஸ் தனது 18 வயதில் அயர்லாந்தில் உள்ள லோரேட்டர் கிறிஸ்தவ மடத்தில் சேர்ந்தார். அங்கு அவருக்கு தெரேசா எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பின்னர் அங்கு ஒரு வருடம் தங்கியிருந்து ஆசிரியர் பயிற்சி உட்படப் பல பயிற்சிகளைப் பெற்றார். பின்னர் பயிற்சி முடித்து 1929 ஆம் ஆண்டு வெளிநாடு அனுப்பத் தேர்வு செய்தபோது அவர் ஆசிரிய சேவைக்காக இந்தியா செல்வதற்கு விருப்பம் தெரிவித்தார். ஆபிரிக்க நாடுகளைப் போன்று இந்தியாவிலும் சமயப் பணி செய்யும் வாய்ப்பு உள்ளதால் கொல்கத்தாவில் உள்ள லொரேட்டோ பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணியாற்றினார். ஆனால் அவரது உள்மனதில் மனித சேவையில் முழுமையாக ஈடுபடவேண்டும் என்ற உணர்வு இடையறாது பொங்கிக்கொண்டு இருந்தது.

1941 புரட்டாதி மாதம் 10 ஆம் திகதி டார்ஜிலிங் நோக்கி ரயிலில் பயணம் செய்யும்போது அவருக்குள் இருந்து கேட்ட கடவுளின் குரல் அவரை உடனடியாக ஆசிரியர் வேலையைத் துறந்து பரம ஏழைகளுக்கு சேவை புரிந்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தத் தூண்டியது.

இதனைத் தொடர்ந்து போப்பாண்டவரின் அனுமதியும் ஆசியும்பெற்று 5 ரூபாயுடன் பைபிளைக் கையில் ஏந்தியவாறு தனது பணியில் முழுமூச்சுடன் இறங்கிய அவர் 1950ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் முறையாக ஏழைகளின் துயர் துடைக்கும் சமயக் குழுவை ஆரம்பித்தார்.

பின்னர் சேரிவாழ் ஏழைகளின் அவலநிலை அவர்களுக்காக சேவை புரியவேண்டும் என்னும் தீர்மானத்தை மேலும் உறுதிப்படுத்தியது என்றே கூறலாம். யாருமற்ற அநாதைகளுக்காக ஓர் இருப்பிடம் கட்ட வேண்டும் என்று எண்ணி பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார். உடல் பாதிப்படைந்த, ஆதரவற்ற வயோதிபர்கள் எஞ்சியுள்ள தங்கள் வாழ்நாளை கௌரவத்துடன் வாழவும் பின் இறக்கவும் வசதி செய்ய வேண்டும் என்று தீவிரமாகச் செயற்பட்டார். அவரது உண்மையான உழைப்பைக் கண்டு கல்கத்தா மாநகராட்சி அவருக்கு காளிகட் என்னும் இடத்தில் ஒருசிறு இல்லத்தை வழங் கியது அதற்கு அவர் 'நிர்மல் ஹருதய்' எனப் பெயரிட்டார். இதன் பொருள் களங்கமற்ற தூய இருதயம் என்பதாகும்.

இங்கு எல்லோருமே தாம் யாருக்கும் வேண்டாதவர் அல்லது யாரும் தம்மிடம் அன்பு செலுத்தவில்லை என்ற குறையின்றி வாழ்ந்து அமைதியாக இறைவனடி சேர்கின்றனர். இன்று இந்தியா முழுவதும் இதே நோக்கத்துடன் 60இற்கும் மேற்பட்ட முதியோர் இல்லங்கள் செயற்பட்டு வருகின்றன.

அங்கு அனாதைக் குழந்தைகள், ஆதரவற்ற முதியோர்கள் மட்டுமன்றி தொழுநோய், சமீபகாலத்தய எய்ட்ஸ் நோயாளிகள் ஆகியோருக்கும் அன்பான சேவையை மேற்கொண்டார்.

அன்னை தெரேசாவின் தன்னலமற்ற தொண்டின் வளர்ச்சி அனைத்து உள்ளங்களின் கவனத்தையும் ஈர்த்தது. இந்திய அரசும் பன்னாட்டு அரசும் அன்னைக்கு கணக்கற்ற கௌரவங்களை அளித்தன. 1971 இல் போப்பாண்டவர் 23ஆம் அருளப்பர் சின்னப்பர் அவர்களின் சமாதானப்பரிசு, 1972 இல் உலக சமாதானத்திற்கான ஜவஹர்லால் நேரு பரிசு; லியோடால்ஸ்டாய் பரிசு; பிரிட்டன் அரசாங்கத்தின் உயர் பரிசு, பாரதரத்னா விருது எனப் பரிசுப் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. 1979 இல் அன்னைக்கு அவரது சேவையைப் பாராட்டி நோபல் பரிசு வழங்கப்பட்டது. அப்போது பரிசுக்குழு, "இப்பரிசை அளிப்பதன் மூலம் உலகம் தன்னையே கௌரவித்துக் கொள்கிறது.'' எனக் குறிப்பிட்டது.

கறுப்பி.

## எனக்கானவை...!

மெலிந்த உடலும்
கிழிந்த சேலையும் தான்
என் வாழ்நாளில் தஞ்சம்
பட்டுப் புடைவையுடுத்தி மாற்றார்
கண்குளிர வாழ-எனக்குக்
கொடுத்து வைக்கவில்லை- என்னிடத்தில்
ஜொலிப்பதெல்லாம் நான் நெற்றியில்
வைத்துக்கொண்டிருக்கும்
திலகம் ஒன்றுதான்
தங்கச் சங்கிலியும் கழுத்தில் இல்லை
காதணியும் இல்லாமல் எனது
காதினை மறைத்துக் கொண்டேன்
தலை முடியால்

நிஸா.

# பெண்களின் வயதை அறிய முடியுமா?

''பெண்களிடம் அவர்களின் வயதைக் கேட்காதே'', ''ஆண்களிடம் அவர்களது சம்பளத்தைக் கேட்காததே'' என்று இக்காலத்தில் கூட கேலியும் கிண்டலுமாக யாரும் சொல்லாமல் இல்லை.

பெண்களிடம் வயதைக் கேட்டால் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமானோர் இதைக் கூறுவதைக் கண்ணூடாகக் கண்டும் கேட்டும் கொள்கின்றோம். இதற்குக் காரணம் என்னவென்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? பெண்கள் பொதுவாகத் தமது உண்மை வயதை வெளியில் கூற விரும்புவதில்லை என்பதே உண்மைக் காரணம். 30 வயதுக்கு மேற்பட்ட பெண்களிடம் கூடுதலாக இருக்கும் விருப்பம் இளம் யுவதிகளாகத் தம்மை அடையாளம் காட்ட வேண்டும் என்ற நினைப்பு.

இவற்றுக்கு மாறாக 15, 16வயதுப் பெண்கள் தமது வயதை ஒன்றிரண்டு கூடுதலாகக் கூறுவார்கள். தாம் வயதுக்கு வந்த இளம் யுவதி என்று மற்றவர்கள் நினைக்க வேண்டும் என்பது இவர்களது உள்ளார்ந்த எண்ணமாக இருக்கின்றது.

இவ்வாறு பெண்கள் தமது வயதைக் கூட்டியும் குறைந்தும் கூறுவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் ஒன்றாகத் தம்மை இளமையாகக் காட்ட வேண்டும் என்பதும் அதேவயதுடன் கூடிய ஆண் நண்பர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும் இவ்வாறு கூறுகிறார்கள் என்பது உளவியலர்களின் கருத்து. பொதுவாக ஆண்கள் தம்மை விட வயது கூடிய பெண்களிடம் பழகுவதை விரும்பமாட்டார்கள். இதனைப் பெண்கள் நன்றாக அறிந்து தமது உண்மை வயதைக் கூற விரும்புவதில்லை.

அதுமட்டுமன்றி அலுவலகங்களில் பணிபுரியும் பெண்கள் தம்முடன் பணிபுரியும் பெண்களை விடத் தன்னை குறைந்த வயதுடைய பெண்ணாகவே இனங்காட்ட விரும்புவார்கள்.

இவர்களில் உண்மையான வயதினை தோற்றம், உடற்கவர்ச்சி ஆகியவற்றை வைத்து ஆண்கள் கண்டுபிடித்தாலே ஒழிய பெண்களைக் கேட்டு உண்மை வயதை அறிந்து கொள்ள முடியாது என்பது உளவியல் ரீதியான உண்மை.

ஜீவன்,
மானிப்பாய்.

# தாய்க்குச் சமனாக பாசத்தை வழங்கும் முன்பள்ளி ஆசிரியர்கள்

பிள்ளைகளின் எதிர்காலத்தைத் திறமையான வழியில் கொண்டு செல்வதற்கு முன்னுதாரணமாக இருப்பவர்கள் முன்பள்ளி ஆசிரியர்கள்.

அன்னையின் அரவணைப்புக்கு அடுத்து போல் வளர்ப்பு அன்னையாக சிறார்களின் கல்வி வளர்ச்சிகளுக்கும் நற்பண்புகளுக்கும் வழிகாட்டியாக இருக்கும் ஆசான்கள் இவர்களே.

தற்போதைய சூழ்நிலையின்போது குடும்பத்தில் உள்ள ஆணும் பெண்ணும் தொழிலுக்குச் செல்ல வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் வளர்ந்துவரும் சிறுபிள்ளைகள் தாயின் அரவணைப்பும் தந்தையின் வழிகாட்டலும் இல்லாமல் தனிமைப் படுத்தப்படுகின்றார்கள்.

பாட்டி, தாத்தாவோ சகோதரங்கள் கூட இருந்தாலும் அவர்களது விருப்பத்திற்கு ஏற்றாற் போல் அவர்களுடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு யாரும் இருக்கமாட்டார்கள்.

அரவணைப்புக்கும் பாசத்திற்கும் ஏங்கும் பிள்ளைகள் மனதில் ஆரம்பக் கல்வியைப் புகட்டும் ஆசிரியர் அன்னையில் மறுவடிவமாகத் திகழ்கிறார்கள்.

அவர்களது அன்பான அரவணைப்பும் கேலித்தனமான நகைச்சுவையான கலந்துரையாடல்களும் அவர்களுடன் இணைவதற்குத் உந்து சக்தியாக இருக்கின்றது.

சிறுவர்களுக்கு கூடுதலாக நகைச்சுவை கலந்த அன்பான உரையாடல்கள் மிகவும் பிடித்துவிடும். கல்வியோடு சேர்த்து அன்பையும் வழங்கும் ஆசிரியர்களை நேசிக்க ஆரம்பித்து விடுவார்கள்.

இதன் காரணமாகத்தான் முன்பள்ளிகளில் ஆண் ஆசிரியர்கள் கற்பிப்பது இல்லை. பெண்களால் தான் குழந்தைகளை அரவணைக்கவும் அவர்களின் மனதுக்குள் இருக்கும் விருப்பங்களை இலகுவாகப் புரிந்து கொள்ளவும் முடியும்.

தாயின் அன்புக்கு நிகராக உலகில் வேறெதுவும் இல்லை எனக் கவிஞர்களும் புலவர்களும் கூறி இருக்கிறார்கள். தாயின் சொல்லுக்குக் கட்டுப்பட்டும் மதிப்புக் கொடுத்தும் கீழ்படியும் சுபாவம் குழந்தைகளிடதில் தானாக இருக்கும். ஒருவரின் ஆரம்பக்கல்விதான் அவனது வாழ்க்கையின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு அத்திபாரமாக இருக்கின்றது.



எமக்கான ஆரம்பக்கல்வியை எமக்குப் புகட்டும் முன்பள்ளி ஆசிரியர்கள் அன்னையின் இரண்டாவது வடிவமாவார்கள்.

-சோபியா.

## உறக்கம் தொலைத்தவள்

அன்றிலிருந்து இன்றுவரை
காற்று உறங்குகிறது....
பூக்கள் உறங்குகின்றன...
நிலவு உறங்குகிறது....
பகல் கூட உறங்குகிறது...
இயற்கையானதே உறங்கும் போது கூட
பெண்ணே!
நீ மட்டும் உறங்காது தவிப்பதேன்?

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

## எம் சிந்தனைக்கு...

- ★ இந்த உலகில் எப்படியும் வாழ்ந்தேயாக வேண்டும் என்ற அளவுக்கு இங்கே இன்பங்கள் கலந்துள்ளன. இதைப் போலவே உடனடியாய் மடிந்தேயாக வேண்டும் என்றும் அளவுக்குத் துன்பங்களும் நிறைந்துள்ளன.
- ★ பலரைச் சில காலமும் சிலரைப் பல காலமும் ஏமாற்றலாம்.
- ★ சமநிலத்தில் செல்லும் தேர்போல் நம்முடைய பேச்சு போகவேண்டும்; கீழ்த்தரமான பயனற்ற பேச்சுக்களில் இறங்கக் கூடாது.
- ★ நேற்றுச் செய்த தவறுக்கு இன்று பரிகாரம் காணமுடியாது. தவறே நிகழாமல் பார்த்துக்கொள்.
- ★ ஒரு வினாடியில் நாம் செய்யும் தவறு வாழ்க்கை முழுவதும் வேதனையைத் தேடித்தருகிறது.
- ★ தாய்மொழியைத் திறமையாகப் பயன்படுத்த அறியாத எவனும், பிறமொழியைத் திறமையாகப் பயன்படுத்திக் கொள்ளுதல் கடினம்.
- ★ அறிவால் பண்படுத்தப்பட்ட ஆர்வமே உறுதி.

# அல்லைப்பிட்டி பிலிப்நேரியர் தேவாலயம்

புனித பிலிப்நேரியர்மீது அல்லைப்பிட்டி மக்கள் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். ''2006ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் 1000 பேருக்கு மேல் இந்த ஆலயத்தில் தஞ்சம் புகுந்தோம். ஷெல் தாக்குதல்கள் கடுமையாக இருந்தது. கோயிலின் பின் பகுதியில் மட்டும் ஒரு ஷெல் விழுந்து சிதறியதில் மூன்று பேர்கள் இறந்தனர். 60பேர்கள் காயமடைந்தனர். ஏனையோர் எவ்வித பிரச்சினையுமின்றிக் காப்பாற்றப்பட்டனர். அதற்குப் பிலிப்நேரியர்தான் காரணம்'' எனக் கூறும் இன்றைய அல்லைப்பிட்டி மக்களின் நம்பிக்கை போன்று பண்டைய மக்களும் நிறையவே நம்பிக்கை வைத்திருந்தனர்.

தங்களைக் காக்கும் தெய்வமாக அவரைக் கருதும் பொது மக்கள் வெள்ளிக்கிழமைகளில் மெழுகுதிரி வெளிச்சம் தெரிவதாகவும் அங்கு சென்று பார்த்தால் ஒருவரையுமே காணமுடியாது எனவும் அந்தக் காலத்தில் சின்னப்பிள்ளைகள் கோவிலுக்குள் விளையாட்டாக ஏதாவது விஷமத்தனம் செய்வது உண்டென்றும் ஒரு சமயம் அப்படி நடந்தபோது அவர்கள் உட்கார்ந்திருந்த பாயுடன் சுருட்டி வெளியே வீசப்பட்டதாகவும் மூதாதையர்கள் கூறியதாக எமது முன்னைய தலைமுறையினர் சொல்வதுண்டு. அவர் மிகவும் புதுமையானவர், அற்புதம் நிறைந்தவர் என்கிறார்கள்.

''இந்த ஆலயம் போத்துக்கேயர் காலத்தைச் சேர்ந்தது. ஒரு சிறிய கொட்டிலாக இருந்த இந்த ஆலயத்தின் மூப்பராக கபிரியேல் விசுவாசம் என்பவரும் பூசைகள் தொடர்பானவற்றைக் கவனிக்கும் சங்கிருத்தராக கபிரியேல் நீக்கிலாசும் 90 வருடங்களுக்கு முன்பு இருந்ததாகவும், பின் எனது தந்தையாரும் இப்போது நானும் மூப்பராக இருக்கிறோம்'' எனக் கபிரியேல் பிலேந்திரன் கூறினார்.

இந்தக் கோயிலின் வயது நிச்சயமாகச் சொல்லக்கூடியதாக இல்லாதபோதும் கரையோரப் பகுதிகளில் தமது மத வழிபாட்டுத் தலங்களை அமைப்பதில் போத்துக்கேயரே சிரத்தை கொண்டிருந்தனர் என்பதால் இது அவர்களது காலத்தோடு ஒட்டியதாகவே உணரப்படுகின்றது.

அல்லைப்பிட்டியில் பிலிப்நேரியர் ஆலயத்துடன் புனித யுவானியார் ஆலயம், உத்திரிய மாதா ஆலயம் என மேலும் இரண்டு தேவாலயங்கள் உள்ளன. இது ஜாதி அடிப்படையில் அமைந்திருந்தது. பின்னர் கத்தோலிக்கமதக் கோட்பாட்டுக்கமைய எல்லாமக்களும் இணைந்து வழிபாடு செய்யும் ஆலயமாக இது மாற்றப்பட்டுள்ளது. இப்போது கிறிஸ்தவ விசுவாசிகள் என்ற அடிப்படையில் ஒரே குடும்பமாக ஒரே சமூகமாக இவர்கள் இயங்குகின்றனர்.

இப்பகுதியில் இடம்பெற்ற அசாதாரண சூழல்காரணமாக இந்தக் கோயில் இடிந்தபோதும் மக்கள் இடம்பெயர்ந்து மீள் குடியமர்ந்ததை அடுத்து ஆலயம் நல்ல முறையில் புனரமைக்கப்பட்டுள்ளது அரசாங்கமே ரூபா 40 லட்சம் செலவில் இதைப் புனரமைத்துக் கொடுத்துள்ளது.

பிலிப்நேரியர் இறந்த தினமான வைகாசி மாதம் 26 ஆம் திகதி விசேட திருப்பலிப் பூசைகள், சுற்றுப்பிரகாரம் என்பன நடைபெறுவதுடன் அன்றைய தினம் கிறஸ்தவமதம் தொடர்பான கலைநிகழ்வுகளும் இடம் பெறுகின்றன. வைகாசி மாதம் 17ஆம் திகதி திருப்பலிப்பூசை வழிபாடுகளுடன் கொடியேற்றம் நடைபெறுகின்றது. உற்சவ தினங்களில் கலை நிகழ்வுகள் நடைபெறுவது எமது முன்னோர்கள் காலத்தில் இருந்து தொடர்வதாகவும் தற்சமயம் இடம்பெற்ற துயரநிகழ்வுகளால் அவைகளை ஒழுங்குபடுத்த முடியாமல் இருந்ததாகவும் நிலைமை சீராகிவருவதனால் எதிர்வரும் காலங்களில் வழமை போன்று திருப்பலிப் பூசைகளுடன் கலைநிகழ்வுகளும் நடைபெறக்கூடிய ஒழுங்குகளைச் செய்யலாம் எனக் கருதுவதாகவும் மூப்பர் பிலேந்திரன் தெரிவித்தார்.

அல்லைப்பிட்டி பிலிப்நேரியர் தேவாலயம் முன்னர் தனியாக இருந்தபோதும் இப் போது சாட்டியுடன் இணைந்த ஒரு பங்காகவுள்ளது. இதன் பங்குத் தந்தையாக இருப்பவர் ஸ்ரனிஸ்லோஸ் பிலிப். மக்கள் கிறிஸ்தவமதத்தில் கொண்ட நம்பிக்கை, விசுவாசம் என்பவற்றின் அடிநாதமாக இவர் விளங்குகிறார். ஆலயத்தின் வளர்ச்சிக்குத் தனது முழுமையான அர்ப்பணிப்பையும் வழங்குவது போன்று அல்லலுறும் மக்களுக்கும் முடிந்தவரை உதவுவதாகப் பங்குத்தந்தை பற்றி எல்லோருமே கூறுகின்றார்கள்.


தொகுப்பு:லக்ஸ்மன்

இந்தக் கோயிலைச் சுற்றி இருநூறு குடும்பங்கள்வரை இருப்பதாகக் கூறும் மூப்பர் முன்பு ஒவ்வொரு குடும்பமும் ஒரு திருவிழாவைச் செய்து வந்ததாகவும் அதனால் திருவிழாவைச் செய்வதில் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டதாகவும் அதனைத் தவிர்க்கும் வகையில் இப்போது எல்லோரையும் சேர்த்து திருவிழாக்கள் செய்யப்படுவதாகவும் கூறுகின்றார். அல்லைப்பிட்டியில் இடம்பெற்ற பிரச்சினைகளும் இடப்பெயர்வுகளும் அனைவரும் அறிந்ததே. இந்த ஆலயத்தில் ஏதிலிகளாக இருந்த மக்களுக்கு உதவி அவர்கள் யாழ் நகருக்கு வரக்கூடிய உதவிகளை வழங்கியவர் அருட் திரு. ஜிம்பிறவுண் அடிகள். அவர் இந்த மக்களுக்காகச் செய்த தொண்டுகள் மக்களால் நினைவு கூரப்படுகின்றன. அவர் திடீரெனக் காணாமல் போயுள்ளார். அல்லைப்பிட்டி பங்கு மக்கள் மட்டுமன்றி ஏனைய மக்களும் நேசித்த துறவி அவர். அவருக்காக மக்கள் பிலிப்நேரியரிடம் மன்றாடுகிறார்கள்.

உற்சவ தினங்களில் தீவுப் பகுதி மக்கள் மட்டுமன்றி யாழ்ப்பாணப்பகுதிகளில் இருந்தும் மக்கள் வருகிறார்கள். மக்கள் தொகை கூடுதலாக வருவதாலும் கோயில் சிறியது, பங்கு பெரியது என்பதாலும் கோயில் விஸ்தரிக்கப்படுவது முக்கியமாகும். அத்துடன் சுற்று மதில்களும் அமைக்க வேண்டியுள்ளன. ஜிம்பிறவுண் அடிகளின் நினைவாக ஒரு திறந்த வெளியரங்கு அமைப்பதற்கான வேலைகள் இடம் பெற்று அரையும் குறையுமாக உள்ளன. அதைக் கட்டிமுடிக்க உதவிகள் தேவை. ஆலயத்தின் சில தேவைகளைப் பூர்த்தி செய்யப் பங்குத்தந்தை அவர்கள் பாதுகாப்பு அமைச்சின் உதவிகளைப் பெற்றுத்தந்துள்ளார். எமது முன்னேற்றத்துக்காகவும் அவர் செயற்படுகின்றார். அல்லைப்பிட்டியின் அற்புதரான பிலிப்நேரியர் ஆலயத்தின் வளர்ச்சியில்தான் தங்களது வளர்ச்சியும் தங்கியுள்ளது என்பது அங்குள்ளவர்களின் எண்ணமாகும்.

***

# நெடுந்தீவு மகா வித்தியாலயம்

கிராமங்களின் மகுடம் பாடசாலைகளே. நெடுந்தீவின் சிறப்புக்கு அங்குள்ள பாடசாலைகளின் பணிகளும் முதன்மைக் காரணிகளில் ஒன்றாகும். நெடுந்தீவு மகா வித்தியாலயம் இதில் முக்கியத்துவம் பெறுகின்றது. இங்குள்ள மாணவர்கள் புத்திசாலிகள், திறமை மிக்கவர்கள். இவர்கள் ஆங்கிலக் கல்வியிலும் சிறப்புப் பெற்றவர்களாக இருந்தால் கிராமத்தின் வளர்ச்சி மேன்மையுறும் என எண்ணியவர் அப்போதைய கிராம அதிகாரி சு.நாகேந்திரர்.

அவர் வேலணையில் ஆங்கிலக் கல்வி பயிலக்கூடியதாக மகாவித்தியாலயம் அமைக்கப்படவுள்ளதைத் தெரிந்து கொண்டு நெடுந்தீவு மாணவர்கள் பொருளாதாரவளம் நிறைந்தவர்கள் அல்ல அவர்கள் வேலணைக்குச் சென்று தங்கியிருந்து படிக்கக் கூடியவசதிகளற்றவர்கள் என்பதை அப்போதைய அரசசபை உறுப்பினரான சேர்.வை.துரைசுவாமி அவர்களுக்கும் இலவச கல்வித்திட்டத்தின் தந்தையான அமைச்சர் C.W.W. கன்னங்கராவிற்கும் தெரிவித்து நெடுந்தீவிலும் ஓர் ஆங்கிலப் பாடசாலையை நிறுவக் கோரியதுடன் பாடசாலை அமைவதற்கான கொட்டில்கள், தளபாடங்களையும் தானே வழங்கி 1946இல் கன்னங்கராவைக் கொண்டே திறப்பித்தும் வைத்ததுதான் இன்றைய நெடுந்தீவு மகாவித்தியாலயமாகும்.

1946.01.17ஆம் திகதி 23 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையின் முதலாவது அதிபர் சி.வி.ஈ. நவரத்தினசிங்கம் அவர்கள் தன்னுடன் பணியாற்றிய ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் மாணவர்களின் கல்விவளர்ச்சியில் அக்கறை காட்டியதுடன் பாடசாலையைப் பசுமை மிக்க ஒரு பூந்தோட்டமாகவும் காட்சியளிக்கக் கூடிய வகையில் அழகுபடுத்தி திறமையாகச் செயற்பட்டார்.



தொகுப்பு:லக்ஸ்மன்

இடைக்காலத்தில் பல்வேறு இடங்களில் கொட்டில்கள் அமைத்து பாடசாலை இடம் மாறிக்கொண்டிருந்தது. எனினும் பாடசாலைக்கெனப் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு 17.10.1954 ஆம் திகதி அக் கட்டடத்தில் இயங்கத் தொடங்கியது. அன்றைய பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவல புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார். 01.01.1958 இல் இந்தப் பாடசாலை சிரேஷ்ட பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது. விஞ்ஞானகூடம், தொழிற்கூடம், மண்டபங்கள், வழிபாட்டு நிலையங்கள் என்பனவும்அவரது காலத்தில் உருவாக்கப்பட்டன.

நவரத்தினசிங்கம் அவர்களைத் தொடர்ந்து மகாவித்தியாலத்தின் அதிபர்களாகப் பண்டிதர் க.யோ. ஆசிநாதர் (1964 - 1965), அ. குருநாதன் (1965 - 1972),இரா. சின்னத்தம்பி-(1972 - 1981), பி.எம்.ஜே. அன்ரனி (1981 - 1987), இரா. சின்னத்தம்பி (1987 - 1990), பி.எம்.ஜே. அன்ரனி (1990 - 1996 - முதலாவது கொத்தணி அதிபர்), திருமதி புஸ்பம் அன்ரனி (1996 - 1998), திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் (1998 - இன்றுவரை) ஆகியோர் அதிபர்களாகப் பதவியேற்றுள்ளனர். 1991-1992 கால இடைப் பகுதியில் அ.வெ. அரியநாயகம் 6 மாதங்கள் வரை அதிபராக இருந்தார். நவரத்தினசிங்கம் அவர்களைத் தவிர ஏனையோர் நெடுந்தீவைச் சேர்ந்தவர்களே.

அதிபர் குருநாதனின் காலத்தில் நெடுந்தீவுக்கு வருகைதந்த கல்வி அமைச்சின் பிரதிக்கல்வி மா அதிபர் W.A. வர்ணசூரியவின் வரவால் நவீன விஞ்ஞான ஆய்வு அறை ஒன்று வித்தியாலயத்துக்குக் கிடைத்தது. இதற்கு உறுதுணையாக விளங்கியவர்களில் அன்றைய கிராம சபைத் தலைவர் ம. கணபதிப்பிள்ளையும் ஒருவர். இக்காலத்திலேயே சு. சிவநாயகமூர்த்தியின் முயற்சியால் வர்த்தகப் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது. 1971 இல் அமெரிக்கன்மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையும் மகாவித்தியாலயத்தின் கனிஷ்ட பிரிவாக இணைந்தது. விளையாட்டு மைதானமும் கையளிக்கப்பட்டது.


க.பொ.த. சாதாரணதரத்துடன் மட்டுமே இயங்கிவந்ததனால் அதில் திறமையான சித்திகளைப் பெற்ற மாணவர்கள் வெளியிடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை இருந்தது. அந்தக் குறையை நீக்கும் பொருட்டு 1960 இல் பல்கலைக்கழக புகுமுக வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. இதன் குறுகியகாலத்துள் பெருந்தொகையான மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்புக் கிடைத்தது. மாணவர்களுக்குத் தொழிற்பயிற்சிகளை வழங்குவதிலும் மகாவித்தியாலயம் தனது பங்களிப்பை வழங்கத் தவறவில்லை. கல்வியுடன் நெசவு, மரவேலை, விவசாயம், தையல் போன்ற பாடங்களையும் மாணவர்கள் இங்கு கற்கக் கூடியதாக இருந்தது.

கலைத்துறையுடன் விஞ்ஞானத் துறையும் சிறப்புடன் விளங்கவேண்டும் என்பதில் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆர்வம் காட்டினார்கள். 1972இல் பாடசாலை வெள்ளிவிழாவைக் கொண்டாடிய போது மிகப்பெரிய அளவிலான விஞ்ஞானக் கண்காட்சியும் இடம்பெற்றது. விஞ்ஞானத் துறையில் மாணவர்பெற்ற ஆற்றல், திறமைகளை வெளிப்படுத்திய இக்கண் காட்சியை அன்றைய கல்வி மா அதிபர் டாக்டர் றஞ்சித் ருபேரு திறந்து வைத்தார். இந்த ஆண்டின் மத்தியில் செல்லம்மா வித்தியாசாலையும் இதனுடன் இணைக்கப்பட்டது.

நமது கலை கலாசாரங்களை வளர்ப்பதிலும் மகாவித்தியாலயம் தனது முழுமையான பங்களிப்பை வழங்கியுள்ளது. அதிபர் நவரத்தினசிங்கம் காலத்தில் இருந்து ஆண்டுதோறும் இடம்பெறும் நவராத்திரி தினம், கிறிஸ்துராசா விழா உட்பட ஏனைய கலைவிழாக்களிலும் மாணவர்களின் இசை, நடன, நாடக நிகழ்வுகள் இடம் பெற்றுவந்தன.

(தொடரும்)

# சத்திரசிகிச்சை செய்யும் ரோபோ!



மருத்துவ உலகில் பல கண்டுபிடிப்புக்கள் வியக் கவைத்துக் கொண்டிருக்கின்றன. அன்றாடம் புதிது புதிதாக ஏதாவதொரு கண்டுபிடிப்புக்கள் வெளி வந்த வண்ணமே இருக்கின்றன. அதற்கிணங்க அண்மையில் அமெரிக்க மருத்துவப் பொறியியலா ளர்களால் பரிசீலிக்கப்பட்ட சத்திரசிகிச்சை ரோபோ அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது.

மனிதனின் குறைந்தளவிலான கட்டளை களை மாத்திரம் உள்வாங்கி வான்கோழி ஒன்றின் நெஞ்சுப்பகுதியில் மிகையொளி தொழில்நுட் பத்தைப் பயன்படுத்தி வெற்றிகரமாக சத்திரசிகிச் சையினை செய்து முடித்திருக்கிறது இந்த மருத்துவ ரோபோக் கருவி.

இந்தக் கருவியினை இயக்கிய குழுவின் தலைமை மருத்துவர் கலாநிதி ஸ்டீபன் ஸ்மித் கருத்துத் தெரி விக்கையில் இது எங்களுடைய ஆரம்ப நடவ டிக்கைதான். இன்னும் சில காலங்களில் மனித னின் தலையீடின்றி சத்திர சிகிச்சை செய்யக்கூடிய விதத்தில் இந்த ரோபோ மாற்றப்படும் என நம்பிக்கை வெளியிட்டார். இந்த ரோபோவின் உத வியுடன் சத்திரசிகிச்சை செய்வது செலவு குறைவு ஆகையினால் ஏழை மக்களும் இந்த ரோபோ மூலமாகப் பயன்பெறுவர் என நம்பப்படுகிறது.

# முகம் அழகு பெற...



மனிதனின் ஆரோக் கியத்தை வெளிப் படுத்துவது முகம் தான். உடலிலும் உள் ளத்திலும் குறை ஏதும் உண்டானால் அதன் வெளிப்பாடும் முகத் தில் தெரியவரும். இன் றைய நாகரிக உலகில் முகத்துக்கு அழகு சேர்க்க சந்தையில் விற் கப்படும் பொருள்கள் ஏராளம்.

முக அழகுப் பொருள் கள் உடலுக்குத் தீங்கு களை விளைவிக்கக் கூடி யவை. இவற்றை வாங்கி உபயோகிப் பதன் மூலம் நாம் பணத்தையும் அழ கையும் இழப்பதுதான் மிச்சம்.

ஆனால் இயற்கையில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு வேதிப்பொருள்கள் கலப்பின்றி முகத்தையும் உடலையும் ஆரோக்கியம் பெறச்செய்யலாம். சருமத்திற்கு ஒவ்வாமை தரக்கூடிய பொருள்களைத் தவிர்க்க வேண்டும். ஓய்வு நேரங்களில் இவற்றை உபயோகிக்க வேண்டும்.

# நகங்களின் மூலம் நோயைக் கண்டறியலாம்



நகங்கள் தேவை யற்ற ஒன்றல்ல. அவை அழகிலும், ஆரோக்கியத் திலும் பங்கு வகிக்கின் றன. நகங்களும் சுவாசிக் கும், வியர்வையை வெளி யிடும் என்றால் நம்புவீர் களா? ஆனால் இவை உண்மை தான்.

வெளிப்புறம் நகங்க ளாக இருக்கும் நெயில் பிளேட் கழிவுப் பொருள் என்பதால் அதற்கு ஒட்சி சன் தேவையில்லை. ஆனால் உட்புறம் இருக் கும் மேட்ரிக்ஸ், நெயில் பெட், கிடிகிள் போன்ற பாகங்களுக்கு ஒட்சிசன் அவசியம். எனவே அவை தேவையான ஒட்சிசனை சுவாசத்தின் மூலம் பெற்றுக்கொள்கிறது. இதில் கிடிகிள், விரல் பகுதிக்கு அதிக இரத்த ஓட்டம் கிடைக்க உதவுகிறது.

நகத்தில் 18 சதவீத அளவில் ஈரப்பதன் இருக்கிறது. எனவே நகங்கள் குறிப்பிட்ட அளவில் வியர்வையையும் வெளியேற்றும். நகங்கள் நமது ஆரோக்கியம் காட்டும் 'மொனிட்டர்' போலவும் செயற்படுகின்றது. நகங்களின் நிறம் மாறுவதைக்கொண்டு உடல்நலம் பாதிக்கப்படுவதைக் கண்டு பிடிக்கலாம்.

### நகங்களில் ஏற்படும் சில மாற்றங்களும், அவை சொல்லும் உண்மைகளும்

1. நகங்கள் உடைசலாக வளர்கிறதா? மேட்ரிக்ஸ் பகுதி பாதிக்கப்பட்டிருப்பது இதற்கு காரணமாக இருக்கலாம். சிறுநீரகப் பிரச்சினை, தைரோய்ட் நோய் போன்றவற்றின் அறிகுறியாகவும் இது கருதப்படுகிறது.
2. நகங்கள் கடினமாகவும், அகன்றும் வளர்ந்தால் உடம்பில் பிராணவாயு பற்றாக்குறை என்று அர்த்தம். இதைக் கவனிக்காவிட்டால் நுரையீரல் நோய்கள் வரலாம்.
3. மங்கலான நீண்ட கோடுகள் தென்பட்டால் மூட்டுவலி ஏற்படும்.
4. நகங்கள் வெளிறி இருந்தால் இரத்தச்சோகை, சிறுநீரகம் தொடர்பான நோய்கள் இருக்கலாம்.
5. நகங்கள் சிவந்து காணப்பட்டால் மாரடைப்பின் அடையாளம்.
6. கீறல்- குழிகள் விழுந்தால் சருமப் பிரச்சினைகளின் அறிகுறி.
7. நீலநிறமாக மாறிவிட்டால் இரத்தத்தில் ஒட்சிசனின் அளவு குறைவாக உள்ளது என்று அர்த்தம். இந்த அறிகுறி ஆஸ்துமா, இதயநோய்களைக் கொண்டு வரலாம்.
8. நகங்கள் உள்நோக்கிக் குழிந்திருந்தால் அல்லது கருமை நிறமாகக் காணப்பட்டால் இரும்புச்சத்து, விட்டமின் பி 12 பற்றாக்குறை என்று பொருள்.
9. மஞ்சள் நிறம் தென்பட்டால் கல்லீரல் பாதிப்பின் அறிகுறி.
10. விரலுக்குக் கிரீடமாக விளங்கும் நகங்களை வீண் என்று நினைக்காமல் கவனித்துப் பராமரிப்பது உடல் நலத்துக்கு நல்லது.

# பழங்களும் மருத்துவக் குணங்களும்

பழங்கள் உடலுக்கு ஆரோக்கியத்தைத் தருவதுடன் பல்வேறு உயிர்ச்சத்துகளையும் வழங்குகின்றன.

தினமும் பழங்களைச் சாப்பிட்டால் உடல் அழகு அதிகமாவதுடன் புத்துணர்ச்சியும் ஏற்படும். பழங்கள் பலமருத்துவ குணங்கள் கொண்டதால் பல நோய்களையும் தீர்க்கின்றது.

* அப்பிள் பழம் சாப்பிடுவதால் தாகம், உடல்வரட்சி, வயிற்று அழற்சி போன்றவை நீங்கும். குடற்புண், வாய்ப்புண் போன்றவற்றைக் குணமாக்கும்.
* இலந்தைப் பழம் சாப்பிடுவதால் வாந்தியைத் தடுத்து நிறுத்துவதுடன் உடலுக்கு வலுவைக் கொடுக்கும். பசியால் உண்டாகும் எரிவு, பித்த மூச்சு என்பவற்றைப் போக்கும்.
* அன்னாசிப்பழம் சாப்பிடுவதால் சீரண, மலக்கட்டு, இருமல், வாய்நாற்றம், வாதநோய் என்பன நீங்கும். உடம்பு, பல், எலும்பு போன்றன பலப் படும். குறிப்பாக அன்னாசிப்பழம் தேவையற்ற கர்ப்பத்தை இல்லாதொழிக்க உதவுகின்றது.
* எலுமிச்சம் பழம் சாப்பிடுவது இளமையுடன் வாழ்வதற்கும் வழி சமைக்கும். தோலை நீக்கிப் பொடி செய்து தலைவலி வரும்போது தடவினால் தலைவலி நீங்கும். இதன் சாற்றில் தேன் கலந்து தினம் சாப்பிட்டால் வாய்ப்புண் ஏற்படாது. பித்தக்கோளாறு நீங்கும். வாந்தியை நிறுத்துவதுடன் களைப்பைப் போக்கும். வாயுக் கோளாறு, வயிற்றுவலி, இருமல், மலச்சிக்கல், வயிற்றுப் போக்கு இவைகளையும் குணப்படுத்தும்.

(வளரும்)

# அறிவுக்குச் சில...

* அறிவு மனிதனின் நண்பன் அறிவின்மை பகைவன் - டெம்பில்
* தன் துன்பத்தை வெளிக்காட்டாமல் இருப்பவனை விட தன் மகிழ்ச்சியை வெளிப்படையாகக் காட்டாமல் இருப்பவனே மேல் - விட்டர்
* இறைவன் அறிவுள்ளவனைக் காக்கின்றார் - சாயிபாபா
* அனுபவத்தை விவேகத்துடன் பயன்படுத்திக் கொண்டால் எதிர்காலத்தில் பல வெற்றிகளைச் சாதிக்கலாம் - ரொதென்
* தன் காலில் நிற்க உதவுவதே கல்வி - விவேகானந்தன்
* அறியாமையை விட இழிவான அடிமைத்தனம் எதுவும் கிடையாது - இங்கர்சல்
* கல்வியறிவு இன்ப வாழ்க்கையின் போது ஓர் அணிகலனாக விளங்கி மகிழ்வூட்டுகிறது. துன்பவாழ் வின்போது நமக்கு அடைக்கலம் தந்து ஆதரவு காட்டுகிறது. - அரிஸ்டோட்டில்
* அறியாமையுடன் நூற்றாண்டுகள் ஒருவன் வாழ்வதை விட அறிவு டன் ஒரு நாள் வாழ்வதே மேலானது - புத்தர்
* அறிவாளிகளின் கூட்டம் உயிருள்ள ஒரு நூல் நிலையம் - ராபின்சன்

## அழகிய காலம்

சின்னக் குழந்தையாய்
அன்னை மடியில்
தவண்ட காலம்
புத்தகப் பையும்
பென்சிலும் கொண்டு
முன்பள்ளிக்குச் சென்ற காலம்
சின்னச் சின்ன நண்பர்களுடன்
ஓடி விளையாடிய காலம்
சின்னப் பிள்ளையாய்
வீட்டில் குறும்பு
செய்த காலம்
பக்குவமாய் பள்ளி சென்று
பயின்ற காலம்
பட்டத்தையும் பதவியையும்
பெற்ற காலம்
சின்னச் சின்னக் கனவினிலே
சிறகடித்துப் பறந்த காலம்
இத்தகைய அழகிய காலம்
என் வாழ்வில்
மீண்டும் வருமா?

# இருளின் கதவுகளைத் திறந்தவன் (17)



ஒருநாள் பனியில் நனைந்தபடி சூரியனின் உதயம் நிகழ்ந்து கொண்டிருந்த தருணமொன்றில் யூலியனுக்கு ஒரு மின்னஞ்சல் அவசரத்தனத்தோடு வந்திருந்தது.

அதுவும் மிக முக்கியமான ஒரு தகவலாளியிடமிருந்து. மின்னஞ்சலில் வரையப்பட்டிருந்த தகவல் யூலியனைப் பரபரப்படைய வைத்தது.

ஊடக சுதந்திரத்துக்குப் பெயர்பெற்ற அவுஸ் திரேலியாவில் சட்டவிரோதமாக இயங்குகின்ற அல்லது அந்தநாட்டின் சமூகநடவடிக்கைகளுக்கு ஒவ்வாத இணையத்தளங்கள் சில தடை செய்யப்படப் போகின்றன என்பதே அந்த மின்னஞ்சல் சுமந்து வந்த செய்தி. இதில் பரபரப்படைவதற்கு என்ன இருக்கின்றது?.

வெளிப்பகட்டுக்குத் தன்னை ஒரு ஊடகச்சுதந்திரத்துக்குத் தடைபோடாத கனவானாகக் காட்டிக் கொண்டாலும் உள்ளுக்குள் மிகமோசமாக ஊடகக் குரல்வளையை நெரிப்பதை அவுஸ்திரேலியாவில் பிறந்து வளர்ந்து, அவுஸ்திரேலிய அரசுக்கே தண்ணி காட்டிய யூலியன் அறிந்தே வைத்திருந்தான். ஆனாலும் மற்றைய நாடுகளுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் ஒரு சின்ன வித்தியாசம் இருக்கவே செய்தது.

பிறநாடுகள் பழைய வில்லன் வீரப்பா போல உச்சஸ்தாயியில் கத்திக் குளறி, தாம் செய்கின்ற ஊடக அடக்குமுறைகளைத் தாமே உலகுக்குப் படம் போட்டுக் காட்டிவிடுகின்றன. அவுஸ்திரேலியா இந்த விடயத்தில் சைலண்ட் கில்லர்.

முடித்துவிடும் கெட்டித்தனம் கொண்டது.

**யூலியன் அசாஞ்சே பற்றிய ஒரு விறு விறு தொடர்**

வாழ்க்கையின் இடைவிடாத துரத்தல்களால் அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேறிய பின்னர் அங்கு செல்வதையே யூலியன் வெறுத்தான்.அதைவிட யூலியன் அங்கு சென்றால் எப்படியாவது ஒரு வழக்கினைச் செட்டப் செய்து அவனை உள்ளுக்குள் தள்ளிவிட நாவைத் தொங்கப்போட்டுக் கொண்டு அவுஸ்திரேலியாவும் காத்திருந்தது.

ஆனால் சட்டத்துக்கு முரணான ஊடகங்கள் என்ற லேபிளை ஒட்டிவிட்டு, அதன் மறைவில் தனக்கு எதிரான சில ஊடகங்களின் கழுத்தை அறுக்கவே அவுஸ்திரேலியா இப்படி ஒரு வேலையைச் செய்வதை யூலியன் ஊகித்துக் கொண்டான்.

யூலியன் ஊகித்தால் மட்டும் போதாதே. தனது ஊகத்தைத் தகுந்த ஆதாரங்களோடு வெளிக்கொணர்ந்து, அவுஸ்திரேலியாவின் ஊடகச்சுதந்திரம் என்ற அரிதாரத்தைக் கழுவி அதன் கோரப்பற்களை உலகுக்கு காட்டவேண்டும். உடனடியாக ஏதாவது செய்ய வேண்டும் என்று அவன் பரபரத்தான். ஆனால் துரதிர்ஷ்டவசமாக விக்கிலீக்ஸுக்கு அவுஸ்திரேலியாவில் சரியான-துணிச்சலான -தகவல் வழங்குபர்களும் இல்லை. யூலியனின் நண்பர்கள் எப்போதுமே அவுஸ்திரேலியாவின் கண்காணிப்பு வளையத்துக்குள்ளேயே இருந்ததனால் வேறு ஒரு வழியையே யூலியன் நாட வேண்டியிருந்தது.

அப்படி யூலியன் நாடிய நபர்தான் தியோடர். ஜேர்மனியைச் சேர்ந்த தியோடர் யூலியனைப் போலவே அதிகாரத்தின் முகமூடியைக் கிழித்தெறிய, இணைய ஊடகப்புரட்சி ஒன்றே எதிர்காலத்துக்குப் பொருத்தமானது என நம்பும் இளைஞர். எனவே யூலியனின் கொள்கைகள் மீதும், விக்கிலீக்ஸின் செயற்பாடுகள் மீதும் தியோடருக்குப் பிடிப்பு ஏற்பட்டதில் ஆச்சரியமேதுமில்லை. விக்கிலீக்ஸ் தொடங்கப்பட்டதிலிருந்தே யூலிய னுடன் கைகோர்த்த தியோடர், அதன் ஜேர்மன் தளத்தின் சொந்தக்காரராகவும் இருந்தார். யூலியனின் வேண்டுகோளின் படி, தனது வியாபார நடவடிக்கையின் பொருட்டு செல்வது போல அவுஸ்திரேலியாவுக்குள் நுழைந்தார். யூலியனின் சீடப்பிள்ளையான தியோடருக்கு உளவறிய யாரும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லையே. மீன் குஞ்சு அவுஸ்திரேலிய தகவல்துறை ஆவணங்களுக்குள் நீந்தத்தொடங்கியது. நோகாமல், நொருங்காமல் தேவையான தகவல்களை ஆதாரங்களோடு திரட்டி சூட்டோடு சூடாக யூலியனுக்கு பாதுகாப்பான வழிமுறையூடாக அனுப்பினார் தியோடர். தனது வேலையை முடித்துக் கொண்டு தியோடர் பத்திரமாக ஜேர்மனியில் தரையிறங்கும் வரை காத்திருந்த யூலியன், அதன் பின் அவுஸ்திரேலியாவின் மறைமுக ஊடகஒடுக்குமுறையை உலகெங்கும் பறை தட்டினான்.

நாலாபுறத்திலிருந்தும் கேள்விக்கணைகள் அவுஸ்திரேலியாவைத் துளைத்தெடுத்தன.

ஒளன்யன்

இறுதியில் சட்டவிரோத இணையங்கள் என்ற போர்வையில் தனக்கு எதிரான ஊடகங்கள் சிலவற்றையும் முடக்கத் திட்டமிட்டிருந்ததை அவுஸ்திரேலியா ஒத்துக்கொண்டது.

யூலியனின் பகிரங்கப்படுத்தலால் அந்த ஊடகங்களுக்கு அவுஸ்திரேலியா போடப்பட்டிருந்த முற்றுப்புள்ளி தவிர்க்கப்பட்டது. ஆனால், வில்லங்கம் வேறு வழியில் யூலியனைத் தொடர்ந்தது. தன்னைத் தோலுரித்துக் காட்டிய யூலியனைப் பழிவாங்க அவுஸ்திரேலியா துடியாய்த் துடித்தது. அவுஸ்திரேலியாவின் உளவுத்துறை தன் உச்சபட்ச திறனையும் உபயோகித்து, யூலியனுக்கு இவ்வளவு தகவல்களையும் அள்ளியெடுத்துக் கொடுத்தது தியோடர்தான் என்ற உண்மையைக் கண்டறிந்தது.

ஜேர்மனி அரசுக்கு அவுஸ்திரேலியா கொடுத்த அழுத்தம் தியோடரைக் கைது செய்யும் உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை ஓயவில்லை.

தன்னைப் பின்தொடரும் பயங்கரத்தின் நிழலை உணராமல் வழமைபோல கோல்ப் விளையாடச் கிளம்பினார் தியோடர். அவர் பின்னாலேயே நாலுகால் பாய்ச்சலில் ஆபத்தும் நெருங்கியது.

*(திரைகள் இன்னும் திறக்கும்)*

# தீவகத்தின் கல்வி அபிவிருத்தி

தீவகத்தைப் பொறுத்தவரை கல்வியில் பெரியளவில் வளர்ச்சி காணப்படாத போதும் கல்வியில் அபிவிருத்தி அடைந்துள்ளது என்பது மறுப்பதற்கில்லை.

தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.இராதாகிருஷ்ணன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் தீவுப்பகுதியில் கல்வி உச்ச நிலையில் இருந்தது. இன்று இந்தப் பிரதேசத்துக்கான கல்வி பெரிதும் வீழ்ச்சியடைந்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

வலயக்கல்விப் பணிப்பாளர் என்ற வகையில் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்குமாறு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தீவுப் பகுதியில் கற்று சிறப்பான பெறுபேறுகளைப் பெறும் மாணவர்கள் வெளியிடங்களில் உள்ள பாடசாலைக்கு நகர்ந்து விடுகிறார்கள்.

அவர்களது பெற்றோர்களும் வெளியிடங்களில் உள்ள பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்த்துவிட வேண் டும் என்ற நிலையிலேயே உள்ள னர். இதனால் சிறப்பான பெறுபேறு களைப் பெறக் கூடிய மாணவர்கள் இங்குள்ள பாடசாலைகளில் இல்லாமல் போகின்றனர்.

லக்ஸ்மன்

யாழ்ப்பாணத்தின் பிரபல பாடசாலைகளை எடுத்துக் கொண்டால் அங்கெல் லாம் மிகவும் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களில் கூடுதலானவர்கள் இந்தப் பகுதிப் பாடசாலைகளில் இருந்து சென்ற மாணவர்களாகத்தான் இருக்கிறார்கள். இவர்கள் இங்கு தாம் தொடர்ந்தும் தமது கல்வியை முன்னெடுத்திருந்தால் அந்தப் பெறுபேறுகள் தீவுப் பகுதிக்கு உரியதாகத்தான் இருக்கும். முன்னரிலும் பார்க்க மாணவர்கள் வளர்ச்சியடைந்துள்ளனர். 25.1 வீதமாக இருந்த 70 இற்கும் மேல் புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்தவர்களின் தொகை 2009 இல் 51.3 வீதமாகவும் 2010 இல் 58.7 வீதமாகவும் உயர்ந்துள்ளது. 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களின் தொகை 5 வீதமாக இருந்தது. தற்சமயம் 2009 இல் 21.9 வீதமாகவும் 2010 இல் 24.4 வீதமாகவும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இங்குள்ள மிகச் சிறிய பாடசாலைகளில் கூடப் பெறு பேறுகள் கடந்த காலங்களை விடச் சிறப்பாகவே அமைந்துள்ளன.

**தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.இராதா கிருஷ்ணன் தீவக வலயக் கல்வி அபிவிருத்தி தொடர்பாகக் கூறிய கருத்துக்கள்**

கல்வியுடன் உடற்பயிற்சி, திருக்குறள், மனனப் போட்டிகளிலும் மாகாண மட்டத்தில் இடம்பிடித்துள்ளனர்.

நயினாதீவில் கல்விநிலை சற்றுக் குறைவாகக் காணப்பட்டதால் யாழ். இந்துக் கல்லூரியில் பிள்ளைகளுக்கு கணிதம் மீட்டல் பயிற்சி வழங்கப்பட்டது. விஞ்ஞான பாடத்தில் இருபது நாள் பயிற்சி நயினா தீவுக்குச் சென்று வழங்கப்பட்டது. இதுபோன்ற பயிற்சி முறைகள் ஏனைய பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்படும். கணிதம், விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பாடசாலைகளும் இருக்கின்றன.

தீவுப்பகுதியில் க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டால் அதற்குப் பதிலாக நியமனங்கள் செய்யப்படுவதில்லை. க.பொ.த.சாதாரண தரம் வரை உள்ள பாடசாலைகளுக்குக் குறைந்தது 12 ஆசிரியர்களாவது இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து சிறப்புத் தேர்ச்சியும் அர்ப்பணிப்பும் மிக்க ஆசிரியர்கள் இருக்க வேண்டும். சில ஆசிரியர்கள் ஒரே சமயத்தில் இரண்டு மூன்று வகுப்புக்களைக் கற்பிக்கக் கூடிய ஆற்றல் உள்ளவர்கள். முன்னர் அப்படியான ஆசிரி யர்கள் இருந்தனர். ஆசிரியருக்கு இரண்டு மூன்று பாடத்தில் அறிவு தேவை. பலதரக் கற்பித்தலில் ஆற்றல் தேவை.

உள்ளூர் ஆசிரியர்களை உள்வாங்கும் முயற்சியில் பின்னடைவு உள்ளது. தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும்போது அவர்கள் தொண்டராசிரியராகக் கடமையாற்றிய பாடசாலையில் ஐந்து ஆண்டுகள் கடமையாற்ற வேண்டும் என்ற நிபந்தனை இருந்தது. ஆனால் அவர்கள் ஆசிரியர் பயிற்சிகளைப் பெற்ற பின்னர் வேறு இடங்களுக்குச் சென்றுவிடுகிறார்கள்.

தீவுப்பகுதியில் கற்பிக்கும் வெளியிடங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் திங்கட்கிழமை தமது பாடசாலைக்குச் சென்றால் மீண்டும் வெள்ளிக்கிழமைதான் வீடு திரும்புகிறார்கள். இப்போது உள்ளூர் ஆசிரியர்கள் கூட வெள்ளிக்கிழமைகளில் யாழ். சென்று திங்கள்கிழமை பாடசாலைக்கு வருபவர்களாகத் தம்மை மாற்றிக் கொண்டார்கள். உள்ளூர் ஆசிரியர்களும் மாலைநேர வகுப்புக்களை எடுப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை.

ஒரு பிரதேசத்தின் கல்வி அந்தப் பிரதேசத்தின் கல்விப் பாரம்பரியப் பின்னணியைக் கொண்டவர்களில்தான் தங்கியுள்ளது. தீவகமக்கள் கல்விப் பாரம்பரியமுள்ள பெருமளவு மக்களைக் கொண்டவர்கள். அவர்களில் அனேகர் வெளியேறியுள்ள நிலையில் இங்குள்ள மக்களுக்கு கல்வியில் விழிப்புணர்வு குறைவாக உள்ளது. போக்குவரத்து ஒரு பிரச்சினையாக முன்னர் இருந்தது. தற்சமயம் எல்லா ஆசிரியர்களும் தத்தமது பகுதிகளுக்கு ஒரே வாகனத்தில் வந்து திரும்பக் கூடிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டுள்ளது. அதனால் தாமதங்கள் இல்லை இந்த ஆண்டில் இருந்து தங்கியிருந்த மேலதிக கல்வியை வழங்க ஆசி ரியர்கள் முன்வந்துள்ளனர். கணித பாடத்தின் பெறுபேறு 39 வீதமாக அதிகரித்துள் ளது. இது முன்னர் 22 வீதமாக இருந்தது.

இம்முறை கணிதம், விஞ்ஞானம் போன்ற பிரதான பாடங்களுக்கான முகாம்களை நடத்தவுள்ளோம். பாடசாலை மட்டத்திலும் உள்ளக மட்டத்திலும் கண்காணிப்பைப் பலப்படுத்தவும் பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. சில பாடங்களில் கற்பிக்க உரிய ஆசிரியர்கள் இல்லை. ஆரம்பப் பிரிவுக்கான ஆசிரிய ஆலோசகர் பற்றாக்குறை உண்டு.

கல்வி அபிவிருத்தி அதிபர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. அதிபர்களின் பலம், பலவீனம் இரண்டும் இன்றைய கல்வி நிலைக்கு முக்கிய காரணமாக அமைகின்றன.

இதுபோன்று பிரச்சினைகளின் மத்தியில்தான் தீவகத்தின் கல்வியை மேம்படுத்த நாங்கள் கடினமாக உழைக்கின்றோம். நாட்டில் ஏற்பட்ட இடைக் கால நிகழ்வுகளால் இந்தப் பிரதேசத்தின் கல்விநிலை பெருமளவு பாதிக்கப்பட்டிருந்தாலும் அந்த நிலையை மாற்றிக் கல்வி நிலையில் மேம்பாடு காணத் தேவை யான வளங்கள் அனைத்தையும் பெற்று எமது இலக்கை அடைய வேண்டும் என்பதில் உறுதியுடன் உள்ளோம்.

சந்திப்பு....



சுவிற்சர்லாந்தின் தலைநகரில் உள்ள ஜெனீவாவில் ஐ.நா. அகதிகளுக்கான தூதரகத்திற்கு வருகை தந்த நோர்வே நாட்டு இளவரசி மேட்டி மெரிட் (இடது), அந்த நாட்டு சிறப்பு தூதர் ஆன்ரோனியோ மானுவல் ஆகியோர் கூட்டாக செய்தியாளர்கள் பேட்டிக்காக வந்தனர்.

# பிரபல பொப் பாடகருக்குச் சிறை

பாண்டுங், பெப். 02

இந்தோனேசியாவின் பிரபல பொப் பாடகரான நஜ்ரில் இர்ஹாமுக்கு(வயது - 29), ஆபாச வீடியோ வழக்கில் மூன்றரை ஆண்டு சிறைத்தண்டனை விதித்து அந்த நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இத்தீர்ப்பு, இர்ஹாமின் ரசிகர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தோனேசியாவைச் சேர்ந்த பிரபல பொப் பாடகர் நஜ்ரில் ஏரில் இர்ஹாம். இவர் இரண்டு பிரபல நடிகைகளுடன் உல்லாசமாக இருந்த மூன்று வீடியோக்கள், கடந்த ஆண்டு ஜூன் மாதம் இணையத் தளங்களில் வெளிவந்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த வழக்கை விசாரித்த பாண்டுங் நகர கோர்ட், இர்ஹாமுக்கு மூன்றரை ஆண்டு சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இதையடுத்து அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

தீர்ப்பு கூறிய நீதிபதி சிங்கி புடி பிரகாசோ, "ஒரு பிரபலமானவர், தன்னைப் பார்த்து ரசிகர்களும் நடப்பர் என்பதை எப்போதும் மனதில் நிறுத்திக் கொண்டு செயல்பட வேண்டும்' என்று அறிவுரை கூறியுள்ளார். இந்த வழக்கில் இர்ஹாம், மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்ய இருப்பதாக அவரது வக்கீல் தெரிவித்துள்ளார். முஸ்லிம் நாடான இந்தோனேசியாவில், ஆபாசப் படங்களுக்குத் தடை விதிப்பது குறித்து இப்போது தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது. (ம)

# அமெ. ஜனாதிபதி ஒபாமாவின் சுகாதாரத் திட்டத்துக்கு எதிர்ப்பு

வாஷிங்டன், பெப். 02

அமெரிக்க அதிபர் ஒபாமாவின் புதிய சுகாதாரத் திட்டத்திற்கு பல்வேறு மாகாணங்களில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இது குறித்து தொடரப்பட்ட வழக்கில் இந்தச் சட்டம் அரசியலமைப்புக்கு முரணானது எனக் கூறியுள்ளது.

அமெரிக்க அதிபர் ஒபாமா, மருத்துவம், காப்பீட்டுத் திட்டம் குறித்து புதிய சட்டத்தினை கடந்த மார்ச் மாதம் பார்லிமென்ட் காங்கிரசில் தாக்கல் செய்தார்.இதற்கு ஒப்புதல் பெறப்பட்டது. அப்போது பேசிய ஒபாமா, 30 மில்லியன்அமெரிக்கர்கள்இந்த புதிய சட்டத் தினால் பயன் பெறுவர். நடுத்தரக் குடும்பத்தினர் வரிச்சலுகையும் பெறலாம் எனத் தெரிவித்தார்.

இந்த நிலையில் இந்தப் புதிய சட்டத்திற்கு குடியரசு கட்சி எம்.பிக்கள்எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இது குறித்து வெர்ஜினியா நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கு விசாரணையில் 78 பக்கத் தீர்ப்பில் உடனடியாக இந்த சட்டத்துக்குத் தடை விதித்துள்ளது. அமெரிக்கர்களின்தனிப்பட்ட உரிமையினை பறிக்கும்செயல் என்றும், அரசியலமைப்பு சட்டத்திற்கு முரணானது என்றும் குற்றம் சாட்டியுள்ளது.

மேலும் அமெரிக்காவில் உள்ள 50 இற்கும் மேற்பட்ட மாகாணங்களில் 26 மாகாணங்களில் இந்தப் புதிய சட்டத்திற்கு கடும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. (ம)

# எகிப்திலிருந்து வெளியேறுமாறு சுவிஸ் பிரஜைகளுக்கு எச்சரிக்கை

எகிப்திலிருந்து வெளியேறுமாறு சுவிற்சர்லாந்து பிரஜைகளுக்கு சுவிஸ் அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

எகிப்தில் இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களினால் ஆபத்து ஏற்படக் கூடுமென சுவிஸ் மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தற்காலிகமாகவேனும் சுவிற்சர்லாந்து பிரஜைகள் எகிப்திலிருந்து வெளியேற வேண்டுமென வலியுறுத்தப் பட்டுள்ளது.

எகிப்திற்கான விஜயம் ஆபத்தானது எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எகிப்தில் 1574 சுவிற்சர்லாந்து பிரஜைகள் தங்கியிருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

சுவிற்சர்லாந்து பிரஜைகள் எகிப்தை விட்டு வெளியேறுவதற்கு உதவிகளை வழங்கும் நோக்கில் தூதரக அதிகாரியொருவர் கெய்ரோ விமான நிலையத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

# அமெரிக்கர்களையே ஆட்டிப் படைக்கும் பிரான்ஸ் சிறுவன்

பரீஸ், பெப்.02

விக்கிலீக்ஸ் தளத்திற்கு உதவி செய்யும் முகமாக அமெரிக்க இணையத்தளங்கள் சிலவற்றில் ஊடுருவல் செய்த குற்றத்திற்காக 15 வயது பிரெஞ்ச் சிறுவன் கைது செய்யப்பட் டுள்ளான்.

எந்தவிதமான குற்றச்செயல் பதிவுகளுமில்லாத இந்தச் சிறுவன் மாஸ்டர்கார்ட், வீசா, பேபால் போன்ற அமெரிக்க பணமாற்று தளங்களின் தரவுகளைத் திருடியுள்ளான்.

சமூக இணையத்தளங்களில் ஒரு குழுவாக இயங்கும் இவர்கள் தனிப்பட்ட சுதந்திரங்களைப் பாதுகாப்பதாகக் கூறி இத்தகைய பெருந்தளங்களுக்குள் ஊடுருவுகின்றனர்.

இப்படியான இலத்திரனியல் தகவல் திருட்டு பெரிய குற்றமாகக் கருதப்படுகின்றது. இதற்கு அடிப்படையில் 5 ஆண்டுகள் சிறையும் 75,000 யூரோக்கள் அபராதமாகவும் விதிக்கப்படும்.

ஆனால் வயது குறைந்த சிறுவன், முன்பு எந்தவிதமான குற்றச் செயல்களும் புரியாத ஒரு சிறுவனைத் தண்டிப்பதற்குப் பொருத்தமான சட்டப் பிரிவுகள் இருப்பதாகத் தெரியவில்லை என அரசுத் தரப்பு வக்கீல் தெரிவித்தார்.

ஆவணப் பாதுகாப்பு மற்றும் இலத்திரனியல் குற்றத்தடுப்புப் பிரிவினர் இப்படியான செயல்கள் குறித்து மேலும் கவனமெடுக்கப் போவதாகக் கூறியுள்ளது.

இவர்கள் தமது அதியுச்ச கணினியியல் அறிவைப் பயன்படுத்தி பல நூற்றுக்கணக்கான கணினிகளை வலைய அமைப்பில் இணைத்து ஒரே நேரத்தில் பல லட்சம் தகவல் கேள்விகளை ஒரு தளத்திற்கு அனுப்பி அதன் தகவல் மையத்தைத்தாக்கி அந்தத் தளத்தை முடக்கி வைக்கவும், தகவல் வங்கி யிலுள்ள கோப்புகளை அழிக்க அல்லது தரவிறக்கம் செய்யவும் இவர்களால் முடிகின்றது.

ஆனாலும் அந்தச் சிறுவனின் வழக்கில் இவன் பல அமெரிக்கத் தளங்களில் ஊடுருவியிருப்பினும் இது எந்தக் குற்றவியல் நோக்கங்களுக்காகவும் செய்யப்படவில்லை எனவும், இவன் தன்னால் என்ன முடியும் என்ற ஆர்வத்தில் மட்டுமே இதைச் செய்துள்ளான் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விக்கிலீக்ஸ் இணையத்திற்கு ஆதரவு வழங்கும் நோக்கில் விக்கிலீக்ஸிற்கு உதவமறுத்த மாஸ்டர்கார்ட், வீசா, பேபால் போன்ற அமெரிக்க பணமாற்று தளங்களின் மீதே இவன் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் அரசதரப்பு சட்டத்தரணி தெரிவித்துள்ளார். (ம)


**TVகள் மலிவு விற்பனை**

100 இற்கும் மேற்பட்ட Sony Wega Flat TV, TG 21-16,500/=, 21Q,-13,000/=, AR25- 22,000/=, 29 25,000/=, குளிர்சாதனப் பெட்டிகள், DTS அம்பிளிபயர்கள், JBL Box ஸ்பீக்கர்கள், RX ரேடியோக்கள், DVD, VCR என்பன மிக மலிவு விலையில் விற்கப்படும். தொடர்பு: 0771393670, இ.பரமேஸ்வரன் [அப்பாக் கொம்பனி], சுன்னாகம் [ஆரம்ப பாடசாலை அருகில்]. கே.கே.எஸ். வீதி, இணுவில்.




ஜக்பொட் பரிசு ரூ. 24,407,860/- வெல்லப்பட்டுள்ளது

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 01 | 24,407,860/= | 24,407,860/= |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 31 | 2,000/= | 62,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 437 | 1,000/= | 437,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 761 | 1,000/= | 761,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 18282 | 60/= | 1,096,920/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8833 | 40/= | 353,320/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 216539 | 20/= | 4,330,780/= |
| | | மொத்தம் ரூ. 31,848,880/= | |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூ.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| அம்பாறை | 600769863-5-05 |
| நுவரேலியா | 600770750-3-33 |
| மொனராகலை | 600762164-6-36 |
| அம்பாந்தோட்டை | 600762924-1-31 |
| கேகாலை | 600766361-7-27 |
| கொழும்பு | 600773186-5-15 |
| அநுராதபுரம் | 600765889-0-40 |
| களுத்துறை | 600770837-6-16 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 32,248,880/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட

ரூ. 10,000,000/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்
2011 பெப்ரவரி 03 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே 2333546/7

**தேவை**

வெள்ளவத்தையில் இருக்கும் Tip Top Travels இற்கு Accounts Clerk, Booking officer மற்றும் Drivers (Heavy Vehicle Licence Holder/ CTB Licence Holder) உடன் தேவை. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு தங்களது Telephone Number உடன் சுயவிபரக் கோவையை (C V) அனுப்பவும்.

Tip Top Travels and Tours
No. 296 - A1, Galle Road, Colombo - 06. Tel: 078 - 5603606, 077 3236354.


## கேள்விப்பத்திரம் கோரல்

NELSIP செயல் திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் இடம்பெற்று வரும் வேலைகளினை மேற்பார்வை செய்யும் பொருட்டு வாகனம் ஒன்று வாடக்கைக்கு அமர்த்த கூறுவிலை கோரப்படுகின்றது. இங்கு கூறப்பட்டிருக்கும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

அ) திணைக்களத்தின் நிரந்தரப் பாவனைக்கான குறைந்தது சாரதி உட்பட 6 ஆசனங்களைக் கொண்டதும் குளிரூட்டல் வசதிகளையும் கொண்டதுமான வான் (VAN) ரக வாகனம்.

ஆ) எரிபொருள், சாரதி, சேர்விஸ், பூரணகாப்புறுதி மற்றும் வாகன திருத்தங்கள் உள்ளடங்கலான கூறுவிலை.

இ) 2000ஆம் ஆண்டுக்குப் பிந்திய பதிவினையுடைய வாகனங்கள் விரும்பத்தக்கது.

ஈ) செயல் திட்ட நடவடிக்கைகளுக்கு ஓடிய கிலோ மீற்றர் அடிப்படையில் மாதாந்தம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

1) இக்கூறுவிலைக்கெனத் தயாரிக்கப்பட்ட கூறுவிலை கோரும் விண்ணப்பப் படிவங்களை ரூபா 500/- செலுத்தி எமது திணைக்களத்தில் 14.02.2011 வரையில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

2) மூடிய கூறு விலைகள் 14.02.2011ஆம் திகதி பிற்பகல் 2 மணி வரை எமது அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். தபால் மூலம் அனுப்புவதற்கு திணைக்கள முகவரியைப் பயன்படுத்தவும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறுவிலை" எனக் குறிப்பிடப்பட வேண்டும். தாமதமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

3) கூறுவிலைகள் 14.02.2011ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு திறக்கப்படும். விண்ணப்பதாரர்களது பிரசன்னம் எதிர்பார்க்கப்படுகின்றது.

பி.ஜோன்சன்,
மாகாண செயல் திட்டப் பணிப்பாளர்-NELSIP,
உள்ளூராட்சித்திணைக்களம், வடமாகாணம்.
T.P- 0263263855

அலுவலக முகவரி:
உள்ளூராட்சித் திணைக்களம், வடமாகாணம்,
முதியோர் இல்ல வளாகம்,
A9 வீதி, கைதடி,
யாழ்ப்பாணம்.

(பி/575535)

# மியன்மாரின் நாடாளுமன்றம் 20 ஆண்டுக்குப் பின் கூடியது

நேபீட்டா, பெப். 02

மியான்மர் வரலாற்றில், 20 ஆண்டுகளுக்குப் பின் கடந்த திங்கட்கிழமை முதல் முறையாக நாடாளுமன்றின் இரு அவைகளும் கூடின.

இந்த முதல் கூட்டத்தில், நாட்டின் புதிய அரசியல் சாசனம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. 50 ஆண்டுகளாக நாட்டில் நிலவி வந்த ராணுவ ஆட்சி முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டது. அதே நேரம், நாடு முழுவதும் நேற்று 14 மாகாண சட்டசபைகளும் முதன் முறையாகக் கூடின.

மியான்மரில் 1962இல் இருந்து ராணுவ ஆட்சி நடந்து வருகிறது. கடந்தாண்டு நவம்பர் 7 ஆம் திகதி, பொதுத் தேர்தல் நடந்தது. இதில், அவுங் சான் சூச்சியின் தேசிய ஜனநாயக லீக் கட்சி கலந்து கொள்ளவில்லை. தேர்தல் முடிவுகளில், ராணுவத் தலைமையால் இயக்கப்படும் ஐக்கிய ஒற்றுமை மற்றும் மேம்பாட்டுக் கட்சி பெரும்பான்மை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, கடந்த 20 ஆண்டுகளுக்குப் பின் முதன் முதலாக அந்த நாட்டு நாடாளுமன்றக் கூட்டம் தொடங்கியது. மொத்தம் 440 இடங்கள் கொண்ட கீழவையும், 224 இடங்கள் கொண்ட மேலவையும் ஒரே நேரத்தில் தொடங்கின. பெரும்பான்மையான இடங்களில் யு.எஸ்.டி.பி. கட்சி உறுப்பினர்கள் அமர்ந்திருந்தனர். அவுங் சான் சூச்சி கட்சி தேர்தலில் பங்கேற் காததால் அதன் உறுப்பினர்கள் யாரும் இடம் பெறவில்லை. கூட்ட நடவடிக்கைகளைப் பார்வையிட பத்திரிகையாளர்கள், அரசியல் நிபுணர்கள், பொதுமக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

கேமரா, மொபைல் போன், கணினிகள் உள்ளிட்ட பிற இலத்திரனியல் பொருள்களை இங்கு கொண்டு வர தடை விதிக்கப்பட்டது. இந்த முதல் கூட்டம், இரண்டு வாரங்களுக்கு நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டின் 14 மாகாண சட்டசபைகளும் முதன் முறையாகக் கூடின. அவற்றிலும் பெரும்பான்மை உறுப்பினர்களாக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே இடம் பெற்றனர். (ம)

# இந்திய வம்சாவழிப் பெண்ணுக்கு இங்கிலாந்தில் மேயராகும் வாய்ப்பு

லண்டன், ஜன. 02

இங்கிலாந்தில், இந்திய வம்சா வழியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு அங்குள்ள ஒரு மாநகராட்சியின் மேய ராகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதற்கான தேர்தலில் அவர் போட்டியிடுகிறார்.

இங்கிலாந்தில் ஏராளமான இந்திய வம்சா வழியினர் வசித்து வருகின்றனர். இவர்களில் பலர் அரசு உயர்பதவியில் உள்ளனர். இந்நிலையில் அந்நாட்டின் மிகப்பெரிய நகரங்களில் ஒன்றான லீசெஸ்டர்ஸ் மாநகராட்சியில் அதிக எண்ணிக்கையிலான இந்திய வம்சாவழி யினர் வசிக்கின்றனர். இந்த மாநகராட்சிக்கான மேயரை தேர்வு செய்வதற்கான தேர்தல் நடந்தது. இதில் தொழிலாளர்கள் கட்சியின் சார்பில் இந்திய வம்சா வழியைச் சேர்ந்த ரீட்டா பட்டேல் (வயது-51) எனும் பெண் போட்டியிடவுள்ளார்.

இவர் ஒரு தன் னார்வ தொண்டு நிறுவனத்தின் மேலாளராக உள்ளார். மகளிர் அமைப்புகளின் தலைவராகவும் உள்ளார்.

கடந்த 1970 ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்றார். லீசெஸ்டர்ஸ் நகரில் வெகு ஆண்டுகளாக தங்கி அங்குள்ள தன்னார்வ தொண்டு நிறுவ னத்தில் பல் வேறு பொறுப்புகளை வகித்துள்ளார்.

இவர் மேயராக தேர்வு செய்ய அதிக வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

# மாடியிலிருந்து விழுந்து இந்தியச் சிறுமி மரணம்

டுபாய், பெப். 02

ஜன்னல் திரையை மாட்டிக் கொண்டிருந்தபோது, நாற்காலி சரிந்ததால், 11 ஆவது மாடியில் இருந்து விழுந்த இந்தியச் சிறுமி, பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் அபுதாபியில் நிகழ்ந்துள்ளது.

கேரள மாநிலம், காசர்கோடு மாவட்டம் பெர்லா என்ற ஊரைச் சேர்ந்தவர் அப்துல் ரசாக். இவர், அபுதாபியில் கணினி கடைகள் வைத்து நடத்தி வருகிறார். இவரது மகள் அஸ்மா அப்துல் ரசாக் (வயது - 13). இவர், எட்டாம் வகுப்பு படித்து வந்தார். இவர்களது குடும்பம் அபுதாபியில் ஒரு அடுக்குமாடி குடியிருப்பில், 11ஆவது மாடியில் வசித்து வருகிறது. சம்பவத்தன்று, ஜன்னல் ஓரமாக திரை தொங்க விடுவதற்காக அஸ்மா முயன்றார். அப்போது, ஜன்னல் திறந்திருந் தது. அவர் நின்றுகொண்டிருந்த நாற்காலி திடீரென சரிந்ததால், அங்கிருந்து தலைக்குப்புற கீழே விழுந்து பலியானார். அவரது உடல், தற்போது அபுதாபியின் மத்திய வைத்தியசாலையில் உள்ளது. சட்டப்பூர்வ நடவடிக் கைகள் முடிந்தவுடன் அபுதாபியிலேயே அஸ்மா வின் இறுதிச் சடங்கு நிறை வேறும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

## வருகை...



குரோஷியா வந்திருந்த பொஸ்னியா, ஹெர்ஸிகோவினா நாட்டின் முக்கிய கட்சித் தலைவர் நெபோஜ்ஸா ராட்மோன்விக்கை (வலது), ஜாக்ரிப் நகர் அதிபர் மாளிகையில் வரவேற்றார் அந்த நாட்டு அதிபர் ஈவோ ஜோஸிபோவிக். (ம)

# முபாரக்கின் மனைவி லண்டனுக்கு ஓட்டம்

கெய்ரோ, பெப். 02

எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் நேற்று 8ஆவது நாளாக கலவரங்கள் வெடித்தன. ஜனாதிபதி முபாரக்கின் மனைவி சுஷானே (வயது - 69) லண்டனுக்கு தப்பிச் சென்றுவிட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆபிரிக்க நாடான எகிப்தில் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் (வயது - 82) பதவி விலக வலியுறுத்தி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஒட்டு மொத்தமாக ஜனாதிபதி முபாரக் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தினர். போராட்டம் கட்டுக்கடங்காமல் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கின் மனைவி சுஷானே (வயது - 69) லண்டன் தப்பி ஓடிவிட்டார் எனக் கூறப்படுகிறது. லண்டனில் இவர்களுக்குச் சொந்தமான ஆடம்பர பங்களா உள்ளது. இது ரூ.60 கோடி மதிப்புடையது. மனைவி சுஷானேயை தொடர்ந்து ஜனாதிபதி முபாரக்கும் திடீரென லண்டன் தப்பிச் செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (த)

# பொலிஸ் வாகனங்களை குறிவைத்து பாகிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல்

## பொலிஸ் அதிகாரி உட்பட அறுவர் பலி

பெஷாவர், பெப். 02

பாகிஸ்தானின் பெஷாவரில் திங்கட்கிழமை பொலிஸ் வாகனங்களை குறிவைத்து இரு தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இவற்றில் பொலிஸ்துறை துணைக் கண்காணிப்பாளர் (டிஎஸ்பி) உட்பட 5 பொலிஸாரும், பொதுமக்களில் ஒருவ ரும் உயிரிழந்தனர். 19 பேர் காயம டைந்தனர். இதில் இருவர் கவலைக் கிடமாகவுள்ளனர்.

பொலிஸ்துறை துணைக் கண்காணிப்பாளர் அப்துர் ரஷீத் கான் அலுவலகத்துக்கு காரில் சென்றுகொண்டிருந்தார். அப்போது தற்கொலைப்படை வீரர் திடீரென அவரது காரின் மீது பாய்ந்து தாக்குதல் நிகழ்த்தினார். இதில் வாக னம் வெடித்துச் சிதறியது.

சம்பவ இடத்திலேயே அப்துர் ரஷீத், அவரது பாதுகாவலர்கள் இருவர், சாரதி, அவரது காரில் பயணம் செய்த ஒருவர் ஆகியோர் உட்பட 5 பேர் உயிரிழந்தனர். தற்கொலைப்படை வீரர் உடல் சிதறி இறந்தார். இந்தச் சம்பவத்தின் போது அருகில் நின்ற சிலர் காயமடைந்தனர். பெஷாவ ரில் இந்தச் சம்பவம் நடந்த சிறிது நேரத்தில் மற்றொரு பொலிஸ் வாகனத்தை தீவிரவாதிகள் குறி வைத்து தாக்கினர். வீதியோரத்தில் வெடிகுண்டை வைத்து அதை ரிமோட் மூலம் வெடிக்கச் செய்தனர். இதில் ஒரு பொலிஸார் மட்டும் உயிரிழந்தார்.

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் தான் முக்கியமான சுரங்கப்பாதையை தீவிரவாதிகள் தகர்த்தனர். இந்நிலையில் அங்கு மீண்டும் தீவிரவாதிகள் தாக்குதலை நிகழ்த்தியுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தீவிரவாதத் தாக்குதலுக்கு எந்த ஓர் அமைப்பும் உடனடியாகப் பொறுப்பேற்கவில்லை. ஆனால் இது தலிபான்களின் கைவரிசையாகத்தான் இருக்கும் என்று பாதுகாப்புப் படை வீரர்கள் சந்தேகிக் கின்றனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து பெஷாவர் நகர் முழுவதும் தீவிரவாதிகளுக்கு எதிரான தேடுதல் வேட்டை துரிதப்படுத்தப்பட்டுள்ளது. தீவிரவாதிகளின் இதுபோன்ற செயலால் அவர்களுக்கு எதிரான நடவடிக்கை எவ்விதத்திலும் பாதிக்கப்படாது; நாட்டைக் காக்க உயிரையே கொடுக் கத் தயாராக இருக்கிறோம் என்று கைபர்-பகதுங்வா பிராந்தியத்தின் மூத்த அமைச்சர் பஷீர் தெரிவித்தார். (த)

# முதியவர் வாழும் அதிசய கிராமம்

மாட்ரிட், பெப். 02

ஸ்பெயினில் ஆல்மெடா டி லா கெஸ்டா என்ற கிராமம் உள்ளது. இது தலைநகர் மாட்ரிடில் இருந்து 100 மைல் தொலைவில் உள்ளது. இங்கு 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் மட்டுமே வசிக்கின்றனர். கடந்த 1940ஆம் ஆண்டில் இங்கு 500 குடும்பங்கள் இருந்தன. அப்போது பெரும்பாலானவர்கள் வேலை தேடி இங்கிருந்து வெளியேறினர். அதன் பின்னர் திரும்பவில்லை.தற்போது இங்கு 15 குடும்பங் களே உள்ளன. அவர்கள் அனைவரும் 65 வயது முதல் 70 வயதுக்கு மேல்தான் உள்ளனர். இதனால் அங்கு 40 வருடங்களாக புதிதாக குழந்தைகளே பிறக்கவில்லை.

இப்போது இங்கு இருப்பவர்களில் 65 வயதுக்காரர்களே வயது குறைந்த இளைஞர்களாக உள்ளனர். இது ஒரு வித்தியாசமான கிராமம் என அங்கு வாழும் 82 வயது முதியவரான ஆர்துரோ ரெகாகோ கூறுகிறார். (த)

# மொட்டை போட்ட காரணத்தால் தொழிலை இழந்தார் மாணவி

பிரிட்டன், பெப். 02

வினிபெக்கில் உணவுப் பரிமாறும் மற்றும் தொழில் புரியும் ஸ்டீபனி லொசின்ஸ்கி தலையை மொட்டை போட்டுக் கொண்ட காரணத்திற்காக வேலையி லிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தண்டனையை எதிர்த்து அவர் மனித உரிமை ஆணைக் குழுவுக்குச் சென்றார். ஆனால் அவரின் முறைப்பாடு ஏற்றுக் கொள்ளப்படாததால் அவர் திரும்பி வந்துவிட்டார்.

புற்றுநோயால் அவதிப்படும் தனது மாமனாருக்கு ஆதரவா கவே தான் மொட்டைப் போட் டுக் கொண்டதாக ஸ்டீபனி தெரிவித்துள்ளார். இப்போது அவர் விக் அணிந்துள்ளார். ஆனால் அவரின் தோற் றத்தை ஏற்றுக் கொள்ள முடி யாது எனக் கூறி முதலாளி வேலையிலிருந்து நிறுத்தி விட்டார்.

இதற்கு எதிராக அவர் மனித உரிமை ஆணைக்குழுவில் முறை யிட்டபோது, அவர் தானாகவே விரும்பி மொட்டைப் போட்டுக் கொண்டதால், அது ஒரு மனித உரிமைப் பிரச்சினையாகாது என்று கூறி விசாரணை நடத்த மறுத்து விட்டது.

21 வயதான இந்தப் பல்கலைக் கழக மாணவி தனக்கு இந்தத் தொழில் அவசிய மில்லையென்றும், வேறு ஒரு தொழிலை, தன்னால் தேடிக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்துள்ளார். (த)

## யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி

வருடாந்த இல்ல
மெய்வல்லுநர் போட்டி- 2011

திகதி: 2011.02.02. பி.ப.1.45
இடம்: கல்லூரி மைதானம்
தலைவர்: திரு.ச.சிவநேஸ்வரன்
(அதிபர்)

பிரதம விருந்தினர் : Dr.A. சிறீதரன் (பழைய மாணவன்)
(MBBS, MD, MRCOG, MSLCOG,
யாழ்.போதனா வைத்தியசாலை)

சிறப்பு விருந்தினர் : திரு.எம்.நடராஜா
(உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்)

கௌரவ விருந்தினர்: திரு.என்.விவேகானந்தராஜா
(செயலாளர், பழைய மாணவர் சங்கம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்

## Computer Express
**Institute of Information Technology**
No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422

### விசேட கட்டணக்கழிவுடன் புதிய பிரிவுகள் ஆரம்பம்

- Diploma in Microsoft Office 1000/= 3 Months
- Diploma in Desktop Publishing 1000/= 4 Months
- Diploma in Web Page Designing 1000/= 3 Months
- Diploma in Graphic Designing 1000/= 4 Months
- Diploma in Hardware Engineering 1000/= 3 Months
- Diploma in Auto CAD 1000/= 3 Months
- Diploma in Computer Science 1000/= 4 Months
- Honors Diploma in Computer Science 1000/= 3 Months

**Advances Courses**
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்,
வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி கொழும்பில் இருந்து வருகை தரும்
பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

Batch i -02.02.2011 9am or 3pm
Batch ii -04.02.2011 9am or 3pm
Batch iii -05.02.2011 9am or 4pm
Batch iv -06.02.2011 9am or 4pm

10.02.2011க்கு முன்
பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Monday to Friday 9Am to 3.30Pm
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Course Fee 1000/=

மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்...

கம்பனிக்கணக்குகளை உள்ளடக்கி முன்னணி Accounting Software களினூடாக
**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Book + MYOB
(5 User)
Tally Accounting Package
Tally Date மாற்றலாமா?? முடியும்..... - 10Am
Course Fee - 1000/=
ஆரம்பம் :
05.02.2011
06.02.2011 - 2 Pm

## கொவிசெத
உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்
792
சீட்டிழுப்பு திகதி
31.01.2011

எழுத்து: N
வெற்றி இலக்கங்கள்: 33 36 51 67

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 11,808,295.20 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 18 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 341 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 667 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 16557 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 9520 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 235696 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 37165 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 10,202,720.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 12,345,615.20

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவுதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**தேசிய லொத்தர் சபை**
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk

## வீதியின் மிக மோசமான நிலை

தென்மராட்சி,பெப்.2

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ கரையலயாபரணம்கோட்டை வீதியில் கடந்த வருடம் நிர்மாணிக்கப்பட்ட மதகு ஊடாக வாகனங்கள் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அப்பகுதி மக்களால் மதகின் மேல் மணல் பறித்து வாகனப் போக்குவரத்துக்கு உதவி வருகின்றனர். உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு மதகினுள் வைக்கப்பட்டுள்ள 'கொங்கிறீற்' குழாய் உடையும் முன்னர் புனரமைக்குமாறு கோரியுள்ளனர். (ஒ-207)

## மகோற்சவம்

யாழ்ப்பாணம்,பெப்.02

கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதி திருவருள் மிகு ஸ்ரீ சிவமகாகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் மகோற்சவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 20 நாள்கள் அம்பாளுக்கு சிறப்புப் பூஜைகள் அபிஷேகங்களும் இடம் பெறும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வாகன பூஜையுடன் மங்களகரமாக விழா நிறைவு பெறும்.

எதிர்வரும் பங்குனி மாதம் 2 ஆம் திகதி சிவராத்திரி அன்று பால் காவடி, தீர்த்தக்காவடி போன்றவற்றை எடுக்கலாம்.

(ற-313)

## தமிழ் சங்கத்தில் பொங்கல் விழா

வெள்ளவத்தை இந்துசமய கலாசார வளர்ச்சி பணிமன்றம் நடத்தும் பொங்கல் விழா எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 4மணியளவில் கொழும்பு தமிழ் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ற-9, 236)

## நன்றி தெரிவிக்கின்றோம்

எம்மால் 29.01.2011 இல் தவறவிடப்பட்ட பெறுமதிமிக்க நகையை தாலிக்கொடி கண்டெடுத்து எம்மிடம் ஒப்படைத்த நாமகள் வீதி, கொக்குவில் கிழக்கு கொக்குவிலைச் சேர்ந்த பெயர் குறிப்பிட விரும்பாத

**வறுமையிலும் செம்மையாக வாழும் தம்பதியினருக்கு**

எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொருளின் உரிமையாளர்.

## O/L தகமையுடன் மருத்துவத்துறையுள் புகும் வாய்ப்பு

**"CERTIFIED MEDICAL ASSISTANT"(An US Curriculum)**

சான்றழிக்கப்பட்ட மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி புதிய பிரிவிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.(Batch -#3)

CMA US Curriculum

மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி (பிரிவு03)

A pathway for Private Nursing

Quality Assured

தனியார் வைத்தியசாலைகளில்,பல்தேசிய மருந்து தயாரிக்கும் நிறுவனங்களில் Nursing Staff,Admins, Medical Sales Rep,Marketing Rep போன்ற வெற்றிடங்களை உடன் நிரப்புவதற்கான 6 மாத கால கல்வி நெறி.



After O/L
6 Months Training

MBBS வைத்திய விரிவுரையாளர்களால் லாவா வைத்தியசாலையில் செயல்முறையுடன் கற்பிக்கப்படும் மருத்துவ பயிற்சி நெறி.

City & Guilds Qualified

Lava Hospitals — பயிற்சியின் பின் வேலை உறுதிப்படுத்தப்பட்டது.

தகமைகள் : **O/L** 4 பாடங்கள் சித்தி,நேர்முகப்பரீட்சை மூலம் அனுமதி. குறிப்பிட்ட ஆசனங்கள் மட்டுமே.

பதிவுகளுக்கு முந்துங்கள். விபரங்கள் நேரடியாக மட்டும் வழங்கப்படும்

**Knowledge Universe®**
Malaysian College of Business and IT
Tel: 0777302882 |# 75,Temple Road,Jaffna | www.kugroup.info
லவா வைத்தியசாலை மேல்மாடி

உ
சிவமயம்

## காரைநகர் திண்ணபுரம் அருள்மிகு சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வர பெருமான் (ஈழத்துச் சிதம்பரம்) தேவஸ்தானம்
*(காரைநகர் சிவன்கோயில்)*

## புனர்பாலஸ்தாபன விஞ்ஞாபனம்



**சிவநேயச் செல்வர்களே!**

நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் தை மாதம் 21 ஆம் நாள் (04.02.2011) வெள்ளிக்கிழமை அவிட்ட நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 6 மணி தொடக்கம் 7 மணி வரை உள்ள மகரலக்கின கோதூளிகா சுபமுகூர்த்தத்தில் ஸ்ரீசௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரப் பெருமானுக்கும் அருள்மிகு ஐயனாருக்கும் ஏனைய பரிவார தேவர்களுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நிகழத் திருவருள் பாலித்துள்ளது. அடியார்கள் அன்றும் முதல் நாளும் நிகழும் கிரியைகளைக் கண்டு தரிசித்து வெகுவிரைவில் மஹாகும்பாபிஷேகம் நிகழப் பிரார்த்தனை செய்வீர்களாக.

### கிரியாகால விபரம்

*03.02.2011 தைமாதம் 20 ஆம் நாள் வியாழக்கிழமை நண்பகல் 12 மணி முதல் விநாயக வழிபாடு, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், வாஸ்து சாந்தி, மிருத் சங்கிரகணம், அங்குரார்ப்பணம், இரட்சாபந்தனம், கும்பஸ்தாபனம், கலாகர்ஷனம், யாகபூஜை, அக்கினி காரியம், கும்பம் யாகசாலா பிரவேசம், ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, திருமுறைப் பாராயணம், விபூதி பிரசாதம் வழங்கல்*

*04.02.2011 தை மாதம் 21 ஆம் நாள் வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணி முதல் விநாயக வழிபாடு, யாக பூஜை, ஹோமம், மஹா பூர்ணாகுதி தீபாராதனை, 6.45 மணிக்கு பாலஸ்தாபன மஹா கும்பாபிஷேகம் தச தரிசனம், விசேட பூஜை, திருமுறைப் பாராயணம், விபூதி பிரசாதம் வழங்கல்.*

*ஈழத்து தலைசிறந்த சிவாச்சாரியார்கள் கலந்து சிறப்பிப்பார்கள்.*

*அடியார்கள் பால், தயிர், இளநீர், பூவகை போன்ற சிவத் திரவியங்களை வழங்கி சிவபெருமான் திருவருள் பெற்றுய்வீர்களாக.*

தேவஸ்தான ஆதீனகர்த்தாக்கள்
ஆண்டி ஐயா அம்பலவி முருகன்,
முருகேசு சுந்தரலிங்கம்.

திண்ணபுரம்,
காரைநகர். (110231)

## யாழ்ப்பாணம் மாநகர சபை

### வெற்றுக்காணி பொறுப்பேற்றல் சம்பந்தமான அறிவித்தல்

ஆதன இல.567, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

*யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, வட்டாரம் 14 இல் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு மேற்குப் பக்கமாக ஆதன இலக்கம் 567 இற்குரிய ஆதனம் பராமரிப்பின்றி பற்றைகள் வளர்ந்து சுகாதாரத்துக்கு கேடு விளைவித்தும் நுளம்புப் பெருக்கத்துக்கு ஏற்ற வகையிலும் இருப்பதனால், இதனை யாழ்ப்பாணம் மாநகர சபை 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நுளம்புப் பெருக்கத் தடைச் சட்டத்தின் பிரகாரம் அபிவிருத்திச் செய்யத் தீர்மானித்துள்ளது.*

*இவ்வாதனத்தின் மீது எவராவது உரிமைகொண்டாட இருப்பின் 15.02.2011 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் மாநகர சபையுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். தவறின் ஆதனம் யாழ்ப்பாணம் மாநகர சபையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு பரிபாலிக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.*

திருமதி யோ.பற்குணராசா,
முதல்வர்.
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

(சி-575556)

## J/Skandavarodaya College Chunnakam

**Annual Inter House Athletic Meet - 2011**

Date :- 03.02.2011 (Thursday)
Venue :- College Grounds
Time:- 1.00 p.m
President :- Mr.Aru.Thirumurugan (Principal)

***Chief Guest***
**Mr.S. Pathmanathan**
(Consultant Plantation, President OSA Colombo.)

***Special Guest***
**Mr. S.Jeyananthan**
*(Coconut Development Officer - Jaffna District)*

Prize distribution Mrs. Rajeswary Pathmanathan

**All are Cordially Invited**

Kandarodai, Chunnakam. — Principal, Staff& Students.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



**அமரர்**
**வைத்திலிங்கம் செல்வநாயகம்**
*(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்)*

இகம்: 25.11.1928
பரம்: 23.12.2009

அன்பின் திருவுருவே பண்பின் சிகரமே
பாசத்தின் திருவிளக்கே-
அன்பால் அரவணைத்து
துன்பம் எல்லாம்- துடைத்தெறிந்து
தூய நல்வாழ்வு தந்தீர்
துயரத்தில் நாங்கள் இன்று - துடைத்தெறிய
நீங்கள் இல்லை
மறைந்தது ஓராண்டு மறக்குமோ- எம்
இதயம் என்றும் நூறாண்டு.

*பிள்ளையார் கோயிலடி,*
*வடலியடைப்பு,*
*பண்டத்தரிப்பு.*

குடும்பத்தினர்.

## உங்கள் நினைவுகள் சுமந்த நான்காம் ஆண்டில்



**அமரர் சூசைப்பிள்ளை வேதநாயகம்**

அநித்திய வாழ்வின் கோலங்கள் களைந்து
கர்த்தரின் சமுகத்தில் அடைக்கலம் புகுந்து
நித்தியவாழ்வில் நின்றிளைப்பாறும் அப்பாவே
உங்கள் நினைவுகள் எம்முள்ளத்தில் நீங்கா
நினைவுகளாகித் தொடர்கின்றது.

*இல. 671, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

**குடும்பத்தினர்.**

## பஸ்ஸிலிருந்து வீசப்பட்ட சிறுமி

தென்மராட்சி,பெப்.2

பஸ் திடீரென நிறுத்தப்பட்டதால் பஸ்ஸினுள் தாய் அருகில் நின்ற சிறுமி வாசல் ஊடாக தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார்.

கடந்த வார இறுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மீசாலையைச் சேர்ந்த சு.அபிராமி (வயது 4) என்னும் சிறுமியே காயமடைந்தவர் ஆவார். (207)

## சைக்கிள் யாருடையது?

சுன்னாகம் பிரதேசத்தில் கடந்த மாதம் 17 ஆம் திகதி அநாதரவான நிலையில் கிடக்கக் காணப்பட்ட சைக்கிளை உரியவர் பெற்றுக்கொள்ளுமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கண்டெடுக்கப்பட்ட சைக்கிள் (300366) பொலிஸாரால் நீதிமன்றில் வழக்கின் சான்றுப்பொருளாக ஒப்படைக்கப்பட்டு இதுவரை எவரும் உரிமை கோராத நிலையில் உள்ளது. உரியவர்கள் பொறுப்பேற்குமாறு மன்று கேட்டுள்ளது. (ஒ-10)

## அபிராமிப்பட்டர் விழா இன்று பருத்தித்துறையில்

யாழ்ப்பாணம்,பெப்.2

பருத்தித்துறை, கோட்டுவாசல் சண்டிகா பரமேஸ்வரி ஆலயத்தில் அபிராமிப்பட்டர் விழா இன்று பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பி.ப. 3 மணிக்கு பூஜை வழிபாடுகள் நடைபெற்று அபிராமிப்பட்டர் பாடல்கள் இசைக்கப்படும். (ஜ-10)

## க.பொ.இரத்தினத்தின் அஞ்சலி நிகழ்வுகள் இன்று வேலணையில்

யாழ்ப்பாணம்,பெப்.2

கிளிநொச்சி, ஊர்காவற்றுறை தொகுதிகளின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழறிஞருமான பண்டிதர் க.பொ. இரத்தினத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அஞ்சலி நிகழ்வும் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது வேலணை இல்லத்தில் நடைபெறும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களும், கல்விமான்களும், பிரமுகர்களும் கலந்து கொண்டு அஞ்சலி உரைகளை நிகழ்த்தவிருக்கின்றனர். (ஜ-10)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.2

நீர்வேலி, சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கி, அச்சுவேலிக் கிளைமுகாமையாளர் ரி.புவனேந்திரன் ஆகியோர் கலந்துகொள்வர். (ஜ-10)

***

கோப்பாய், பெப்.2

வேலணை மத்திய கல்லூரி (நவோதய பாடசாலை) வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை அதிபர் பி.அருணகிரிநாதன் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக விஜயா என்ரர்பிரைசஸ்ஸின் நிர்வாக இயக்குநர் எஸ்.குகநாதன் கலந்துகொள்வார். (ஒ-27)

## உடன் விற்பனைக்கு

மேடைத் தராசு (500Kg) உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 4925102
312, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## NURSARY TEACHER தேவை (முன்பள்ளி ஆசிரியர்)

NURSARY கற்பித்தலில் பயிற்சி பெற்றவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

T.Phone - 0777313672

## மரண அறிவித்தல்

### *சிவக்கொழுந்து அருட்பிரகாசம்*



(இணுவில் கிழக்கு, வங்கியடி)

இணுவில் கிழக்கு, வங்கியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து அருட்பிரகாசம் நேற்று (01.02.2011) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - சின்னத்தங்கத்தின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இரத்தினம் ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், சாந்தினி வாமதேவன் (லண்டன்), சுகந்தினி ஞானகுமார் (லண்டன்), முதாகரன் (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும் வாமதேவன், ஞானகுமார், லதா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2011) புதன்கிழமை பி.ப ஒரு மணிக்கு இணுவில் சிவகாமி அம்மன் கோயிலடி மருமகன் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*இ. சிவலோகநாதன் (லோகர்- மருமகன்).*

சிவகாமி அம்மன் கோயிலடி,
இணுவில் கிழக்கு. *(110228)*

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப்பட்ட எம் அன்புத் தெய்வத்தின்*

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் மலர்வு: 11.06.1948
விண்ணில் உதிர்வு: 02.02.2009

அமரர் **கந்தையா சுப்பிரமணியம்** (மூர்த்தி)

ஆண்டு இரண்டு உருண்டோடிய போதும் அன்பின் அணிகலனாக
பாசத்தின் உறைவிடமாய் விளங்கி எமையெல்லாம் வழி நடத்தி
அன்பையும் அரவணைப்பையும் காட்டி வளர்த்து
எமக்கெல்லாம் வழிகாட்டியாய் இருந்த எமது அன்புத் தெய்வமே!
எத்தனை ஆண்டுகள் சென்றிடினும் நித்தமும் உங்கள் நினைவுகள் நிழலென
எங்களுடன் தொடர்ந்து வரும்

*என்றும் உங்கள் நினைவுடன் வாழும்*
*மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள் - ஸ்ரீபாவன்,*
*பி.நிவேதிகன், க.விருத்திகன்.*

02 ஆம் வாய்க்கால்
மருதநகர், கோவிந்தன் கடைச் சந்தி,
கிளிநொச்சி.

## 31 ஆம் நாள் நினைவு ஆராதனையும் நன்றி நவிலலும்



பிறப்பு: 1918.02.19
இறப்பு: 2011.01.07

**திருமதி அக்னேஸ் கணபதி**

*கடந்த 07.01.2011 இல் காலமான எமது தாயாரின் ஆத்ம சாந்தி இரங்கல் திருப்பலி நாளை (03.02.2011) வியாழக்கிழமை காலை 6.15 மணிக்கு புலோலி சாரையடி ஆரோக்கிய அன்னை ஆலயத்திலும் 06.02.2011 ஞாயிறு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உறவினர், நண்பர்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம். தாயாரின் இறுதி நிகழ்வில் கலந்தும், தொலைபேசி மூலம் துயர்பகிர்ந்தவர்களுக்கும் ஜேர்மனியில் இரங்கல் திருப்பலி பூஜை செய்த ஜோறிஸ் (Joris) குடும்பத்துக்கும் நீர் கொழும்பில் இரங்கல் திருப்பலி செய்த 'சேர்பிபெர்னாண்டோ' குடும்பத்தினருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட தீபஜோதி ச.ச.நிலையத்தினருக்கும் மற்றும் எமக்குப் பல வழிகளிலும் உதவி செய்த அனைவருக்கும் நன்றிகள்.*

*இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்கவும்*

கூவில்,
புலோலி தெற்கு, புலோலி.

*க.ஜெயதேசன் (மகன்).*

# பெண்களுக்கான பூப்பந்தாட்டம் சனியன்று மானிப்பாய் இந்துவில்

வலி - வடக்கு, பெப். 02

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான பெண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்தில் முன்னணிப் பாடசாலைகள், வளம் மிக்க பாடசாலைகள் பல இருக்கின்றபோதிலும் மிகவும் குறைந்த எண்ணிக்கையான பாடசாலைகள் மட்டுமே இப்போட்டிகளில் கலந்துகொள்கின்றன.

இப்போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

உடுவில் மான்ஸ் வித்தியாலயம், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, இளவாலை புனித கன்னியர் மடம் மகா வித்தியாலயம், பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை, மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி, ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி.

விலகல் முறையில் நடைபெறும் இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும் அணிகள் மாவட்ட மட்டப் போட்டிகளில் விளையாடத் தகுதி பெறும். (த-86)

# கிளிநொச்சியில் இன்று மரதன் ஓட்டப் போட்டி

வலி வடக்கு, பெப். 02

கிளிநொச்சி, கனகபுரம் மகா வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு இன்று புதன்கிழமை காலை 6.30 மணிக்கு ஆண்கள், பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் எம்.குணராசா தலைமையில் இடம்பெறும் இப்போட்டிகளில் ஆண்களுக்கான போட்டிகள் ஆனையிறவில் இருந்து ஆரம்பமாகி கனகபுரம் மகாவித்தியாலயத்தில் முடிவடையும் 15 கிலோமீற்றர் தூரத்துக்கான போட்டியாகவும், பெண்களுக்கான போட்டி 08 கிலோமீற்றர் தூரத்தினைக் கொண்ட போட்டியாகவும் அமையும்.

கடந்த பல வருட கால இடைவெளிக்குப் பின்னர் ஆண்கள், பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டிகள் கிளிநொச்சியில் நடைபெற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-86)

## உதைபந்தாட்டப் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

வலி வடக்கு, பெப். 02

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளத்தினால் இளையோருக்கான அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் பாடசாலை அணிகளுக்கு இடையே வருடாந்தம் நடத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

13, 15, 17, 19 வயதுப் பிரிவுகளுக்கு இடையே இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

வலய மட்டம், மாவட்ட மட்டங்களில் வெற்றிபெறும் அணிகள் தேசிய மட்டத்தில் விளையாடத் தகுதி பெறும்.

இப்போட்டிகளில் விளையாட விரும்பும் பாடசாலை அணிகள் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ம.பேட்டி பனிஸ்ரருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-86)

## கரப்பந்தாட்டப் பயிற்சி முகாம்

வலி-வடக்கு, பெப். 02

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டப் பயிற்சியாளர்களுக்கான பயிற்சி முகாம் ஒன்று இலங்கை கரப்பந்தாட்டச் சங்கத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட கரப்பந்தாட்டக் கழகத்தினால் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 16ஆம், 17ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இப்பயிற்சி முகாமில் அகில இலங்கை மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்றுனர்கள் கலந்துகொண்டு உரிய பயிற்சிகளை வழங்கவுள்ளார்கள்.

இப்பயிற்சி முகாமில் கலந்துகொள்ளவிரும்பும் கரப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர்கள் எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கச் செயலாளர் க.மனோகரன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பங்களை செயலாளர், 186/26 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பும் படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-86)

### சாதனைக்குச் சொந்தக்காரர்கள்...



உடுவில் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டியில் வெற்றியீட்டிய இல்லத்துக்கு கல்லூரி அதிபர் திருமதி சிறானி மில்ஸ் வெற்றிக் கிண்ணம் வழங்குகிறார்.

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 02

காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வியாழக்கிழமை பி.ப. 1 மணிக்கு வித்தியாலய அதிபர் க.சுந்தரலிங்கம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் நல்லதம்பி பரமசிவம் கலந்துகொள்வார்.

* * *

வலி-வடக்கு, பெப். 02

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் ஏ.சிறீதரனும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராசாவும், கௌரவ விருந்தினராக கல்லூரி பழைய மாணவர் சங்கச் செயலாளர் என்.விவேகானந்தராசாவும் கலந்துகொள்ளவுள்ளார்கள். (த-86)

# ஆட்டங்களின் முடிவுகள்

வலி - வடக்கு, பெப். 02

'டயட்ட கிருல' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வட மாகாண வலைப்பந்தாட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் அரையிறுதி ஆட்டத்தின் முடிவுகள் வருமாறு:-

வடமராட்சி சென் தோமஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விளையாட்டு அணிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் பல்கலைக்கழக அணி 42:01 புள்ளிகள் என்ற அடிப்படையில் சென் தோமஸ் விளையாட்டுக் கழகத்தை வென்றது.

தெல்லிப்பழை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் யூனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 33:04 புள்ளிகள் என்ற அடிப்படையில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தை வென்றது. (த-86)

## கலந்துரையாடல்

வலி - வடக்கு, பெப். 02

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான 2011ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் தலைமையில் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் 2011ஆம் ஆண்டுக்கான விளையாட்டு அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளமையால் அனைத்து விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-86)

# புதிய அவதாரம்

இந்திய கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்த், புதிய அவதாரம் எடுத்துள்ளார். உலக கோப்பை அணியில் இடம் பெறாத இவர் எஸ்-36 இசைக்குழுவை ஆரம்பித்துள்ளார்.

இந்திய அணியின் இளம் வீரர் ஸ்ரீசாந்த். சமீபத்திய தென்னாபிரிக்க டெஸ்ட் தொடரில் சிறப்பாக செயற்பட்ட இவருக்கு, உலகக் கோப்பை அணியில் இடம் கிடைக்கவில்லை. இதனால் சோர்ந்து இருந்த இவர், தற்போது எஸ்-36 என்ற இசைக்குழுவை ஆரம்பித்துள்ளார். இதில் எஸ் என்பது ஸ்ரீசாந்த் என்பதையும், 36 என்பது இவரது ராசியான ரீ-சேட்டையும் குறிக்கும். இந்தக் குழுவில் பின்னணி பாடகர் மது பாலகிருஷ்ணன், தீபக் வாரியர் உள்ளிட்ட பலர் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் குழுவின் முதல் நிகழ்ச்சி நேற்று முன்தினம் கொச்சியில் நடந்தது. இதில் உலகக் கோப்பை தொடரில் பங்கேற்கும், இந்திய அணியை உற்சாகப்படுத்தும் விதத்தில், இவர் எழுதிய ஹலோ ஷேர் பங்கே... எனத் தொடங்கும் இந்திப் பாடலை மேடையில் பாடி அசத்தினார். தவிர, அன்புள்ள அழகே... என்ற பாடல் உட்பட பல தமிழ் பாடலையும் பாடினார். காமினி என்ற இந்திப்படத்தின் பாடலுக்கு நடனமாடி, ரசிகர்களை உற்சாகப்படுத்தினார்.

இதுகுறித்து ஸ்ரீசாந்த் கூறுகையில், இந்தக்குழுவில் இணைந்து பாடல்கள் எழுதுவது, பாடுவது, நடனம் ஆடுவது, பியானோ உள்ளிட்ட இசைக்கருவிகளை வாசிப்பது என அனைத்தையும் கொஞ்சம், கொஞ்சமாக செய்யவுள்ளேன். ஏனெனில் என்னைவிட சிறந்தவர்கள் இதில் உள்ளனர். நான் அவர்களுக்கு ஆதரவாக மட்டும் இருப்பேன் என்றார்.

இந்தக்குழு டூபாயில் முறைப்படி அறிமுகம் செய்யப்படவுள்ளது. அதற்கு முன்பாக இந்தியாவில் பெங்களூர், மும்பை, சண்டிகரில் பல நிகழ்ச்சிகள் நடத்த முடிவு செய்துள்ளனர். டூபாய் நிகழ்ச்சியில், தென் இந்தியா மற்றும் பாலிவுட் நட்சத்திரங்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (-15)

## பாகிஸ்தான் அணியின் தலைவர் யார்?

உலகக் கோப்பை பாகிஸ்தான் அணியின் தலைவர் யார் என்பது, எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி அறிவிக்கப்படுகிறது.

உலகக் கோப்பை தொடரில் பங்கேற்கும் பாகிஸ்தான் அணி, தலைவர் இல்லாமல் சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இதற்கு பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர்கள் இன்சமாம், வாசிம் அக்ரம் உட்பட பலர் எதிர்ப்பு தெரிவித்தனர். இதுகுறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் இசாஜ் பட் கூறுகையில், பாகிஸ்தான் அணியின் கேப்டன் யார் என்பதை, எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி அறிவிப்போம், என்றார்.

இதனிடையே அணியின் தலைவராக அப்ரிடியை தேர்வு செய்ய, 94 சதவீதம் பேர் ஆதரவு தெரிவித்துள்ளதாக, பாகிஸ்தானின் முன்னணி செய்தி நிறுவனம் எடுத்த கருத்துக்கணிப்பில் தெரிய வந்துள்ளது. (-15)

# முன்னுக்கு வந்தது பாகிஸ்தான் சோர்ந்து விட்டது நியூஸிலாந்து

இறுதிவரை பரபரப்பு. யார் வெற்றி பெறுவது தீர்மானிக்க நீடித்தது நேரம். பாகிஸ்தான் தனதாக்கிக் கொண்டது வெற்றியை. பரிதாபம் நியூஸிலாந்தின் நிலமை. தொடர்கின்றன தோல்விகளின் சோகம்.

நான்காவது போட்டி நேற்று. நடந்தது மக்கீலன் பார்க்கில். சுற்றினர் நாணயத்தை. வென்றது நியூஸிலாந்து. வந்தது களத்துக்கு துடுப்பெடுத்தாட.

குப்தில்-கௌவ் ஜோடி தொடக்கியது ஆட்டத்தை. அதிரடியாய் தொடங்கினர் ஆட்டம். குப்தில் அதிரடி கிளப்ப,கௌவ் அடக்கி வாசிக்க இணைப்புத் தொடர்ந்தது. வகாப் றியாஸ் வந்தார் ஊடறுப்புத் தாக்குதலுக்கு. தாக்குதலை தொடக்கி விட்டார் இவர். முன்னரங்கங்கள் தாக்குப்பிடிக்கவில்லை நீண்ட நேரம். இதனால் உட்புகுந்தது பாகிஸ்தான்.

கௌவ்,ரெயிலர்,ஸ்ரைரீஸ் வீழ்ந்தனர் எளிதில் பாகிஸ்தானிடம். 79/5 இக்கட்டான நிலைமை. மீட்க கைகொடுத்தனர் பிராங்கிலின் - பிரண்டன் மக்குலம்.

பதில் தாக்குதல் பலமாய் கொடுப்பதற்காய் தயாராகினர் இவர்கள். மெதுமெதுவாய் சேர்த்தனர் ஓட்டம். பிராங்கிலின் அடித்தார் அரைச்சதம். அணி மீண்டது பாரிய தாக்குதலிலிருந்து. பதில் தாக்குதல் தொடங்கவே திருப்பித் தாக்கியது பாகிஸ்தான். தலைவரே நேரடியாகக் களம் புகுந்து வீழ்த்தி விட்டார். அப்பிரிடியின் தாக்குதலில் அரைச் சதத்துடன் விடைபெற்றார் பிராங்கிலின். பிரண்டன் மக்குலமும் முப்பத்தியேழு ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். இறுதியில் நாதன் மக்குலமும் தலைவர் வெக்டோரியும் இணைந்து ஆடினர். நாதன் மக்குலம் அதிரடியாய் கலக்கினார். ஓட்ட விகிதம் ஏறியது. அதற்கு இணைகொடுத்தார் வெக்டோரியும். நாதன் மக்குலம் அரைச்சதம்.

ஐம்பது ஓவர்கள் நிறைவில் 262/7. தன்வீர், உமர் குல் வாரி வழங்கினர் ஓட்டங்களை. வகாப் றியாஸ் பெருமை சேர்த்தார் அணிக்கு. மூன்று விக்கெட்டுகள் அவரது கணக்கில்.

பதிலுக்குத் தொடங்கினர் ஆட்டம். பரவாயில்லாத ஆட்டம் ஆரம்பம். வந்தனர் நின்று ஆடினர். சீராய் பவிலியனும் திரும்பினர். இடையில் வந்த ஒருவர் மட்டும் நிலைத்துக் கொண்டார் இறுதி மட்டும். வேறு யாருமல்ல நம்பிக்கை நட்சத்திரம் மிஷ்பா-உல்ஹக். மறுமுனைக்கு வருபவர்கள் நிலைக்கவில்லை.

இதனால் ஆட்டம் பரபரப்பானது. எதிர்பார்த்த அப்பிரிடியும் கைவிட ஆட்டத்தின் போக்கே மாற்றம். மாறிய ஆட்டத்தையும் அதிரடியால் மீட்டெடுத்தார் மிஷ்பா. இருந்தும் மிஸ் பண்ணி விட்டார் சதத்தை. ஒரு ஓவர் மீதமிருக்கையில் இரண்டு விக்கெட்டுகள் எஞ்சியிருக்கையில் வந்தது வெற்றி பாகிஸ்தானுக்கு. ஸ்ரைரீஸ் மூன்று விக்கெட்டுக்கள் சாய்த்தார். இருப்பினும் நியூஸிக்கு போதவில்லை அவை.



வெற்றிக்கு அழைத்த மிஷ்பா ஆட்டத்தின் நாயகன். (-15)

## கல்கத்தா ஆட்டம் பெங்களூரில் ஐ.சி.சி. அறிவிப்பு

இந்தியா-இங்கிலாந்து மோதும் உலகக் கோப்பை போட்டி, பெங்களூரில் நடக்கிறது. சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் இதனை உறுதி செய்தது.

இந்தியா, இலங்கை, பங்களாதேஷில் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் நடக்கவுள்ளது. இதில் கொல்கத்தா, ஈடன் கார்டன் மைதானத்தில் மொத்தம் நான்கு போட்டிகள் நடக்க இருந்தன. ஆனால் மைதானத்தில் கட்டுமானப் பணிகள், நிறைவு பெறாத காரணத்தால், எதிர்வரும் பெப்ரவரி 27 இல் இங்கு நடக்க இருந்த இந்தியா, இங்கிலாந்து அணிகள் இடையிலான போட்டியை, வேறு மைதானத்தில் நடத்த சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் முடிவெடுத்தது.

இதுகுறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்று வெளியிடப்பட்டது. இதனால் கல்கத்தா ரசிகர்கள் பெரும் ஏமாற்றத்துக்குள்ளாகியுள்ளனர்.



17 நாள்களே

உதயன் உலகக்கிண்ண கொண்டாட்டம் உங்களுடன்

உலகக்கிண்ணப் போட்டிகள்.
எதிர்பார்க்கின்றோம் உங்கள் எழுத்துக்களை.
பார்த்த அனுபவங்கள். ரசித்த போட்டிகள்.
எழுந்த எண்ணங்கள். எழுதுங்கள்....
எழுதுங்கள்..... எழுதிக் குவியுங்கள்.
சிறந்ததற்கு உண்டு பரிசு .

"உலகக் கிண்ண வாசகர் கணை"
தபால் உறையின் இடது மேல் மூலைக்குறிப்பு.
உதயன்.
361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

# ரெனிஸ் தரவரிசை: கிம், லீ முன்னேற்றம்

மெல்போர்ண், பெப். 02

ஆஸ்திரேலிய ஓபின் ரெனிஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்றதன் மூலம் பெல்ஜியம் வீராங்கனை கிம் கிளிஸ்டர்ஸ் தர வரிசையில் 2ஆவது இடத்துக்கு முன்னேறி உள்ளார்.

ஆஸ்திரேலிய ஓபின் ரெனிஸ் தொடர் முடிந்தபின்னர் வெளியிடப்பட்டுள்ள தர வரிசைப்பட்டியலில், பெல்ஜியத்தின் கிம் கிலிஸ்டர்ஸ் (8515 புள்ளிகள்) 3ஆவது இடத்திலிருந்து 2ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். அரையிறுதியில் தோல்வி கண்டாலும் டென்மார்க் வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி (8655 புள்ளிகள்) தொடர்ந்தும் முதலிடத்தில் நீடிக்கிறார்.

2ஆவது இடத்தில் இருந்த ரஷ்ய வீராங்கனை ஸ்வோனரிவா 3ஆவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளார்.

அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் 5ஆவது இடத்தில் இருந்து 6ஆவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளார். இறுதிப் போட்டி வரை முன்னேறிய சீன வீராங்கனை நா லீ 7ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

காயம் காரணமாக அண்மைக்காலமாக ரெனிஸ் போட்டிகளில் பங்கேற்காமலிருக்கும் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் 4ஆவது இடத்திலிருந்து 12ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

ஆண்கள் பிரிவு தரவரிசையில், ஆஸ்திரேலிய ஓபின் ரெனிஸ் தொடரின் காலிறுதியில் தோற்றாலும் ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் தொடர்ந்து முதலிடத்தை வகிக்கிறார்.

சுவிட்ஸர்லாந்து வீரர் ரோஜர் பெடரர், ஆஸ்திரேலிய ஓபன் சம்பியன் ஜோகோவிச் (செர்பயா), சோடர்லிங் (சுவீடன்), அன்டி முர்ரே (இங்கிலாந்து) ஆகியோர் முறையே 2 முதல் 5 இடங்களைப் பெற்றுள்ளனர்.

*முதல் 10 இடங்களைப் பிடித்த வீராங்கனைகள்*

| | |
|---|---|
| ✱ கரோலின் வோஸ்னியாக்கி | 8655 |
| ✱ கிம் கிளிஸ்டர் | 8515 |
| ✱ வெரா ஸ்வோனறெவா | 7405 |
| ✱ பிரான்ஸெஸ்கா ஷியாவொனே | 5055 |
| ✱ சமந்தா ஸ்ரோஸர் | 4862 |
| ✱ வீனஸ் வில்லியம்ஸ் | 4645 |
| ✱ நா லீ | 4450 |
| ✱ ஜெலீனா ஜான்கோவிக் | 4385 |
| ✱ விக்ரோரியா அழரென்கா | 3935 |
| ✱ அக்னீஸ்கா ரட்வன்ஸ்கா | 3340 |



கிம் கிளிஸ்டர்ஸ்

நா லீ

## கண்ணீர் அஞ்சலி

### பண்டாரி மகாதேவன்



சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக எமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் ம.சுதர்சன் அவர்களின் தந்தையாரான பண்டாரி மகாதேவன் அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிரதேச செயலகம்,
வலிகாமம் கிழக்கு,
கோப்பாய். (சி-575558)

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.

## மரண அறிவித்தல்கள்

### வைத்தீஸ்வரன் பரமேஸ்வரி
(இளைப்பாறிய ஆசிரியை)



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தீஸ்வரன் பரமேஸ்வரி நேற்று முன்தினம் (31.01.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - லக்சுமிப்பிள்ளை தம்பதியரின் மகளும், கனகம்மா, இராசேந்திரன் ஆகியோ ரின் அன்புச் சகோதரியும் கேதாவரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற டிலேஸ்வரன் மற்றும் கபாலீஸ்வரன் (சுவீடன்) ஆகியோரின் அன்புத்தாயும் சபாநாயகம், காலஞ்சென்ற பாமினி மற்றும் ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், சாரு, அலெக்ஸ், சகிரா, டிலக்சன், ஜெனகன், ஜெனுசன், ஜெனுசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'அலெக்ஸ்',மலர்மை,
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

தகவல்:
கனகம்மா சகோதரி,
(இளைப்பாறிய ஆசிரியை.)

### சிவபாக்கியவதியம்மா துரைசிங்கம்



இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியவதியம்மா துரைசிங்கம் அவர்கள் 29.01.2011 சனிக்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வத்துரை - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரைசிங்கம் இராசையா அவர்களின் அன்பு மனைவியும், யசோதை, யானகி, ஜெயராம் ஆகியோரின் அன்புத்தாயாரும், நரேஸ்குமார், நகுலன், தாரிணி ஆகியோரின் அன்பு மாமியும், அர்ச்சனா, அசோகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற கதிர்காமசுந்தரலிங்கம் மற்றும் சிவேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சுந்தரவேல், சிவசோதிமதியம்மா மற்றும் சிவமங்களவதியம்மா - சோதிமுருகேசு, சந்நிதிவேல், சிவமலர் - சண்முகபாரதி, நடராசபதி, சிவமனோகரி - சிவபாலன், சிவயோகேஸ்வரி - கணேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளைமறுதினம் (04.02.2011) வெள்ளிக்கிழமை பி.ப 5.00 - 9.00 மணிவரை OGDEN, FUNERAL HOMES, 4164 SHPPARD AV|ENUE EAST, CANADA இல் வைக்கப்பட்டு அவ்விடத்திலேயே 05.02.2011 சனிக்கிழமை மு.ப 8 மணி தொடக்கம் 10 மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று பின்னர் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(110238) நகுலன் (கனடா)

## பாசமலர்களின் நீங்காத நினைவலைகள்

முதலாம் ஆண்டு

தோற்றம் 12 . 05 . 1944 — மறைவு 27 . 12 . 2009



செல்லையா சுந்தரலிங்கம்
காரைநகர்
திதி - மார்கழி ஏகாதசி

இரண்டாம் ஆண்டு

தோற்றம் 21 . 07 . 1941 — மறைவு 26 . 01 . 2009



சுந்தரலிங்கம் பரமேஸ்வரி
திதி - தை அமாவாசை

**ஓராண்டு என்ன ஈராண்டு என்ன**
**எத்தனை ஆண்டுகள் சென்றாலும்**
**உங்கள் நினைவலைகள் மாறுமோ**
**எங்கள் நெஞ்சம் மதில்**

உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கரம்பகம், மிருசுவில். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி திருப்பதி செல்லத்துரை

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் (வீரமாகாளி அம்மன் கோயிலடி), வசிப்பிடமாகவும் 22 A, கற்குழி, வவுனியாவைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி திருப்பதி செல்லத்துரை நேற்றுமுன் தினம் (31.01.2011) திங்கட்கிழமை இரவு சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முதலியார் கதிரவேலு - வள்ளியம்மை தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்ற செல்லத்துரையின் (உள்ளகக் கணக்காய்வாளர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சதானந்தத்தின் (புகையிரதக் கட்டுப்பாட்டாளர்) அன்புச் சகோதரியும் வைரமுத்து (முன்னாள் உரிமையாளர், திருப்பதி ஹார்ட்வெயார்ஸ்), தனபாலசிங்கம் (லண்டன்), பரராஜ சிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் திலகவதி, மாலினி (லண்டன்), ராணி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் றிஜிக்காந்த், ரவீந்திரநாத், மிராளன், சுதர்ஷனா, வித்தியா, யாழினி, ரஜீவன், விஜிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அஸ்வினி, விதுஷன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கற்குழி வவுனியா இல்லத்தில் நாளை (03.02.2011) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:** **024 222 1608**

**தகவல்:** **வைரமுத்து (மகன்).**

## கணினி வகுப்புகள்
T.p. 0212224459, 0774192275

Certificate in internet & E-mail.
Chatting, Dawnloding, web & E-mail Address Creating Face Book Video Call, Net Call என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும் ( Personal & Group Classes) பரீட்சை முடிவின் பின்னர் பெறுமதியான சான்றிதழ்களைப் பெறலாம்.
(8 Students in a Batch) (DURATION 2 WEEKS)

STR COMPUTER SYSTEM
384, NAVALAR ROAD, NALLUR, JAFFNA

## மணமகள் தேவை

1977இல் பிறந்த இந்து குருநில பூரட்டாதி நட்சத்திரம் 8இல் செவ்வாய் வியாழனுடன் கூடிய கிரகபாவம் 19 உடைய அரச தொழில் புரியும் பட்டதாரி மணமகனுக்கு படித்த, அரச தொழில் புரியும் மணமகளை எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு - 0750419697, 0778249725

## விற்பனைக்கு

11 அடி நீளமும் 7 அடி உயரமும் உடைய இரும்பு சுருக்குகேற் விற்பனைக்கு உண்டு.
(சி-575561) தொடர்பு - 0771298201

## வேலையாள்கள் தேவை

1. விற்பனையாளர்கள்
2. கணக்காளர்
3. கிறாப்பிக்ஸ் டிசைனர்
4. கிளினிங் வேலையாள்கள் (ஆண்கள், பெண்கள்)

தொடர்பு - கொளிக்கா கலர் லாப்
021222 3493.
(110256)

## REPAIRING
T.P. - 0212224459
0774192275

சகல விதமான கணினிகளும் ஒரே நாளில் உடனுக்குடன் பழுது பார்த்துக்கொடுக் கப்படும். உங்கள் கணினிகளை வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ ஒரோ நாளில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்

STR COMPUTER SYSTEM
348, NAVALAR ROAD
NALLUR, JAFFNA.

## SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்

A/L (2013) கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகளுடன் ENGLISH,

* இணைந்த கணிதம்
* G.கண்ணன் B.sc
* CHE-M.A. றிசேஜன் B.sc (Hons)
* PHY ஆசிரியர்

* B.st B.S பசில் B.B.A
* ACC S.தவா B.com (Hons) (ACCA)
* ECON - V.குணவேல் B.BA
* TAMIL - S.சிவா, B.A (Hons)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நிர்மலாதேவி தயாளா
(ஆசிரியை, யாழ்ப்பாணக் கல்லூரி)



வட்டு தெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நிர்மலாதேவி தயாளா (ஆசிரியை, யாழ்ப்பாணக் கல்லூரி) கடந்த 30.01.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தயாளாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆனந்தரட்ணம் (முன்னாள் ஆசிரியர், யாழ்ப்பாணக்கல்லூரி) தம்பதியரின் அன்பு மகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (31.01.2011) திங்கட்கிழமை அவுரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை. (110248)

தகவல்:
இ. தயாளா (கணவர்)

### சின்னத்தம்பி துரைராசா (ராசதுரை)

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி வடக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி துரைராசா (ராசதுரை) நேற்று (01.02.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பராசத்தியின் அன்புக் கணவரும் ஜனத்தவதனி, ஆனந்தகௌரி, ஆனந்தகுமார், பத்மநாதன், காலஞ்சென்ற விவசுப்பிரமணியம் மற்றும் அனுசமலர், இராசகுமாரி, இராசகுமார், சத்தியானந்தன் ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2011) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் திப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்,
தொலை.இல 0770711326

தகவல்:
து.ஆனந்தகுமார் - மகன்,
(பெரியம்மா)

### விஸ்வலிங்கம் சிவசாமி (சுருவில்)



வேலணை மேற்கைச் சேர்ந்த, சுருவிலைப் பிறப்பிடமாகவும், சரவணையை வசிப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையைத் தொழிலிடமாகவும் கொண்டவிஸ் வலிங்கம் சிவசாமி (முன்னாள் வர்த்தகர், New Cheap Side Wellawatte) அவர்கள் நேற்று (01.02.2011) செவ்வாய்க்கிழமை அதிகாலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுருவில் தம்பதியரின் பேரனும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - விசாலாட்சி தம்பதியரின் மகனும், சரவணையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் மூத்தமருமகனும், காலஞ்சென்ற விஜயலஷ்சுமியின் அன்புக் கணவரும், ராகுலன் (விக்னேஷ் -லண்டன்) பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற திருமதி மங்கையர்க்கரசி சிவசம்பு மற்றும் விநாயகமூர்த்தி, சிவசிதம்பரப்பிள்ளை (சிதம்பரநாதன்) திருமதி சுந்தராம்பாள் - சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரரும், சண்முகப்பிரியாவின் அன்பு மாமனும், கஜன், காசினி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் திருமதி திலகவதி - குமாரசாமி, சிவராஜா, வேலாயுதபிள்ளை, சண்முகரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் (02-02-2011, 03-02-2011) புதன்கிழமை, வியாழக் கிழமை மு.ப 10 மணியளவில் இறுதிக்கிரியைகள் நிறைவுபெற்றபின் பொரளை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சி. ராகுலன் (மகன்)
சி. திருவரங்கம் (திரு- மருமகன்)
7, Eswary Road,
Pamankade, Colombo - 06
T.P:-0776116267, 0757769959.

தகவல்:
நா. சண்முகரட்ணம்
கொக்குவில்

(110247)

## தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலைய பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள்

தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையப் பரீட்சை மண்டபத்தில் ஜி.சீ.ஈ (சா/த) 2009 (பழைய பாடத்திட்டம்) பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளை வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். இதன்படி ஜே.எல்.சசிமா, கே.ரமேஸ், பி.சுபாஜினி, ஏ.ஜி. தயான்தா, எம்.சிந்துஜா, ரீ.கௌசிகா, எம்.ரஞ்சன், பி.ஏ.டென்சினா, ஈ.மேரி துஸ்யந்தினி, எம்.அனோஜா, ஆர்.ஜீவிதன், எம்.ரி.கனிஸ்ரன், பி.லெனின்ராஜ், ரி.பிரவஞ்சினி, ஏ.அசோக், ஏ.இலக்கியா, ஐ.ரதீபன், எஸ்.பிரசாத், ஆர்.சுதாகர், எஸ்.கே. பெனடிற், எஸ்.ஜீவராஜ், எம்.ஜெயர்சோக், ஜி.நிரோசா, எஸ். ஆர்.பிரசாத், ஏ.எல்.மேரி ரிசோத், எஸ்.மேரி சரண்யா ஆகிய 26 பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளே பரீட்சை ஆணையாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவர்கள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.(ஒ-10)

## சுதந்திரதின...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டாடும் அளவுக்கு நாட்டில் சுதந்திரம் இல்லை. பயங்கரவாதத்தை ஒழித்த பொன்சேகா சிறையில் உள்ளார். ஆனால், பயங்கரவாதத்திற்குத் தலைமை வகித்த கே.பி. படையினரின் பாதுகாப் புடன் வடக்குக்குச் சென்றுள்ளார்.

மறுபுறம் ஊடகங்கள் தாக்கப்படு கின்றன. 'லங்கா ஈ நியூஸ்' இணையதள அலுவலகம் தீ வைத்து முற்றாகச் சேதப்படுத்தப்பட்டுள்ளது. இது அரசுக்குக் களங்கம் ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட செயல் என்று அரசு கூறுகின்றது. அவ்வாறு கூறி அரசு தனது பொறுப்பில் இருந்து விலக முடியாது.

இது முதல் சம்பவம் அல்ல. இதற்கு முன் சிரச நிறுவனம் தாக்கப்பட்டது. லஸந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டார். பிரகீத் எக்னலிகொட கடத் தப்பட்டார். சியத்த நிறுவனம் தாக்கப்பட்டது. இவை தொடர்பாக எந்தவொரு விசாரணைகளும் நடத்தப்படவில்லை. குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. (ஒ-சி)

## 'லங்கா ஈ நியூஸ்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒப்பந்த அடிப்படையில் குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர் ஒருவரே நேற்று (நேற்று முன்தினம்) இவ்வாறு கைது செய்யப்பட்டார். குறித்த சந்தேக நபர் வெல்லம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

பொதுமகன் ஒருவரிடமிருந்து கிடைக்கப்பெற்ற இரகசிய தொலைபேசி அழைப்பையடுத்தே இவர் கைதுசெய்யப்பட்டார். மற்றுமொருவர் பிரதேசத்தை விட்டுத் தலைமறைவாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணையை ஆரம்பித்துள்ளனர். - என்றார்.

அதேவேளை, 'லங்கா ஈ நியூஸ்' அலுவலகம் தாக்கப்பட்டமையை ஐ.நா. உட்பட பல ஊடக அமைப்புக்கள் கண்டித்துள்ளன. அத்துடன், குறித்த சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஊடகவியலாளர்களின் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்றுப் பகல் லிப்டன் சுற்றுவட்டத்தில் நடை பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## இலங்கையருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தூதரகம் எடுத்துள்ளது.

எகிப்தின் ஜனாதிபதி ஹுஸ்னி முபாரக் பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து அங்கு ஆர்ப்பாட்டங்களும் வேலை நிறுத்தங்களும் நடந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சி)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளிட்ட ஆயிரக்கணக்கானவர்களுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குவார். இந்தத் தினத்திலாவது ஜனாதிபதி சரத் பொன்சேகாவுக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும்.

பொன்சேகா சிறையில் அடைக்கப்பட்ட நிலையில், கொண்டாடப்படும் இந்தச் சுதந்திர தினக் கொண்டாட்டம் பூரணமான கொண்டாட்டம் அல்ல. இதை நாட்டு மக்கள் விரும்பவில்லை. இத்தினத்திலாவது சரத் பொன்சேகா விடுதலை செய்யப்படவேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர்.

பொன்சேகாவின் விடுதலையை வலியுறுத்தி நாம் 4ஆம் திகதி இரவு 7 மணிக்கு புஞ்சி பொரளை சந்தியில் தீப்பந்தங்கள் மற்றும் விளக்குகள் சகிதம் ஆர்ப்பாட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளோம்.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பொன்சேகாவின் விடுதலையை விரும்பும் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம். - என்றார். (ஒ-சி)

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதால் மீட்புப் பணிகளில் ஈடுபடுமாறு படையினர் கேட்கப்பட்டுள்ளனர்.

**வான்கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன**

மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு குளங்களின் வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன. இதன்படி நவன்சிரி குளத்தின் இரண்டு வான்கதவுகள் நான்கு அடி உயரத்துக்கும், உன்னிச்சைக் குளத்தின் 4 வான்கதவுகள் ஏழு அடி உயரத்துக்கும் திறந்துவிடப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய்க் குளத்தின் சில வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளதுடன் அம்பாறை மாவட்டத்திலும் வான்கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

**போக்குவரத்து தடை**

கந்தளாய் குளத்தின் வான்கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளமையால் திருகோணமலை - மூதூருக்கிடையிலான போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளன. குச்சவெளி, வெருகல்,தம்பலகாமம் ஆகிய பிரதேசங்களிலும் போக்குவரத்துகள் ஸ்தம்பித்துள்ளன.

மட்டக்களப்பில் மண்டூர் மட்டக்களப்பு, மட்டக்களப்பு - படுவான்கரை ஆகிய வீதிகளின் தரைவழிப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதுடன் சில வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என்று எமது மட்டக்களப்பு மாவட்ட செய்தியாளர் தெரிவித்தார்.

அதேவேளை, கடந்த 15 நாட்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் தொடர்சியாகப் பெய்த அடைமழையால் 10லட்சத்துக்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர். 18 பேர் பலியாகினர். 3ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன.

அத்துடன் 50ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்கள் முற்றாக அழிந்துள்ளதுடன் மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட கால்நடைகளும் பலியாகியமை அறிந்ததே.(ஒ-சி)

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி).

அரசு தரப்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நீர்ப்பாசன அமைச்சர் நிமல் சிறிபால டி.சில்வா, சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, சசின்டிவாஸ் குணவர்தன எம்.பி. ஆகியோர் கலந்துகொள்கின்றனர். ( ஒ-சி)

## வீட்டுக்கிருத்திய ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

மலர்வு 03 • 07 • 1932



உதிர்வு 13 • 01 • 2011

திருமதி
### பசுபதிப்பிள்ளை இராசம்மா

கடந்த மார்கழி 30ஆம் நாள் வியாழக்கிழமை (13.01.2011) இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (02.02.2011) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கே.கே.எஸ்.வீதி.
கோண்டாவில் மேற்கு.
கோண்டாவில்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சுப்பிரமணியம் முத்தாச்சி



காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும், புலவன் வளவு, சின்னாலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் முத்தாச்சி 28.01.2011 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், நல்லதம்பி-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சிவபாலன் (யா/யாழ்ற்ரன் கல்லூரி), கோபாலன் (கனடா) ஆகியோரின் பாமிகு தாயாரும், உமா, ரேணுகா, ஆகியோரின் பாசமிகு மாமியாரும், திவ்யப்பிரியன், திபானா, தபிஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2011) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'புலவன் வளவு'
சின்னாலடி, காரைநகர்.

(110233)

தகவல்:
சிவபாலன் (மகன்)

## மரண அறிவித்தல்கள்

### வேலன் கணபதி

(ஊழியர் - ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் மந்திகையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் கணபதி நேற்றுமுன்தினம் (31.01.2011) திங்கட்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலன் தம்பதியரின் அன்பு மகனும் பூரணத்தின் பாசமிகு கணவரும், ஜெகதீஸ்வரன், திருவருட்செல்வன், பாமதேவன், கேதீஸ்வரி, பாஸ்கரன் (நோர்வே), செந்தூரன், கிருஷ்ணவேணி, இலங்கேஸ்வரன், தாட்சாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2011) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலோலி பொதுநூலகம் அருகில்.
மந்திகை.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சுப்பிரமணியம் கனகம்மா



வீமன்காமம், மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் சுதுமலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் கனகம்மா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் – தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் நடேசபிள்ளை (முன்னாள் சிமெந்துக் கூட்டுத் தாபனம், காங்கேசன்துறை), புஸ்பராணி (ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி), சோதிலிங்கம் (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் சிவசக்தி, பரமேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் நிசாந்தி, துஜான் (லண்டன்), சாருஜன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2011) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை மேற்கு.
மானிப்பாய்.
தொ.பே.: 021 225 5376. 0776660523

தகவல்:
குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கௌரவ கலாபூஷணம்
விருதுபெற்ற எங்கள் அன்புக் குரிய
நாதஸ்வர மேதை
V.K.பஞ்சமூர்த்தி
அவர்கள் மேன்மேலும் விருதுகள்
பெற்று நல முடன் வாழ இறைவனை
வேண்டி வாழ்த்துகின்றோம்.

பொ.வரதராஜக்குருக்கள்,
வ.கேதீஸ்வர சர்மா,
வ.நகுலேஸ்வர குருக்கள்,
வ.திவாகரேஸ்வர குருக்கள்

வீரபத்திரர் கோயில்,
கல்வியங்காடு. (சி-575542)

Full time and Part time
**IT Lecturers wanted**
A walk-in interview for Full Time and Part Time IT Lecturers will be held on 05.02.2011 from 09.00 A.M. onwards @ the ICTM, Jet Motors, KKS Road, Chunnakam.
Please call 077 4290506 and fix your time slot!

Courses are starting from 09.02.2011
- Computerized Accounting Specialist
- Web Specialist
- Linux Specialist
- Information Specialist
- Networking Specialist
- & Other Diploma & Certificate courses

** Registrations can be done from 07.02.2011 @ the ICTM

THE INSTITUTE OF ICTM
Jet Motors,
KKS Road,
Chunnakam.
021 4908063
077 4290506
www.theictm.com

## நல்லதொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் பொருளாதார மேம்பாட்டிற்காக இந்தியா, சீனா போன்ற நாடுகள் உதவி வழங்கி வருவதால், மேற்கு நாடுகள் இலங்கைக்கான உதவிகளைக் குறைத்துள்ளன என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பிரிட்டனின் தெற்காசிய பிராந்திய ஆலோசகர் டேவிட் ஆஷ்லி , அபிவிருத்திக்கும் அரசியலுக்குமான இரண்டாந்தரச் செயலாளர் டொமினிக் வில்லியம்ஸ், பிரிட்டிஷ் தூதரகத்தின் அரசியல் உத்தியோத்தகர் அஷ்மா எட்றிஸ் மற்றும் சுவிஸ் தூதரகத்தைச் சேர்ந்த சஷ்யா முலர் ஆகியோரை உள்ளடக்கிய குழுவினர் நேற்று சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவினரை ஆயர் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின் போது இரு நாடுகளின் பிரதிநிதிகளும் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாண மக்களின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகவும், அபிவிருத்தி மற்றும் பொருளாதார செயற்பாடுகள் தொடர்பாகவும் ஆராய்வதற்காகவே நாம் இங்கு வருகை தந்தோம்.

இலங்கையில் யுத்தம் முடிவடைந்த பின்னர் எமது நாடுகள் பல்வேறுபட்ட மனிதாபிமான உதவிகளை வழங்கி இருந்தன. இருப்பினும் தற்போது இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு இந்தியா மற்றும் சீனா அதிகளவிலான பொருளாதார உதவிகளை வழங்கிவருவதனால் மேற்குலக நாடுகள் இலங்கைக்கான உதவிகளைக் குறைத்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் வெகுவிரைவில் பிரிட்டிஷ் தூதரகத்தின் கிளை திறந்து வைக்கப்படும். மற்றும் இங்குள்ள மக்களின் ஆங்கிலக் கல்வி விருத்திக்காக நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும்.

நடந்து முடிந்துவிட்ட விடயங்களை விடுத்து இனி வரப்போகும் விடயங்கள் பற்றிச் சிந்திப்போம் - என்றனர்.

(ஒ-15)

## ஐ.தேகவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாவலப்பிட்டி நகரசபை கலைக்கப்பட்ட சமயம் அது ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணியின் கட்டுப்பாட்டில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.நேற்றுக் காலை நடைபெற்ற இந்த வைபவத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல, மத்திய மாகாண சபை உறுப்பினர் சாந்தனி கோங் காகே ஆகியோர் கலந்துகொண்டனர்.

DISTANCE EDUCATION
MADURAI KAMARAJ UNIVERSITY
Ambiga Higher Education Centre
அறிவித்தல்
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் நேரடி இணைப்பாளர்களான கொழும்பில் இயங்கி வரும் எங்களது நிறுவனத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் NEW COLLEGE OF HIGHER STUDIES, No: 95, Ariyakulam Junction, Jaffna மட்டுமே. வேறு இணைப்பாளர் யாழ்ப்பாணத்தில் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். வேறு நபர்களிடம் செய்யப்படும் பதிவுகளுக்கு நாம் பொறுப்பல்ல.
Tel: 0112386722 Fax: 0112 433060 46, புதுச் செட்டித் தெரு, கொழும்பு-13

DMI
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
A/L - DAY CLASS
புவியியல் - N.ராஜ
* திங்கள் - தேசப்படங்கள்
* புதன் - புறவிசைகள்
* வெள்ளி - சுற்றுலாத் தொழில்
* புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

## மரண அறிவித்தல்

### கதிரவேலு குணசேகரம் (பேபி)



கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 21, றக்காலேன் சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு குணசேகரம் 30.01.2011 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - ஆச்சிமுத்து தம்பதியரின் புதல்வரும், பராசக்தியின் (பெற்றி) அன்புக் கணவரும், சுபாசினி (சுவிஸ்), பிரணவன் (AMT ரான்ஸ்போட் சேவிஸ்), பிரபாகினி (சோபா, லண்டன்), தனுசாந்தன் (லண்டன்), ஆகியோரின் அன்பு தந்தையும், றமேஸ் (சுவிஸ்), சேகர் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், அஸ்வின், அயினாஸ், அஸ்வினியா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற குணம், குணரத்தினம், குணசீலன், குணபாலன் (வவா), குணபாலசிங்கம் (குஞ்சுக்கிளி, லெபனான்), சந்திரசேகரம் (பிரான்ஸ்), இராஜசேகரம் (ஹொலண்ட்), செயக்குமார் (மோகன், ஹொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.01.2011) வியாழக்கிழமை காலை 8.30 தொடக்கம் மு.ப. 10.30 மணி வரை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*21, றக்கா லேன்,*
*சுண்டுக்குளி.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

தேசியக்கொடி விற்பனை
சகல அளவுகளிலும் தேசியக்கொடி விற்பனையாகிறது. மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம் - சாவகச்சேரி
222 9881 227 0003

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
A/L - DAYCLASS - PHYSICS
புலங்கள் - MON, WED - (4 - 5.30) P.M
வெப்பவியல் -TUE, THU - (5.30 - 6.30) P.M
By: K.SELVAN B.Sc. (Hons)

IBM Computers for Sale
(கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிகச்சிறந்த தரமானது)
Original IBM Think Center



Intel Pentium IV 3.20 GHZ
1 GB Ram 80 GB HD
LCD Monitor DVD Rom
(With Lock) நம்ப முடியாத விலையில் !!!
(ஞாயிறு விடுமுறை தினங்களிலும் எமது நிறுவனம் திறந்திருக்கும்)
Internet Browsing Center களுக்கும் அரச, தனியார் நிறுவனங்களுக்கும் உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் மிகவும் உகந்தது !!!
IBM System Keyboard,mouse Rs.22500/= இன்றே முந்துங்கள் !!!
IBM கணனி என்றால் No - 1 தரம் என்பது உலகறிந்த விடயம் !!!
அனேக அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் விரும்பி பாவிக்கப்படுவது!!!
நீடித்த பாவனைக்காலம் மிகக்குறைந்த மின்சாரத்தில் இயங்க கூடியது !!!
நெல்லியடியில் விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு :- 0777 110 862
(IBM - Original Think Center)

## மரண அறிவித்தல்கள்

### செல்வி மகாலிங்கசிவம் சுகந்தா



வரணி, கரந்தைக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட செல்வி மகாலிங்கசிவம் சுகந்தா நேற்று (01.02.2011) செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் மகாலிங்கசிவம் - லலிதாம்பிகை தம்பதியினரின் பாசமிகு மகளும் சுமேதா (ஆசிரியை, பயிலுநர் பாலர் பாடசாலை), மணிகண்டன் (GAQ, பேராதனை), மயூரன் (மாணவன் 2 ஆம் வருடம், யாழ்.பல்கலைக்கழகம்), மணிவண்ணன் (மாணவன், 2012 A/L வரணி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவானந்தராசாவின் (ஆசிரியர், வற்றாப் பளை மகா வித்தியாலயம்) மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2011) நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தறலப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரந்தைக்குறிச்சி மேற்கு,*
*குருக்கள் குடியிருப்பு, வரணி.*

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சிவபாதசுந்தரநார் பார்வதியம்மா



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் தெல்புரத்தை வசிப்பிடமாகவும் தற்போது இருபாலையில் வசித்து வந்தவருமான திருமதி சிவபாதசுந்தரநார் பார்வதியம்மா நேற்று (01.02.2011) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாதசுந்தரநாரின் (வித்துவான்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான குலவீரசிங்கம் - நாகமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - உதயவள்ளி தம்பதியினரின் அன்பு மருமகளும் மதிவாளன், விஜயலட்சுமி, மாதினி, காலஞ்சென்ற ஆறுமுகசிவம் மற்றும் இளவகன், நளினி, குமுதினி, காலஞ்சென்ற சேந்தன் ஆகியோரின் பாசமிகு தாயும் புஸ்பராணி, காலஞ்சென்ற பஞ்சலிங்கம், மகாலிங்கம் மற்றும் அமுதராணி, பரமேஸ்வரன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2011) புதன்கிழமை புத்தூரில் அமைந்துள்ள அவரது மகளின் இல்லத்தில் மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிந்திட்டி இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புத்தூர் மேற்கு,*
*புத்தூர்.*

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி யோகமலர் புண்ணியமூர்த்தி

(இளைப்பாறிய ஆசிரியை, யா/புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி)



கோப்பாய் வடக்கு, கலம்பரையினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகமலர் புண்ணியமூர்த்தி நேற்று (01.02.2011) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் புண்ணியமூர்த்தியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பையா - பூரணம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - கற்பகம் தம்பதியினரின் அன்பு மருமகளும் குமுதினி (பிரான்ஸ்), குகசீலன் (பிரான்ஸ்), புண்ணியசீலன் (U.K) ஆகியோரின் பாசமிகு தாயும் தேவானந்தன் (பிரான்ஸ்), ஜானகி (பிரான்ஸ்), சுரேஸ்வரி (U.K) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருவரங்கன் (U.K), தனுரங்கன் (U.K), நவியா (பிரான்ஸ்), இந்துஜா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சிவபாதசுந்தரன், சிவயோகநாதன், சிவபாலகுமாரன், காலஞ்சென்ற றஞ்சிதமலர் மற்றும் ஸ்ரீகரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகமணி, நகுலாதேவி, சாந்தேஸ்வரி, சிவயோகமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2011) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.